பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 08 செவ்வாய்க்கிழமை (23-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:27

## குர்திஷ் இனப் பழங்குடியினரால்

# மயக்கிப் பிடிக்கப்பட்ட சதாம் அமெரிக்காவுக்கு விற்கப்பட்டார்!

## கைது மர்மம் விலகுகிறது



லண்டன்,டிசெம்பர் 23

**பதவி கவிழ்க்கப்பட்ட ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனை அமெரிக்கப் படைகள் தங்கள் உளவுப் பிரிவின் திறமையால் கைதுசெய்தன என்று வெளியிடப்பட்ட செய்திகள் அனைத்தும் சுத்தப்பொய்.**

**மயக்க மருந்து கலந்த உணவினால் உணர்விழந்தநிலையில் இருந்த சதாமை, குர்திஷ் இனப் பழங்குடிப் படையினர் பிடித்து, பதுங்குகுழிக்குள் தடுத்துவைத்து, அமெரிக்கரிடம் பேரம்பேசி விற்றனர். - இவ்வாறு தெரிவிக்கும் புதிய தகவல்கள் தற்போது வெளியாகி வருகின்றன.**

மேற்குலக நாடுகளின் ஊடகங்கள் தற்போது வெளியிட்டுவரும் தகவல்களின் அடிப்படையில் சதாம் கைது மர்மத்தின் முடிச்சுக்கள் அவிழத் தொடங்கியிருக்கின்றன.

பிரிட்டனிலிருந்து வெளியாகும் 'சண்டே எக்ஸ்பிரஸ்', 'சண்டே ரைம்ஸ்' மற்றும் 'சிட்னி மோனிங் ஹெரால்ட்' ஆகியவையும் மத்திய கிழக்கு நாடுகளின் சில இணையத் தளங்களும் சதாம் கைது குறித்து புதிய தகவல்களை வெளியிட்டிருக்கின்றன.

அவற்றின் சாரம் வருமாறு:-

சதாமின் கடைசி ஒலிநாடாச் செய்தி நவம்பர் 16ஆம் திகதி அரபுத் தொலைக்காட்சி மூலம் வெளியுலகுக்கு ஒலிபரப்பப்பட்டது.

அதற்குச் சற்றுப் பின்னர் அல் ஜபர் பழங்குடி இனத்தவர் ஒருவரால் சதாம் காட்டிக்கொடுக்கப்பட்டார்.

அதிகாரத்தில் இருந்த சமயம் இந்த நபரின் மகளை, சதாமின் மகன் உதய் பாலியல் வல்லுறவு கொண்டு கெடுத்ததாகக் கூறப்படுகின்றது. இதனால், சீற்றமடைந்த அந்தப் பெண்ணின் கணவர் இச்சம்பவத்துக்

(16ஆம் பக்கம் பார்க்க)

### மருத்துவபீடச் செயற்பாடு வழமைக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் செயற்பாடுகள் அனைத்தும் நேற்றுத் திங்கட்கிழமை முதல் வழமைக்குத் திரும்பின.

மாணவர்கள், தாம் மேற்கொண்டு வந்த பகிஷ்கரிப்பைக் கைவிட்டதை அடுத்து வழமைநிலை திரும்பியது. மாணவர்கள் நேற்று விரிவுரைகளுக்குச் சமுகமளித்தனர். (ஓ-8)

## ஜப்பானின் புதிய தூதுவர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்

கிளிநொச்சி,டிசெ.23

ஜப்பானின் இலங்கைக்கான புதிய தூதுவர் ஜக்கியோ சுடா விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று முற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் புலிகளின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவனும் கலந்துகொண்டார்.

சந்திப்பின் பின்னர் இது குறித்து கருத்து வெளியிட்ட ஜப்பானிய தூதுவர் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுக்கும் ஜப்பான் அரசுக்கும் இடையில் நல்லுறவைப் பேணும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைக்கான ஜப்பானிய தூது

(16ஆம் பக்கம் பார்க்க)



ஜப்பான் தூதரை வரவேற்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்.

## சைவச் சிறுவர் இல்லம் இந்து சமயப் பேரவையிடம்

தென்மராட்சி,டிசெ.23

கைதடி சைவச்சிறுவர் இல்லம் மீண்டும் இந்துசமயப் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கான உத்தரவை சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்றுப் பிறப்பித்தார்.

சைவச் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இதனையடுத்து அந்த இல்லம் நீதிமன்றத்தால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு சாவகச்சேரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் முகாம் அமைக்கிறார்களா? அடியோடு மறுக்கிறார் கௌசல்யன்

மட்டக்களப்பு,டிசெ.23

மட்டக்களப்பு - புல்லுமலைக் கிராமத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தாங்கள் புதிய முகாம்களையோ, பதுங்குகுழிகளையோ, புதிய காப்பரண்களையோ அமைக்கவில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏ-5 வீதி திறக்கப்பட்டபோது அங்கு காணப்பட்ட புலிகளின் காவல் அரண்களே தற்போதும் உள்ளன. இந்த விவகாரத்தை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பெரிதுபடுத்துகிறது.

கடந்த 15ஆம் திகதி படையினருடன் நடைபெற்ற சந்திப்பின்போது இவ்விடயம் குறித்து தெளிவாக ஆராயப்பட்டது.

- இப்படி அவர் கூறினார்.

இதேவேளை -

மட்டக்களப்பு மாவட்டக் கண்காணிப்புக் குழுவின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இங்கு இராணுவ, புலிகள் தரப்புப் பிரதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட, பிரதேச செயலாளர்கள் ஒரு வாரம் கடமை பகிஷ்கரிப்பு

கொழும்பு,டிசெ.23

நாடு முழுவதிலுமுள்ள மாவட்ட பிரதேச செயலாளர்கள் நாளை 24ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை கடமைகளைப் பகிஷ்கரிப்பதெனத் தீர்மானித்திருக்கின்றனர். அரசுத்தரப்பு அரசியல்வாதிகள் பங்குபற்றும் கூட்டங்களில் அல்லது வைபவங்களில் கலந்துகொள்வதில்லை எனவும் அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

புளத்சிங்கள பிரதேச செயலாளர் பி.டி.சிறிவர்த்தனவைக் களுத்துறை மாவட்ட அரசுதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்கியதை ஆட்சேபித்தே இப்போராட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

பிரதேச செயலாளர்களின் இப்போராட்டத்துக்கு ஆதரவளித்து பிரதேச செயலக அதிகாரிகளும், ஊழியர்களும் நாளை தத்தமது அலுவல

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஆபாச சினிமா பார்த்தோர் சிக்கினர்!

யாழ்ப்பாணம்,டிசெ.23

பருத்தித்துறை, ஓராங்கட்டைப் பகுதியில் ஆபாச சினிமா பார்த்த ஐந்து இளைஞர்கள் கலாசாரம் பேணும் குழுவினரிடம் சிக்கினார்கள்.

நேற்று நண்பகல் ஒருமணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பிரஸ்தாப இளைஞர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்துவிடுவிக்கப்பட்டனர். (ஓ-3)

## குற்றச்செயல்களை ஒழித்துக் கட்ட நாடு முழுவதிலும் புதிய திட்டம் அமுல்!

### புதிய பொலீஸ்மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு,டிசெ.23

நாட்டில் குற்றச்செயல் புரிவோர் கவனமாக இருக்கவேண்டும் என்று புதிய பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா எச்சரிக்கை விடுத்திருக்கிறார். குற்றச்செயல்களை முற்றாக ஒழித்துக் கட்ட நாடு முழுவதிலும் இன்று முதல் புதிய திட்டம் அமுல்படுத்தப்படும் என்று அவர் பதவியேற்ற கையோடு அறிவித்தார்.

புதிய பொலீஸ்மா அதிபராக நேற்றுத் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட இந்திரா டி சில்வா செய்தியாளர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை பொலீஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட அவர், பொலீஸ் தலைமையகத்துக்குச் சென்று தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.

நாட்டில் குற்றச்செயல்கள் பெருகியுள்ளன. குற்றச்செயல்களை ஒழித்துக்கட்டும் திட்டம் வகுக்கப்பட்டு, நேற்று மாலை நாட்டிலுள்ள சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. குற்றச்செயல்களை முற்றாக ஒழித்துக்கட்டும் இப்புதிய திட்டம் இன்று முதல் அமுலுக்கு வரும் என்று பொலீஸ்மா அதிபர் கூறினார். திட்டத்தின் வெற்றிக்கு அவர்



பொது மக்களின் ஒத்துழைப்பைக் கோரினார்.

பொலீஸ் திணைக்களத்தில் கடமை

(16ஆம் பக்கம் பார்க்க)

### காரைநகரில் பதற்றம்!

காரைநகர்,டிசெ.23

காரைநகர், கருங்காலி கிராமத்தில் இருதரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பை அடுத்து பதற்றம் நிலவுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து பொலீஸார் அங்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். பொலீஸ் காவலும் அங்கு போடப்பட்டுள்ளது. கடற்படையினரின் ரோந்தும் அந்தப் பகுதியில் இடம்பெறுகின்றது. (ஓ-3-76)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சட்டவிரோதக் கருக்கலைப்பால் இரு பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு!

## சந்தேகத்தின் பேரில் வைத்தியர் கைது!

யாழ்ப்பாணம்,டிசெ.23

சட்டவிரோதக் கருக்கலைப்பால் இரு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்தார். இது தொடர்பாக வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த தர்மலிங்கம் ஜெயகுமாரி (வயது 32) என்ற குடும்பப்பெண்ணே கருக்கலைப்பால் உயிரிழந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை இப்பெண் மரணமடைந்தார். அப்போது மல்லாகம் பதில் நீதிவான் எஸ். வசந்தசேனன் மரணவிசாரணை மேற்கொண்டார். இந்தப்பெண் செங்கண்மாரி நோயால் பீடிக்கப்பட்டு மரணமானதாக விசாரணையில் சாட்சிகள் தெரிவித்தனர். அந்தச் சாட்சியங்களில் முரண்பாடுகள் இருந்ததைப் பதில் நீதிவான் கவனத்தில்கொண்டார். இதனையடுத்து, பிரேதபரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டது.

யாழ். போதனாவைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடந்தது. முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட கருக்கலைப்புக் காரணமாக அப்பெண் உயிரிழந்ததாகப் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இப் பெணணுக்கு கருக்கலைப்புச் செய்ததன் மூலம் அப்பெண்ணின் மரணத்துக்குக் காரணமானவர் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியர் ஒருவரை அச்சுவேலிப் பொலீஸார் கைது செய்தனர். தொண்டமானாறுப் பகுதியைச் சேர்ந்த அவரை நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் பொலீஸார் ஆஜர்படுத்தினர். அவரை அடுத்தமாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி மல்லாகம் நீதிமன்ற நீதிவான் திருமதி ச. இளங்கோவன் உத்தரவிட்டார்.

(ஒ-3)

# வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் ஜனவரிமுதல் வளியமுக்கமானி

## புதிதாகப் பொருத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.23

திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலையத்துக்கு புதிய வளியமுக்கமானிக் கருவி ஒன்று பொருத்தப்படவுள்ளது.

நிலையத்தின் அதிகாரி வே. புஷ்பநாதன் இந்தத் தகவலை தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் ஜனவரிமாத நடுப்பகுதியில், இந்த வளியமுக்கமானிக கருவியினைப் பொருத்துவதற்கு கொழும்பிலுள்ள தலைமை ஆராய்ச்சி நிலையம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

ஏற்கனவே, எமது நிலையத்தில் உள்ள வளியமுக்கமானியின் கணிப்பீடுகள் குறைவாகக் காணப்படுகின்றன. இதனாலேயே, புதிய கருவியைப் பொருத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

புதிதாகப் பொருத்தப்படவுள்ள வளியமுக்கமானி அதிசக்தி வாய்ந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம்-என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-7)

# வேகமாகச் செல்லும் மினிபஸ்கள் குறித்துத் தகவல் தந்து உதவுங்கள்!

## பொதுமக்களிடம் பஸ் உரிமையாளர் வேண்டுகோள்

வடமராட்சி,டிசெ.23

அபாயகரமான வேகத்தில் மினி பஸ்களைச் செலுத்தும் சாரதிகள் குறித்து பொதுமக்கள் தகவல் தந்து உதவவேண்டும்.

யாழ். மாவட்டத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் தலைமைச் செயலகம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தலைமைச் செயலத்தின் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்துள்ளதாவது:-

சில மினிபஸ்கள் ஒன்றையொன்று முந்திச் செல்வதற்காக அபாயகரமான வேகத்தில் செலுத்தப்படுகின்றன. இதனால், மோசமான விளைவுகள் ஏற்படுகின்றன. ஆகவே, போட்டா போட்டியிட்டு மினிபஸ்களை அபாயகரமான வேகத்தில் செலுத்துவதையும் போக்குவரத்து விதிகளை மீறி வாகனங்களை முந்திச் செல்வதையும் மினிபஸ் சாரதிகள் முற்றாகக் கைவிடவேண்டும்.

போட்டி அடிப்படையில் மினிபஸ்கள் ஒன்றையொன்று அதிக வேகத்தில் முந்திச் செல்வதை யாழ். மாவட்டத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் தலைமைச் செயலகம் தடைசெய்துள்ளது. இந்தத் தடையை மீறி மினி பஸ்களைச் செலுத்தும் சாரதிகள் குறித்து பொது மக்கள் எமக்குத் தகவல் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். யாழ்.- பருத்தித்துறை வீதி, 50/1 இலக்க முகவரியில் இயங்கும் எமது அலுவலகத்துக்கு நேரடியாகவோ 222 6924 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ பொது மக்கள் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

என்று பொ. கெங்காதரன் தெரிவித்தார்.

### மினிபஸ் சேவை நேற்று முடக்கம்

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் இடையே 750 தட இலக்கத்தில் மினிபஸ் சேவைகள் நேற்று இடம்பெறவில்லை. இதனால், வடமராட்சிப் பயணிகள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டனர்.

தனியார் பஸ் போக்குவரத்து நடைமுறை தொடர்பாக ஏற்பட்ட பிணக்குக் காரணமாகவே, இச் சேவை நேற்று முடங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இப்பிணக்குத் தொடர்பாக நேற்று மாலை வடமராட்சிச் சிற்றூர்திச் சங்கத்தினர் தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகத்தினருடன் பேச்சு நடத்தினர் என்றும் -

அந்தப் பேச்சில் காணப்பட்ட இணக்கப்பாட்டையடுத்து இன்று முதல 750 தட இலக்க மினிபஸ் சேவை வழமை நிலைக்குத் திரும்பிவிடும் என்றும்-தலைமைச் செயலக நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

(ஒ-15-173)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 2ஆம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சகல மாணவர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார். (எ-10)

## ஒளி விழா

கோப்பாய்,டிசெ.23

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உதவிப் பிரதேச செயலர் க.இராஜதுரை தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(எ-10)

## கரோல் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,டிசெ.23

சுண்டுக்குளி பரியோவான் தேவாலயத்தில் வருடாந்த கரோல் கீத வழிபாடு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது. (3)

## தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.23

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி இன்று செவ்வாய்க்கிழமை முதல் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கிராம மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கானைப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்டாஸ் கேட்டுள்ளார்.

# மலையகத்தில் 1,500 ஆசிரியர்கள் நியமனம்

## ஜனவரியில் விண்ணப்பங்கள் கோரப்படும்

### அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு,டிசெ.23

மலையகப் பாடசாலைகளுக்கு ஆயிரத்து 500 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களில் 185 பேர் பட்டதாரிகள். ஆயிரத்து 315 பேர் ஜி.சீ.ஈ உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள். இவர்களுக்கான விண்ணப்பங்கள் ஜனவரி மாதம் கோரப்படும். மேலும் மாகாண ரீதியாக ஆயிரம் ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது எனக் கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு கூறினார்.

சிங்களப் பாடசாலைகளில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கின்றனர். அதேவேளை தமிழ்ப் பாடசாலைகளில் 5ஆயிரத்துக்கும் மேல் ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கின்றன என்று புள்ளி விவரங்களின் மூலம் அறியமுடிந்தது.

ஆசிரியர்கள் பற்றாக்குறையால் விசேடமாக மலையகப் பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, முதற்கட்டமாக மலையகப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மலையகத்தில் மத்திய மாகாணத்திற்கு 70 பட்டதாரிகள், 825 ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தி அடைந்தவர்கள். சப்ரகமுவ மாகாணத்திற்கு 65 பட்டதாரிகள், 170 ஜி.சீ.ஈ. உயர் தரம், ஊவா மாகாணத்திற்கு 50 பட்டதாரிகள், 220 ஜி.சீ.ஈ. உயர்தரம், மேல் மாகாணத்திற்கு 65 ஜி.சீ.ஈ. உயர்தரம், தென்மாகாணம் 25 ஜி.சீ.ஈ. உயர்தரம், வடமேல் மாகாணம் 10 ஜி.சீ.ஈ. உயர்தரம். தகுதியுடையவர்கள் தெரிவு செய்து நியமிக்கப்படுவர்.

இவை தவிர மாகாண ரீதியாகவும் ஆயிரம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்த நியமனங்களால் மலையக தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறையை ஓரளவு குறைக்க முடியும்.

இவர்களுக்கான விண்ணப்பங்கள் அடுத்த ஆண்டு மாவட்ட ரீதியாகக் கோரப்படும். விண்ணப்பதாரிகள் அந்தந்த மாவட்டங்களில் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

எந்தவிதமான சிபாரிசுகளுக்கோ, அரசியல் தலையீடுகளுக்கோ இடமளிக்கப்படமாட்டாது. போட்டிப் பரீட்சையின் மூலமே தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர் - இவ்வாறு கல்வி அமைச்சர் கூறினார்.

# புத்தளம் பொலீஸ் துவக்குச் சூடு குறித்து விசேட பொலீஸ் குழு தீவிர விசாரணை

## சம்பவங்கள் இல்லை;வழமை நிலை திரும்பியது

புத்தளம்,டிசெ.23

புத்தளத்தில் கடந்த ஞாயிறன்று பொலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து சுதந்திரமான நீதியான விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்துறை அமைச்சின் செயலாளரைப் பணித்திருக்கிறார்.

இதனையடுத்துஉள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என். ஜுனைற், மூவர் கொண்ட விசேட பொலீஸ் குழு ஒன்றைப் புத்தளத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார். அக்குழு நேற்று விசாரணைகளை ஆரம்பித்தது.

பொலீஸ் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பெண் கொழும்பு வடக்கு வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார்.

ஞாயிறன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள், வீதி மறியல் ஆகியவற்றின் பின்னர் நேற்றுப் புத்தளம் பகுதியில் பூரண அமைதி நிலவியது. அலுவல்கள் வழமை போன்று நடைபெற்றன.

இதற்கிடையே, நேற்றுமுன்தினம் இரவு புத்தளம் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் விசேட மாநாடு ஒன்று நடைபெற்றது. புத்தளம் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வேகொடபொல, வண்ணாத்திவில்லு உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் எஸ் கொடித்துவக்கு, வன்னி புனர்வாழ்வுக்குத் துணைபுரியும் அமைச்சர் நூர்தீன் மசூர், முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ், பிரதேசசபை உறுப்பினர் எஸ். எச். எம். நியாஸ் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் அங்கு கருத்துத் தெரிவிக்கும் போது கூறியதாவது:-

"பொலீஸார் எந்த விடயத்திலும் அவசரப்பட்டு முடிவை மேற கொள்கின்றனர். இது உடனடியாகத் தடுக்கப்படல்வேண்டும். என்ன பிழை நடந்தாலும் அங்கு சென்று விசாரணை செய்த பின்பே எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமுடியும்.

'பொலஸார் நாகரிகமான முறையில் நடந்துகொள்ளவேண்டும். இவர்களின் செயலால் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்குவதற்கு வழிவகுக்கக்கூடாது. பொலீஸாரின் இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்'' - என்றார்.

பின்வரும் கோரிக்கைகள் மக்கள் சார்பாக பொலஸ் அதிகாரிகளிடம் முன்வைக்கப்பட்டன.

பொலஸாரின் துப்பாக்கியை ஹறிச் சாரதி பறித்தெடுத்தார் என்று புத்தளம் பொலஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். இது உண்மைக்கு மாறானது. இது வாபஸ் பெறப்படவேண்டும்.

இவ்வாதத்தைக் கிளப்பும் விதத்தில் பொலஸ் அதிகாரியும் ஏனைய பொலீஸாரும் பேசியிருப்பது அவர்கள் மன்னிப்புக் கோரவேண்டும்.

சுதந்திரமான, நியாயமான பூரண விசாரணை நடத்தப்படவேண்டும்.

தாக்குதல் நடத்திய பொலஸார் உடனடியாகக் கைது செய்யப்பட்டு, பொலஸ் பாதுகாப்பில் வைக்கப்படவேண்டும்.

-இவ்வாறு தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் மாகாண சபைகளுக்குத் தேர்தல்கள்

## ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,டிசெ.23

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் நியமனப் பத்திரங்கள் கோரப்படலாம். அந்த மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஏப்ரல் புத்தாண்டுக்கு முன்னர் நிறைவுசெய்வதென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரும், ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவருமான ஹரீம் பீரிஸ் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றின்போது இத்தகவல்களைத் தெரிவித்தார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிரதேச நிருபர்களுக்காக நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஹரீம் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

மக்கள் தொடர்பாடல் அமைச்சை ஜனாதிபதி மீண்டும் கையளிக்கும் எண்ணத்துடன் பொறுப்பேற்கவில்லை. எதிர்வரும் தேர்தல்களின் போது அரசியல் வன்செயல்கள் அதிகரிக்கமுடியும். அதனால், அவை குறித்து ரூபவாஹினி செய்தி மூலம் விரிவான பிரசாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

'புத்தாண்டில் ஆறு, ஏழு மாதங்கள் சென்ற பின்னர் அரசியல் வன்முறைகள் அதிகரிக்கமுடியும். விசேடமாக, மாகாண சபைத் தேர்தல் காலத்தில் அரசியல் வன்முறைகள் இடம்பெறலாம். எந்த ஒரு பேதமும் இன்றி அச்செய்திகளை அறிவிக்கவேண்டும் அவை குறித்து மக்களுக்கு அறிவூட்ட ரூபவாஹினி செய்திகள் தயார்.

அரசாங்க ஊடக நிறுவனங்களில் சுயாதீன தன்மை அற்றுப்போவது ஜனநாயகத்துக்கு விழும் பலத்த அடி ஆகும். ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே அரசாங்க ஊடக நிறுவனங்கள் ஜனாதிபதி கையேற்றார். பாரபட்சமற்ற சமமான செய்தி ஒளிபரப்புக்கு நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

சகல கட்சிகளும் தமது கருத்துக்களை மக்களுக்குத் தெரிவிக்க ஒரு வாரத்தில் அரைமணி நேரம் வதம் ரூபவாஹினியில் நேரம் ஒதுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. - இவ்வாறு அவர் கூறினார்.

(ஒ)

## யூனியன்கல்லூரிக்கு மாணவர் சேர்க்கை தேர்வு நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.23

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆறாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவிருக்கின்றது.

விண்ணப்பித்த மாணவர்களை தவறாது சமுகந் தரும்படி கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ஒ-3)

# வத்தளை, திப்பிட்டிகொட பகுதியில் இராணுவம்-பொலீஸ் பாதுகாப்பு

கொழும்பு,டிசெ.23

வத்தளை,திப்பிட்டிகொட பிரதேசத்தில் இப்போது பூரண அமைதி நிலவுவதாகக் களனிப் பொலீஸார் தெரிவிக்கின்றனர். அப்பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

திப்பிட்டிகொட பிரதேசத்தில் கடந்த 18ஆம் திகதி கைக்குண்டொன்று வீசப்பட்டதில் கொல்லப்பட்ட இளைஞரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. இதனையடுத்து, வணக்க ஸ்தலமொன்றும் சில வீடுகளும் தாக்கப்பட்டன. இத்தாக்குதலில் சிலர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

இதனால், அப்பகுதியில் நேற்றுமுன்தினமிரவு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு பொலீஸாரும் இராணுவத்தினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். நேற்று அப்பிரதேசத்தில் பூரண அமைதி நிலவியதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஒ)

# சதாமைக் குர்திஷ் படையினரே பிடித்துக் கொடுத்தார்களாம்!

பக்தாத்,டிசெ.23

பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடாபாக பழிவாங்குவதற்காகவே சதாம் ஹுசைனை குர்திஷ் படையினர் பிடித்து அமெரிக்க இராணுவத்திடம் ஒப்படைத்த விவரம் தற்போது தெரியவந்துள்ளது.

ஈராக் முன்னாள் ஜனாதிபதி ஹுசைன், அவரது சொந்த ஊரான திக்ரித்திற்கு அருகே ஒரு பண்ணை வீட்டில் உள்ள சுரங்க அறையில் பதுங்கியிருந்தபோது பிடிபட்டார். சதாமை அவரது சொந்த நாட்டைச் சேர்ந்த குர்திஷ் படையினரே பிடித்து அமெரிக்கப் படையிடம் கொடுத்தனர்.

இதற்கு என்ன காரணம் என்பதும் இப்போது வெளியாகியுள்ளது.

ஈராக்கில் மலை ஜாதியினர் அடங்கிய அல்-ஜாபர் என்ற அமைப்பின் உறுப்பினர் ஒருவரின் மகளை சதாமின மகன் உதய் என்பவர் பாலியல் வல்லுறவுக்கு உட்டுபத்தினார். இதனால்



அந்தப் பெண்ணின் கணவர், சதாமையும் அவரது மகனகளையும் பழிவாங கத் திட்டமிட்டார். இதை அறிந்த உடனே பெண்ணின் கணவரை சதாமின் மகன் உதயின் பாதுகாவலா சுட்டுக்கொன்றுவிட்டனர்.

அந்தச் சம்பவத்தால் மலை ஜாதியினர் அமைப்பே சதாமையும் அவரது குடும்பத்தினரையும் பழி வாங்கத் திட்டமிட்டது. இதை அறிந்த சதாம் இறந்து போனவரின் வீட்டுக்குச் சென்று பல கோடி ரூபா கொடுத்து சமாதானப் படுத்தியுள்ளார். மேலும், பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் மலைஜாதி அமைப்பையே அழித்துவிடுவேன் என்றும் மிரட்டியுள்ளார்.

இதனால், ஆத்திரமடைந்த அவர்கள் சதாம் பதுங்கியிருப்பதைக் கண்டு பிடித்து அவரை அமெரிக்கப் படையினரிடம் ஒப்படைத்துவிட்டனர். இப்படி 'தி சண்டே எக்ஸ்பிரஸ்' பத்திரியை செய்தி வெளியிட்டுள்ளது.



பங்களாதேஷ் பிரதமர் காலிதா ஷியா டாக்கா பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்வதை எதிர்த்து எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர் ஒருவர் தனது எதிர்ப்பை வெளிக்காட்ட அங்குள்ள சிலை ஒன்றினை கறுப்புத் துணியால் மூடிக் கட்டுகிறார்.

# தி.மு.க. அமைச்சர்களின் ராஜினாமாவை ஜனாதிபதி அப்துல் கலாம் ஏற்றார்!

## ம.தி.மு.க. உயர் மட்டக்குழு நாளை கூடுகிறது

புதுடில்லி,டிசெ.23

தி.மு.க உயர்மட்ட செயறற்ட்டக் குழுவின் முடிவுப்படி, மத்திய அமைச்சர்களான டி.ஆர்.பாலு, ராஜா ஆகியோர் தங்களது ராஜினாமாக் கடிதங்களை பிரதமர் வாஜ்பாயிடம் கொடுத்தனர்.

ராஜினாமாக் கடிதங்களை ஏற்றுக் கொண்ட பிரதமர், அவற்றை ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு அனுப்பிவைத்தார். இதையடுத்து ராஜினாமாக்கள் ஏற்கப் பட்டதாக ஜனாதிபதி மாளிகை அறிவித்தது.

முன்னதாக டி.ஆர்.பாலுவும், ராஜாவும் டெல்லி சென்று பிரதமர் வாஜ்பாயை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து தங்களது ராஜினாமாக் கடிதங்களை கொடுத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் டி.ஆர்.பாலு பேசுகையில், நாங்கள் ராஜினாமா செய்தது குறித்து பிரதமர் தனது வருத்தத்தைத் தெரிவித்தார். ஏன் தமிழக பா.ஜ.கவுடனான பிரச்சினைகளை என் கவனத்துக்கு முன்பே கொண்டுவரவில்லை என்று பிரதமர் கேட்டார். தி.மு.க தலைவர் கருணாநிதி இப்பிரச்சினையை அவ்வப்போது கிளப்பியதைச் சுட்டிக் காட்டினோம். இனிமேல் பிரச்சினைகளின் அடிப்படையில் மத்திய அரசுக்கு ஆதரவு தருவோம் என்று கூறி விட்டுத் திரும்பினோம்.

இதற்கிடையே, தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்தும், மத்திய அமைச்சரவையிலிருந்தும் தி.மு.க விலகியுள்ள சூழ்நிலையில் பாட்டாளி மக்கள் கட்சியின் உயர் மட்டக்குழுக் கூட்டம் சென்னையில் வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதேவேளை, நேற்று நடைபெறவிருந்த ம.தி.மு.க, உயர் மட்டக் கூட்டம் நாளைவரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

# சட்ட விரோத குடியேற்ற வாசிகளுடன் படகு கவிழ்ந்ததில் அறுபது பேர் பலி!

## துருக்கியில் இடம்பெற்ற பரிதாபம்

லண்டன்,டிசெ.23

துருக்கிக்கு அப்பால் கடலில் சட்ட விரோத குடியேற்றவாசிகளை ஏற்றி வந்துகொண்டிருந்த படகு ஒன்று கடந்த சனியன்று கவிழ்ந்ததில் அதிலிருந்த சுமார் அறுபது பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்த அனர்த்தம் பற்றிய தகவல் ஞாயிறு மாலையே வெளியானது. துருக்கியின் சுற்றுலாமையமான மார்மறிஸுக்கு அருகில் உள்ள கடலில் - கடும் பனிக்காலக் குளிருக்கு மத்தியில் - இரண்டு கரையோரப் படகுகளும் ஒரு ஹெலிகொப்டரும் தேடுதல் வேட்டைகளை நடத்திய போதிலும் ஒருவர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டார். ஈராக்கியரான அவரையும் கூட அவ்வழியே வந்த பாதைப படகு ஒன்றே மீட்டது.

ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் ஜோர்தான் நாடுகளைச் சேர்ந்த சட்ட விரோத குடியேற்ற வாசிகளை ஏற்றி வந்த படகே கழிந்திருக்கின்றது.

துருக்கியின் மார்மறிஸ் சுற்றுலாமையத்திற்கு நெருக்கமாக கிரேக்க நாட்டின் றோடஸ் தீவு உள்ளது. பிரகாசமான கோடை காலத்தில் மார்மறிஸிலிருந்து பார்த்தால் இத்தீவு தூரத்தே தென்படும். இவற்றுக்கு இடையில்தான் கிரேக்ககடலும் மத்தியதரைக்கடலும் சந்திக்கின்றன. இக்கடற்சந்திப்புப் பிரதேசத்தில் மிக மோசமான அனர்த்தங்களை அவ்வப்போது ஏற்படுத்துவது வழமை.

அப்பகுதியில்தான் இந்தப் படகும கழிந்திருக்கின்றது. வருடம்தோறும் கிழக்கு துருக்கிக்கு அருகில் உள்ள ஈரான், ஈராக் நாடுகளைச் சேர்ந்த அயிரக்கணக்கான சட்ட விரோத குடியேற்ற வாசிகள் துருக்கி ஊடாக அருகில் உள்ள கிரீஸ்ஸுக்குள்ளும் ஏனைய ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் புக முயற்சித்து வருகின்றனர்.

சிறிய படகுகளில் ஆபத்தான கடல்வழிப் பயணங்கள் மூலம் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடு வோரில் கணிசமானோர் இடைநடுவில் கடலில் அதிகாரிகளிடம் சிக்குவதும், கணிசமானோர் வழியில் உயிர் இழபதும் கூட வருடம்தோறும் நடப்பதுதான். குறைந்த எண்ணிக்கையானோரே தப்பிப் பிழைத்து ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைவதில் வெற்றிபெறுகின்றார்கள்.

துருக்கிக் கடலில் தற்போது கவிழ்ந்துள்ள படகில் இருந்தோரை மீட்பதற்காக - மோசமான குளிகால நிலைக்கு மத்தியிலும் - இரண்டு நாள்களாக நடத்தப்பட்ட தேடுதலின் போது ஆக, சம்பந்தப்பட்ட கங்கானியும் பிடியும் வெறும் உயிர் காப்பு உடை ஒன்றுமே மீட்கப்பட்டன என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### இளவரசர் படுகாயம்!

பூட்டான் நாட்டில் இந்தியாவிற்கு எதிராக செயல்படும் தீவிரவாதிகளை வெளியேற்றும் இராணுவ நடவடிக்கையின் போது அந்நாட்டின் இளவரசர் குண்டுகாயம் அடைந்தார்.

இந்த அதிரடி நடவடிக்கையின் போது பூட்டான் இளவரசர் ஜிக்மெல வாங்சுக் காயம் அடைந்தார். என்று தகவல் வெளியாகியுள்ளது. அதனால், பூட்டான் இராணுவத்தினரின் அதிரடி வேட்டையை தற்போது அந்நாட்டின் மன்னர் ஜிக்மி சிங்யி வாங்சுக் மேற்பார்வையிட்டு வருகிறார் என்று கூறப்படுகிறது. ஆயினும், பூட்டான் அரச பேச்சாளா தமது நாட்டு இளவரசர் படுகாயம் அடைந்த செய்தியை மறுத்துள்ளார்.

# விமானத்தைத் தகர்த்த குற்றவாளி ராஜீவைக் கொலைசெய்ய முயன்றவர்

1985ஆம் ஆண்டு நியூயோர்க்கில் வைத்து அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைப் படுகொலை செய்ய, 'கனிஷ்கா' விமானக் குண்டுவெடிப்பு சம்பவத்தின் முக்கிய குற்றவாளி முயற்சித்தார் என்று தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

1985ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம்திகதி கனடாவில் இருந்து புறப்பட்ட ஏயர் இந்தியாவின் 'கனிஷ்கா' விமானம் நடுவானில் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட சம்பவத்தில் 300இற்கும் மேற்பட்டோர் பலியானார்கள. இது சம்பந்தமாகப் பஞ்சாப் தீவிரவாதிகள் ரிபுடமன்சிங் மற்றும் அஜாய்ப்சிங்பாக்ரி ஆகியோர் மீது கனடா நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது.

இதற்கிடையில், இந்த வழக்கின் முக்கிய குற்றவாளியான அஜாய்ப்சிங் பாக்ரி கடந்த 1985ஆம் ஆண்டு அப்போது இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தியை நியூயோர்க்கில் வைத்துப் படுகொலை செய்யச் சதித் திட்டம் தீட்டினார் என்ற திடுக்கிடும் தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

கனடாவில் புலனாய்வு நிறுவனத்தில் பணியாற்றிவிட்டு தற் போது அந்நாட்டு பொலீஸில் அதிகாரியாக உள்ள வில்லி லோரி என்பவர் கடந்த வாரம் இத்தகவலை தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:- 1985ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி மாநாடு ஒன்றில் கலந்துக்கொள்ள நியூயோர்க் வந்தார். அப்போது அங்கு வைத்து அவரை தீர்த்துக் கட்டும் சதித்திட்டத்துடன் அஜாய்ப்சிங்பாக்ரி அந்த மாநாட்டில் சாமர்த்தியமாக ஊடுருவி விட்டார். ஆனால், அந்தச் சதித் திட்டம நிறைவேறவில்லை. நியூயோர்ச் செல்லும் முன், பாக்ரியே தன்னிடம் இந்தத் திட்டத்தைப்பற்றி சொன்னார். என்று ஏயர் - இந்தியா குண்டு வெடிப்பு வழக்கின் முக்கிய சாட்சியான ஒரு பெண் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு அந்தப் பெண்ணை நான் சந்தித்துப் பேசிய போது அவர் இந்தத் தகவலை என்னிடம் வெளியிட்டார்.

ஏயர் - இந்தியா விமானக்குண்டு வெடிப்பு வழக்கில் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவுப்படி அந்தப் பெண்ணின் பெயரை வெளியே சொல்ல முடியாது,- இவ்வாறு அவர் தெரிவித்தார். இத்தகவலை கனடா பத்திரிகை ஒன்று சமீபத்தில் வெளியிட்டது.



பிலிப்பைன்ஸின் தெற்கு பகுதியில் கடந்த வெள்ளின்று இரவு நிலச்சரிவு ஏற்பட்டதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 96ஆக உயர்ந்துள்ளது. இந்த நிலச்சரிவினால் வீட்டை இழந்த குடும்பம் ஒன்று.

### வீரப்பனைப்பிடிக்க இஸ்ரேல் தயார்!

சந்தனக்கடத்தல் வீரப்பனை பிடிப்பதில் காநடக அரசுக்கு உதவ இஸ்ரேல் முன் வந்துள்ளது. தீவிரவாதிகள் மற்றும் பயங்கர குற்றவாளிகளை வேட்டையாடுவதில் நிபுணத்துவம் வாய்ந்த இஸ்ரேல் இராணுவ ஆயுதத் தொழிற்சாலைகள் (ஐ.எம்.ஐ) மற்றும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு குழு (ஐ.எஸ்.எஸ்.ஜி) ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அடங்கிய குழு கடந்த மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டது.

அப்போது வீரப்பனை பிடிக்க கர்நாடகாவுக்கு உதவத் தயாராக இருப்பதாக உறுதியளித் துள்ளது இக்குழு.

# இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரதமர்கள் இந்த வாரம் சந்தித்து முக்கிய பேச்சு

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், பலஸ்தீனப் பிரதமர் அஹமட் குவாரி ஆகியோர் இவ்வாரம் சந்திக்கவுள்ளனர் என்று இஸ்ரேலிய வானொலியொன்று தெரிவித்துள்ளது. ஆனால், இதற்கான ஏற்பாடுகள் இன்னும் பூர்த்தியடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரு பிரதமர்களுக்குமிடையே நடைபெறவுள்ள முதலாவது சந்திப்பு இதுவாகும்.

பலஸ்தீனர்களுடனான சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடைந்தால் பலஸ்தீனத்திலிருந்து சில மாதங்களுக்குள இஸ்ரேல் ஒரு தலைப்பட்சமாகப் பிரிந்துசெல்லும் திட்டமொன்றை இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோன் சில தினங்களுக்கு முன் அறிவித்தார்.

இந்நிலையில், இஸ்ரேல்-பலஸ்தீன பிரதமர்களின் இச்சந்திப்பு அதிக எதிர்பார்ப்புக்குரியதாக விளங்குகிறது.

எனினும், பலஸ்தீன அதிகாரிகள் இது தொடர்பாகக் கூறுகையில் - இச்சந்திப்புக்கான ஏற்பாடுகள பூர்த்தியடையவில்லை. திகதியும் நிர்மானிக்கப்படவில்லை - என்று தெரிவிததனர்.

பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நகரங்களை மாற்றுதல், பலஸ்தீனர்களின் நடமாட்டத்திற்கு தடையாகவுள்ள வீதித்தடைகளை அகற்றுதல் ஆகியன மூலம் அமெரிக்க ஆதரவுடனான சமாதான மார்க்கத்திற்கான வரைடத்திட்டத்தை (Road map) எதிர வரும் வாரங்களில் இஸ்ரேல் முன்னெடுத்துச்செல்லும் எனவும் ஷெரோன் தெரிவித்துள்ளார்.



இஸ்ரேலிய டாங்கியொன்றை கடந்து செல்லும் பலஸ்தீனக் குடும்பம்.

## ஓராண்டு நினைவலைகள்



அல்லிப்பளையூர்

### செல்லையா இராமலிங்கம்

திதி: அமாவாசை

அல்லிப்பளை அணைத்த ஆர்முதே எம் தலைவா
அன்பாகவே அணைத்தாய் பண்பாகவே வளர்ந்தோம்
தந்தையாய்த் தாயாகி எல்லாமே நீயானாய்
நெஞ்சினிலே நீயிருந்தாய் நிறைவாக நாமிருந்தோம்
குடியிருந்த வீடெல்லாம் குமுறுதையா உம்மையெண்ணி
நெஞ்சம் நெகிழ்ந்ததென்ன கண்கள் கலங்கி என்ன
கண்ணின் மணியாகக் காத்து வளர்த்தனையே
என்றென்றும் நாம் மறவோம் எங்கள் உயிர் உள்ளளவும்!

தம்நாலிக முகவரி:
மடத்தடி, சாவகச்சேரி. (26135)(34-18-25)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சித்தஆயுர்வேத ஆஸ்பத்திரி சேவைநாள்களை அதிகரிக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,டிசெ.23

தற்போது வாரத்தில் இரு தினங்கள் மட்டும் செயற்பட்டு வரும் வட்டுக்கோட்டை கிராம உப அலுவலக சித்த ஆயுர்வேத வைத்தியசாலையை வாரத்தில் மூன்று தினங்கள் இயங்கச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கடிதம் மூலம் வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது திங்கட்கிழமையும் புதன்கிழமையும் இந்த சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான சிகிச்சை நடைபெற்று வருகின்றது. வட்டுக்கோட்டை, சங்கரத்தை, துணைவி ஆகிய இடங்களிலுள்ள நோயாளர்களின் நலன்கருதி 3 தினங்களாக அதிகரிக்கும்படி இக்கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இக்கடிதத்தின் பிரதி யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம-135)


## GREEN CARDS
### அமெரிக்கா லொத்தர் - VISA

அமெரிக்கா செல்லும் அதிஷ்ட வாய்ப்பு
இன்னும் சிலநாள்களே உள்ளன

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**SRI MURUGAN**
Computer Systems Communication
Services & Agency Post Office,
*303, K.K.S. Road, Jaffna.*
*T.P.: 021 222 2670.Fax: 021 222 3214,*
*E-mail-del-smskn @ eureka.lk.*

**THIRUMURUGAN COM NET,**
Computer Systems Communications
Services,
*46, Adiyapatham Rd.*
*Thirunelvely.*
*T.P.: 021 222 7310.*
*Fax: 021 222 7310.*

(34-18-25) (C/82157)



## வரதன் சாரதி பயிற்சிப் பாடசாலை




சகல விதமான வாகனங்களையும் சிறந்த முறையில் செலுத்துவதற்கு குறுகிய கால பயிற்சியுடன் பழக்கி அனுமதிப் பத்திரம் பெற (லைசென்ஸ்) ஒழுங்கு செய்துதரப்படும்.

- இது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பயிற்சிப் பாடசாலை.
- காப்புறுதி செய்யப்பட்ட வாகனங்கள்.
- எழுத்துப் பரீட்சையை வெல்ல சுலபமான வழிகாட்டல்.
- செய்முறைப் பரீட்சைக்கு ஏற்ற பயிற்சி அரச வர்த்தக ஸ்தாபனங்களில் பணிபுரிவோர் நலன்கருதி சனி, ஞாயிறு விடுமுறை நாள்களிலும் பயிற்சி அளிக்கப்படும்.

இன்றே நாடுங்கள்!

பணம் தவணை முறையிலும் செலுத்தலாம்.

### வரதன் சாரதி பயிற்சிப் பாடசாலை

தலைமைச் செயலகம்:
நவீன சந்தை மேல்மாடி.
சாவகச்சேரி.
☎ 0777-110868.

மனோ தொலைத் தொடர்பு நிலையம்.
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.
☎ 021-2263072.

☞ அதிவிரைவில் யாழ். நகரிலும் எமது சேவை தொடங்கும் என்பதையும் மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

(26184)(34-18-25)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### செல்வி இராஜநாயகம் ரஜீவா

அன்னை மடியில்
28 - 03 - 1993

ஆண்டவன் அடியில்
23 - 11 - 2003

*வட்டமுகமெங்கே? வானிலவாம் சிரிப்பெங்கே?*
*மொட்டா முனமலர் வதனம் எங்கே? எங்கே?*
*சிட்டெனவே -*
*பறந்தனையோ பாலகியே - பாழும் விதிவசத்தால்*
*மறந்தனையோ எங்களையும் நீ....?*

இன்று (23.12.2003) நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆவரங்கால் மேற்கு, புத்தூர். (26163) (26-18-25) **செ.மகேந்திரன்** (மாமன்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30 | 02 |
| - | - |
| 06 | 01 |
| - | - |
| 1916 | 2003 |

அமரர்

### வல்லிபுரம் வேலாயுதம்

அன்புடனும் பண்புடனும் நாங்கள் வாழ
காலமெல்லாம் கண்விழித்து எம்மைக் காத்த
அன்புள்ள தந்தையே! நீர்
எம்மைப் பிரிந்து ஓராண்டு ஆனாலும்
உம் அன்பை என்றென்றும் நாம் மறவோம்!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.*

*87A, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (26181) (26-18-25)

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**சகோதர சகோதரிகள்.**


## பண்டிகைக்கால அதிரடி SALE

### மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

10,11 POWER HOUSE RD, GRAND BAZAAR, JAFFNA



நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள், சுவாங்கீஸ் வகைகள், கவுண் வகைகள், சோக்கோ ரவுசர், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள், சேட், Tசேட், கோட் சூட், பட்டுச்சேலைகள் என் பலவற்றின் அதிநவீன புதிய டிசைன்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

ரூபா 3000/-இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஆண், பெண் இருபாலருக்கும் பொருத்தமான அழகிய Tசேட்ஸ் அன்பளிப்பாக வழங்கப்படும். இச்சலுகை 20.12.2003 - 31.12.2003வரை மட்டுமே!

முற்றிலும் குளிரூட்டப்பட்டது

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

SAIS

இல.10,11, மின்சார நிலைய வீதி, (மலையன்கபே முன்பாக) பெரியகடை, யாழ்ப்பாணம்.


## நெஞ்சு பொறுக்குதில்லையே 3இல்

*ஆண்டுகள் மூன்றாச்சு*
*ஆறவில்லை தேறவில்லை*
*மகனிடம் போன நீர்*
*மகளையும் கூப்பிட்டீரா?*
*எண்மராய் பூத்த பூக்கள்*
*அறுவராய் ஆச்சு ஐயா!*

*உற்றதுணையும்*
*போகுதையா!*
*உறுதுணையும்*
*போனதையா!*
*ஆசிர்வதியுமையா!*
*ஆறவழிகாட்டுமையா!*



அமரர்

### ஆசை கந்தையா

எம்பிடம் : 18.08.1929
உம்பிடம் : 23.12.2000
திதி : திரயோதசி

11ஆம் ஆண்டு 5ஆம் மாதம்



"பிரேமன்"
அமரர் க.பிரேமதாசன்
09.09.1974
06.01.1993
திதி : திரியோதசி

"பொத்தா"
திருமதி வ.ஜெயராணி
01.07.1965
01.08.2003
திதி : திருத்திகை

-மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

தொடர்புகட்கு:
நன்னீஸ், பெற்றோல் நிலைய ஒழுங்கை,
காங்கேசன்துறை.

இரவல்கூடு:
150, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம் மேற்கு, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### கந்தையா விஸ்வலிங்கம்

(ஓய்வுபெற்ற காவலாளி - காரைநகர் டிப்போ)

ஆனைக்கோட்டை, கொழும்பார் வளவைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது டென்மார்க்கில் வசித்தவருமாகிய கந்தையா விஸ்வலிங்கம் 21.12.2003 ஞாயிற்றுக்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் நாகரட்ணத்தின் அன்புக் கணவரும் விஜயகுமாரி (மாகாண சபை, திருகோணமலை), சந்திரகுமார் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), ஜீவகுமார் (டென்மார்க்), திலகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குலேந்திரன் (கட்டடத் திணைக்களம்) மற்றும் தேவராணி, கலாநிதி(டென்மார்க்), ஜெயச்சந்திரன (உதயா- பேக்ஹவுஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற திருமதி ஆறுமுகராஜா, குமாரவேல் மற்றும் மகேஸ்வரி (டென்மார்க்), கனகாம்பிகை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் உள்ள அவரது இல்லத்தில் எதிர்வரும் (27.12.2003) சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜெ.திலககுமாரி
*(மகள்)*
*வல்லை வீதி, சங்கானை.*

*டென்மார்க்.*
*T.P: 0045 59464547* (26189)(35-18-25)

# உதயன்

## அதிர்ச்சி தரும் கல்வித்துறை

இலங்கையின் கல்வி நிலைமை தொடர்பான ஆய்வறிக்கை ஒன்று திடுக்கிடும் பல புள்ளிவிவரத் தகவல்களை வெளிப்படுத்தியிருக்கின்றது. அவற்றுள் சில வருமாறு:-

★ நாட்டின் சனத்தொகை அதிகரித்து வருகின்றது. ஆனால், 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாடசாலைகளில் புதிதாக அனுமதி பெறுவோரின் எண்ணிக்கை வருடாந்தம் சராசரியாக 25 ஆயிரத்தால் குறைந்து வருகின்றது.

★ 1992இல் 42லட்சத்து 90ஆயிரமாக இருந்த மாணவர் எண்ணிக்கை 2003இல் 40 லட்சத்து 27 ஆயிரமாகக் குறைந்திருக்கின்றது. 11 ஆண்டுகளில் இரண்டு லட்சத்து 63ஆயிரத்தினால் மாணவர் எண்ணிக்கை விழ்ச்சி கண்டிருக்கின்றது.

★ 1992இல் நாட்டில் 10ஆயிரத்து 283 பாடசாலைகள் இருந்தன. அவை இப்போது 9 ஆயிரத்து 829 ஆகக் குறைந்துவிட்டன. கிராமப்புறப் பாடசாலைகளே அதிகளவில் மூடப்பட்டுவருகின்றன.

★ ஐம்பதுக்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 1992இல் 10வீதமாகும். 2002இல் - பத்து ஆண்டுகளில் - இது 13.8 வீதமாக உயர்ந்துள்ளது.

★ மாணவர் தொகை குறைவதால் ஓர் ஆசிரியருக்கான மாணவர் எண்ணிக்கை என்ற விகிதமும் வீழ்ச்சி கண்டு வருகின்றது. தேவைக்கு அதிகமாகச் சேவையில் இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கைப் பட்டியலில் வருடம் தோறும் சுமார் ஆயிரம் ஆசிரியர்கள் மேலதிகமாகச் சேரும் நிலையும் உருவாகியுள்ளது.

★ ஆனால், இந்தத் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் என்ற பிரச்சினை சிங்களப் பகுதிகளில் மட்டும்தான். தமிழ்ப் பிரதேசங்களிலோ நிலைமை தலைகீழ். அங்கு ஆசிரியர் பற்றாக்குறை மிக மோசமான நிலையில் நீடிக்கின்றது.

★ சிங்களப் பிரதேசங்களில் மொத்தம் 6ஆயிரத்து 704ஆசிரியர்கள் மிதமிஞ்சி உள்ளனர். ஆனால், தமிழ்ப் பிரதேசங்களிலோ 10ஆயிரத்து 127ஆசிரிய வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன.

இந்தப் புள்ளிவிவரம் நமது நாட்டின் கல்வி நிலைமை எங்கே போய்க்கொண்டிருக்கின்றது என்பதை உணர்த்தும் நல்லதோர் சுட்டியாக அமைகின்றது.

இந்த மோசமான நிலைமை ஏற்பட இனப்போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைந்தன என்பதும் உண்மைதான்.

தெளிவான கல்விக் கொள்கையோ, கொள்கை நடைமுறைப்படுத்தலோ இல்லாமையும் கூட இந்தப் பின்னடைவு நிலைக்குக் காரணம் என்று கூறினால் அதுவும் மிகையாகாது.

இந்தக் கல்வித்துறைப் பாதிப்பு போரினால் சீரழிந்துள்ள வடக்கு - கிழக்கில்தான் மோசமான நிலையை எட்டியிருக்கின்றது.

அந்தப் பிரதேச மக்களின் சுதேசிய சிந்தனையோட்டத்துடன் கூடிய விதத்தில் கல்விக் கொள்கை வகுக்கப்படாமையும், அப்பிரதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வுதரும் விதத்தில் அவை நடைமுறைப்படுத்தப்படாமையுமே அங்கு அடிப்படைப் பிரச்சினைகளாக உள்ளன.

வடக்கு - கிழக்கில் ஆசிரிய பற்றாக்குறை பூதாகரமாக நீடிக்க, அங்கு அதிக எண்ணிக்கையில் ஆசிரிய நியமனங்களைச் செய்வதை விடுத்து, தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் நிலைத்திருக்கும் தென்னிலங்கையில் புதிய ஆசிரிய நியமனங்கள் குறித்துச் சிந்திக்கப்படுகின்றது. கல்வித்துறைக் கொள்கை வகுப்பாளர்களின் சிந்தனை கல்வி அபிவிருத்தியை விட, வாக்கு சுவீகரிப்பிலேயே அதிகம் நாட்டம் கொண்டிருப்பதன் விளைவு இது. தங்களுக்கு அதிக வாக்கு ஈட்டும் வாய்ப்பு இல்லாத பிரதேசங்களுக்கு ஆசிரிய நியமனங்கள் செய்யப்படவேண்டிய அவசியம் இருந்தும் அதுபற்றி அரசியல் தலைமைகள் சிந்திப்பதாக இல்லை.

போதாக்குறைக்கு வடக்கு - கிழக்குக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற கல்வித்துறை அதிகாரிகள் கூட, தங்கள் பிரதேசக் கல்வி அபிவிருத்தி என்று சிந்திப்பதை விடத் தமது மேலதிகாரிகளுக்கு 'கூசா' தூக்குவதில்தான் அதிக சிரத்தை காட்டுகின்றார்கள்.

தத்தமது பிரதேசத்தின் தேவைக்கும், பிரச்சினைகளுக்கும் ஏற்ப கல்விக் கொள்கைகளையும் அடைவுகளையும் வகுத்துச் செயற்படக்கூடிய விதத்தில் கல்விக் கொள்கை வகுப்புப் பணியை பிரதேச மட்டங்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம், இப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வுகாணமுடியும்.

தமிழர் கோரும் அதிகாரப் பகிர்வில் இதுவும் ஓர் அம்சமே.

# நீதிமன்ற அதிகாரங்கள் பற்றிய விவாதம்

யாழ்ப்பாணம்,டிசெ.23

நீதிமன்றம் ஒன்றினால் பிறப்பிக்கப்படும் பிடியாணைப்பத்திரத்தில் சம்பந்தப்பட்ட நபரின் குற்றச்சாட்டு விவரம் குறிப்பிடப்படாவிட்டால், வேறு ஒரு நீதிமன்றத்தால் அவர் தடுத்து வைக்கப்பட சட்டத்தில் இடமுண்டா என்பது குறித்த வாதம் ஒன்று அண்மையில் யாழ். மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை சமரபாகுவைச் சேர்ந்த சீவரத்தினம் இன்பரதன் (வயது 26) என்ற இளைஞனுக்கு நீர் கொழும்பு நீதிமனறம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்தப்பிடியாணைப்படி பிரஸ்தாப இளைஞன் கடந்தமாதம் 19ஆம் திகதி அவரது வீட்டில்வைத்து வல்வெட்டித்துறைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அவரை உடன் நீர்கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யமுடியாத சூழ்நிலையில் பொலீஸார் பிரஸ்தாப இளைஞனை பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். இவரை விளக்கமறியலில் வைத்து நீர்கொழும்பு மேல்நீதிமன்றில் கையளிக்கும்படி பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

கைதுசெய்யப்பட்ட இடம் பருத்தித்துறை நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் உள்ளதால், அங்கு பிரஸ்தாப இளைஞன் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

கொழும்புக்கு இவரைக் கொண்டு செல்வதில் நடைமுறைச் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து இவரைப் பிணையில் விடுமாறு கோரி மனு ஒன்று கடந்த 10ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அந்தமனுவை பருத்தித்துறை நீதிமன்றம் நிராகரித்தது.

இதைத் தொடர்ந்து பிணைமனு நிராகரிப்பு உத்தரவை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரி அந்த இளைஞன் சார்பில் சட்டத்தரணி எஸ்.ஏ.ஈ.ஏகநாதன், யாழ்.மேல் நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல்செய்தார்.

அந்த மனுமீதான விசாரணை மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இளைஞன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என்.சிறிகாந்தா தமது வாதத்தை முன்வைத்துத் தெரிவித்ததாவது:-

நீர்கொழும்பு நீதிமன்றத்தால் பிரஸ்தாப நபருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையில், அவர் புரிந்ததாகக் கருதப்படும் குற்றம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது குற்றவியல் நடைமுறைச் சட்டவிதிகளுக்கு முரணானது.

குற்றம் எது என குறிப்பிட்டால் மட்டுமே, அவருக்கு பிணை வழங்க முடியுமா? என்பது குறித்து பருத்தித்துறை நீதிமன்றம் ஆராய்ந்து உரிய உத்தரவை வழங்க முடியும். பிடியாணையில், 'நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கத்தவறியமை' என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இது குற்றம் அல்ல. தவறுதல் மட்டுமே.

மேலும் அந்தப் பிடியாணையில் நீர்கொழும்பு நீதிமன்ற வழக்கு இலக்கத்தோடு, 'பி' அறிக்கை இலக்கமும் தரப்பட்டுள்ளது. அது நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்ற வழக்கு இலக்கம் என்றே கருதவேண்டியுள்ளது.

நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிரஸ்தாப நபருக்கு சில வருடங்களுக்கு முன்பே பிணை வழங்கியிருந்தது. இந்த நிலையில் நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பிரஸ்தாப நபருக்கு எதிராகச் சட்டமா.அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அறிவித்தலோ, கட்டளையோ அவருக்குக் கிடைக்கவில்லை. இந்த சூழ்நிலையில் நீர்கொழும்பு மேல் நீதிமன்ற பிடியாணையில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குற்றச்சாட்டு எது என்று கூறப்படாத நிலையில், பருத்தித்துறை நீதிமன்றில் பிணைகோரும் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது. குற்றம் எது எனத் தெரியாததால் நீதிமன்றத்தால் பிணை வழங்க முடியவில்லை.

யாழ்.மேல் நீதிமன்றம் விதிக்கும் எந்தப் பிணையையும் செலுத்த அவர் தயாராக இருக்கின்றார். அடுத்த தவணையில் அவர் நீர்கொழும்பு மேல் நீதிமன்றில் ஆஜராவார் - என்றார்.

அரச சட்டத்தரணி செல்வி சுகந்தி கந்தசாமி பிணை வழங்கப்படுவதை ஆட்சேபித்தார்.

இருதரப்பு வாசகங்களையும் ஆராய்ந்த நீதிபதி, பிரஸ்தாப நபரை 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரு அரச ஊழியர்களின் ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

அடுத்த தவணையில் நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதிபதி உத்தரவிட்டார். (ம-3)

# கிராம சேவகர்களின் அலுவலக நாள்கள் மாற்றப்படவில்லை!

## அமைச்சு செயலாளர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.23

கிராம அலுவலர்களின் அலுவலக நாள்கள் எந்த மாவட்டத்திலும் மாற்றப்படவில்லை என்று பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் இதனை அறிவித்திருக்கின்றது.

கிராம அலுவலர்களின் அலுவலக நாள்கள் சுற்றறிக்கையின்படி ஏழு நாள்கள் என்பதில் மாற்றம் எதுவும் இல்லை என்று சங்கம் தெரிவித்துள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அலுவலகத்தில் வடக்கு - கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் அமைச்சின் செயலாளர்களுக்கும் இடையில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போது இது பற்றி ஆராயப்பட்டதாக சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சின் சார்பில் அதன் சிரேஷ்ட செயலாளரும், கனிஷ்ட உதவிச் செயலாளரும், சங்கத்தின் சார்பில் தலைவர் ப.வசந்தகுமார், இணைச் செயலாளர் க.பரஞ்சோதி, கிராம அலுவலர் சி.சிறீஸ்கந்தராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் ஏற்றுக கொள்ளப்பட்ட விடயங்கள் வருமாறு:-

1) அதிஉயர் சிறப்புப்பதவிக்காக நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் இந் நியமனம் வழங்க முடிவு எடுக்கப்பட்டது.

2) 15வருட சேவையைப் பூர்த்தி செய்த, இதுவரை தரம் I இற்கு பதவி உயர்த்தப்படாத சகலருக்கும் தரம் I இற்கு நியமனம் வழங்கப்படும்.

3) யாழ்.மாவட்டத்தில் 1994ஆம் ஆண்டில் தெரிவான 16 கிராம உத்தியோகத்தர்கள் அப்போதைய சூழ்நிலையில் தீவகம் செல்லமுடியாத நிலையில் பின்தள்ளப்பட்ட நியமனத்தை 1994.08.01 ஆம் திகதியிலிருந்து வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென செயலாளர்களினால் கூறப்பட்டது.

4) 1995ஆம் ஆண்டு சம்பள மீளாய்வின் போது கொடுக்கப்படாமல் நிலுவையாக உள்ள 5 மாத நிலுவையை உடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சின் செயலாளர்களினால் கூறப்பட்டது.

5) சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் புதிய தரமான அலுவலகப் பை உடனடியாக வழங்கப்படும்.

6) 14 ஆயிரம் கிராம உத்தியோகத்தர்களுக்கும் குறைந்த வட்டியிலும், குறைந்த விலையிலும் மோட்டர் சைக்கிள் உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7) காகிதாதிகள், சீருடை, அலுவலக வாடகை என்பன அதிகரிப்பதற்கு திறைசேரியின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அனுமதி கிடைத்ததும் வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது.

8) இணைந்த சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு தரம் I இற்கு பதவி உயர்த்திய போது 1997 ஆம் ஆண்டில் நாலு சம்பள ஏற்றங்கள் வழங்கபட்டதைச் சுட்டிக்காட்டிய போது, குழுநிலைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்படும் என கூறப்பட்டது.

9) கிராம உத்தியோகத்தர்களின் காரியாலய நாள்கள் எந்த ஒரு மாவட்டத்திலும் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை என செயலாளர்களினால் கூறப்பட்டது. சுற்று நிருபத்திற்கு மாறாக ஏதாவது ஒரு மாவட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டிருந்தால் அது ஒரு பிழையான செயலாகும் என செயலாளர்களினால் கூறப்பட்டது. (ஐ)

### நாளை

மார்கழி 09
புதன்கிழமை
(24.12.2003)
திதி : பிரதமை
பி.ப. 1.47 வரை
நட்சத்திரம் : பூராடம்
பின்னிரவு 1.05 வரை.
சுபநேரம்: 4.56-6.26
ராகுகாலம்: 12.26-1.56
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வாழ்க்கையின் எந்த உணர்வும் கால வெள்ளத்தில் கரைந்து விடும். இப்போதிருக்கும் அன்போ, நட்போ எப்போதும் இருக்காது.





## பிரதான போதனைகள்

சுகாதாரமற்ற, அசுத்தமான பழக்கவழக்கங்களால் பல நோய்கள் உண்டாகின்றன.
சில இலகுவான விதிகளைப் பின்பற்றுவதன் மூலம் நோய்களைக் கட்டுப்படுத்த முடியும்.
கழிப்பிடங்களை எப்பொழுதும் பயன்படுத்த வேண்டும். பாதுகாப்பான துப்புரவான நீரைப் பருகுதல் வேண்டும்.
உண்பதற்கு முன்பும் கழிப்பிடத்தைப் பயன்படுத்திய பின்பும் குழந்தையைச் சுத்தப்படுத்திய பின்பும் உங்கள் கைகளை சவர்க்காரம் இட்டு கழுவுதல் வேண்டும்.

சுகமாக வாழும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்குமுண்டு. சுத்தமான சூழல், பாதுகாப்பான குடிதண்ணீர், சுகாதார வசதிகள் ஆகியவை சுகமான வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகள், அவற்றை அடைதல் ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமை. தென்ஆசியாவில் வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கு இந்த அடிப்படை வசதிகள் கிடைப்பதில்லை. இதனால் லட்சக்கணக்கான பிள்ளைகள் ஆண்டு தோறும் இறக்கிறார்கள். அசுத்தமான நீர் மூலம் பரவும் வயிற்றோட்டம் போன்ற நோய்களும் உணவு மூலம் தொற்றும் நோய்களுமே அதிகமான பிள்ளைகளின் மரணத்துக்குக் காரணம். இந்நோய்கள் தடுக்கக் கூடியவை. இந்த நிலைமைக்கு விழிப்புணர்வின்மை மட்டும் காரணமல்ல. நீர் தட்டுப்பாடும் முக்கிய காரணம், சில இடங்களில் நீரை அள்ளி வருவதற்கு பெண்கள் தினமும் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் செலவிடுகின்றனர். முறையான கழுவும் பழக்கங்களை அவர்கள் கடைப்பிடிக்காததற்கு அதுவும் காரணம்.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் எல்லா முயற்சிகளும், குறிப்பாக பெண்களினதும் பிள்ளைகளினதும் முன்னேற்றத்துக்கான முயற்சிகள், குடிதண்ணீர், கழிப்பிட வசதிகளை உள்ளடக்க வேண்டும். பாதுகாப்பான குடிதண்ணீரும் சுகாதாரமான கழிப்பிடங்களுமின்றி நோய்கள் பரவுவதைத் தடுக்க முடியாது. சுகமான வாழ்க்கையையும் வாழ முடியாது.

அனுசரணை:
unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.



(சி-32)

# தகவல் பரிமாற்றத்தில் ஒளி இழைகளின் பயன்பாடு

## OPTICAL FIBRES IN INFORMATION TECHNOLOGY

தொகுப்பு
திரு.W. ஜெயசீலன்
(ஆசிரியர் யாழ்.மத்திய கல்லூரி)


### தகவல் தொடர்பாடலின் நெடுஞ்சாலை

தொடர்பாடலில் அறிமுகப் படுத்தப்பட்ட புரட்சிகரமான ஒரு தொழில நுட்பமே ஒளி இழையாகும். ஒளித் துடிப்புக்களை (**Light Pulses**) ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு காவுகின்ற மெல்லிய கண்ணாடி இழைகளே ஒளி இழைகள் (**Optical Fibres**) என குறிப்பிடப்படுகின்றன. ஒளிஇழைகளை உபயோகித்து தகவல்களை ஒளித் துடிப்புக்களாக செலுத்தலாம் என 1966 ஆம் ஆண்டில் கருத்துத தெரிவிக்கப்பட்டது. பதினொரு வருடங்களுக்குப் பின்னதாக பிரிட்டனில் உலகின் முதலாவது ஒளி இழை மூலமான தொலைபேசி இணைப்பு செயற்படுத்தப்பட்டது. அண்மைக்காலங்களிலே ஒளி இழை மூலமான தொடர்பாடல், பாரம்பரியமான தொடர்பாடல் வழிமுறைகளுக்கு ஒரு சிறந்த மாற்றீடாக வளர்ந்து வருகின்றது. ஒளி இழைகளை தகவல் தொடர்பாடல் புரட்சியின் நெடுஞ்சாலை (**Highway of the information revolution**) எனக் குறிப்பிடுவர். மெல்லிய ஒளிஇழையின் ஒரு முனையில் புகுத்தப்பட்ட ஒளித் துடிப்பொன்று இழையின் வழியாக மறுமுனை வரையும் செலுத்தப்படுகின்ற தொழில்நுட்பமே ஒளி இழையின் அடிப்படைச் செயற்பாடாகும். இதற்கு ஒளியின் முழு அகத் தெறிப்பு என்ற தோற்றப்பாடு பிரயோகிக்கப்படுகின்றது.

### முழுஅகத்தெறிப்பு

ஒளியை ஊடுகடத்தும் ஊடகமொன்றில் ஒளியானது குறித்த ஒரு வேகத்தைக் கொண்டிருக்கும் இவ்வேகமானது ஊடகத்தின் தன்மையில் தங்கியிருக்கும் ஒளியை ஊடு கடத்தும் ஊடகம் ஒன்றுக்கு அதனூடு செல்லும் ஒளியின் வேகம் சார்பாக வரையறுக கப்பட்ட கணியம் முறிவுச் சுட்டியாகும் (**Refracting index**) வெற்றிடத்தில் ஒளியின் வேகத்துக்கும். தரப்பட்ட ஊடகம் ஒன்றில் ஒளியின் வேகத்துக்கும் உள்ள விகிதம் அவ்வூடகத்தின் முறிவுச் சுட்டியின் பெறுமானத்தைத் தரும் முறிவுச் சுட்டிகளின் பெறுமானங்கள் சார்பாக ஊடகங்களை விவரிக்கும் ஓர் ஒளியியல் இயல்பு ஒளியியல் அடர்த்தியாகும். (**Optical density**) வெவ்வேறான இரு ஒளிபுகும் ஊடகங்கள் தரப்படுமிடத்து அவற்றுள் முறிவுச்சுட்டி கூடிய ஊடகம் ஒளியியல் அடர்த்தி கூடியது எனவும் முறிவுச் சுட்டி குறைந்த ஊடகம் ஒளியியல் அடர்த்தி குறைந்தது எனவும் விவரிக்கப்படும்.


ஒளியியல் அடர்த்தி கூடிய ஊடகத்தினுள் செல்லும் ஒளிக் கதிர் ஒளியியல் அடர்த்தி குறைந்த ஊடகத்தின் இடைமுகத்தை போதுமான பெரிய படுகோணங்களில் சந்திக்குமாயின் மீண்டும் அதே ஊடகத்தினுள் திருப்பிச் செலுத்தப்படும் என்பதே முழு அகத் தெறிப்புத் தோற்றப்பாடாகும். இதனை வரிப்படம் ஒன்றில் பின வருமாறு காட்டலாம்.




எனவே முழுஅகத் தெறிப்புத் தோற்றப்பாட்டுக்கான நிலைமைகளை உருவாக்குவதன் மூலம் ஒளிக்கதிரை ஓர் ஊடகத்தின் வரைபுக்குள் தொடர்ச்சியாகச் செலுத்த முடியும்.

வேறு வகையில் கூறுவதானால முழு அகத்தெறிப்பு நிபந்தனைகளை உருவாக்குவதன் மூலம், ஊடகம் ஒன்றுக்குள் செலுத்தப்படும் ஒளியை அவ்வூடகத்தை விட்டு தப்பிச் செல்லாமல் தடுத்து விடலாம். மேலும் அவ்வூடகத்தினூடாக ஒளியை விரும்பிய இடத்துக்கு நெறிப்படுத்தலாம். இவ்வகையான ஒளிச் செலுத்துகைக்கு தெரிவுசெய்யப்படும் ஊடகமானது ஒளியியல் அடர்த்தி குறைந்த ஊடகம் ஒன்றினால் சூழப்பட்ட ஒளியியல் அடர்த்தி கூடிய ஊடகமாக இருக்கும் என்பது தெளிவாகும்.

ஒளி இழைகள் ஒளியியல் அடர்த்தி கூடிய அதாவது முறிவுச்சுட்டி கூடிய அகணியையும் (**Core**) அதனைச் சூழ்ந்த ஒளியியல் அடர்த்தி குறைந்த மேலுறையையும் (**Clading**) கொண்டிருக்கும். எனவே முன்னர் விவரித்தவாறு ஒளித்துடிப்புகள் அடர்த்தி கூடிய அகணியினூடாகச் செலுத்தப்படுகின்றன. நடைமுறையில் இருவகையான ஒளி இழைகள் உபயோகத்திலுள்ளன. அவற்றின் முறிவுச்சுட்டியின் மாறலும் ஒளிச் செலுத்துகையில் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அமையும்.





**ஒளி இழைகள் மிக மெல்லியனவையாகும். அவற்றின் விட்டம் பொதுவாக 0.125mm ஆக இருக்கும்.**

### தொடர்பாடலில் ஒளி இழைகளை உபயோகித்தல்

ஊடுகடத்தப்படவேண்டிய தகவல்கள் முதலில் துவித குறியீட்டு முறைக்கு மாற்றப்படும் துவித குறியீடுகளான 1,0 என்பவை மின் துடிப்புகளாக உள்ளபோது 1 உயர் வோல்றளவையும் 0 இழிவு வோல்றளவையும் குறிக்கின்றது. இம்மின் துடிப்புகள் பின்னர் ஒளித் துடிப்புகளாக மாற்றப்படும். மின்துடிப்புகளுக்கு ஏற்ப ஒளியைக் காவுவதும் (1) நிறுத்துவதுமான (0) ஒரு ஒளி முதல் இதற்கு உபயோகிக்கப்படும் பொதுவாக ஒளி காலும் இருவாயிகள் (**LED**) அல்லது லேசர் இதற்குப் பொருத்தமானதாகும் இவ்வாறு ஒளித்துடிப்புகளாக மாற்றப்பட்ட தகவல்கள் ஒளி இழைகள் வழியாக குறித்த வாங்கியை (**Receiver**) அடைகின்றன. மீண்டும் அவை மின்துடிப்புகளாக மாற்றப்பட்டு தகவல்கள் பெறப்படுகின்றன.


இத்தொழிறபாட்டை பின்வரும் வரிப்படத்தினால் காட்டலாம்.




**அமரர்**
**தம்பிப்பிள்ளை இராசமணி**
**அவர்களின் நினைவாக**
**ஒரு சிறப்புக் கட்டுரை**

### ஒளித்துடிப்பு

துவிதக்குறியீடு ஒன்றிற்கான ஒளித்துடிப்பானது, ஒளிச்செறிவு சடுதியாக உயர்ந்து சடுதியாக வீழ்ச்சியடைவதைக் குறிக்கும். இதனை வரைபில் பின்வருமாறு குறிக்கலாம்.




ஒரு ஒளித்துடிப்பின் நேரஆயிடை $10^{-10}$s ஆகும் ஒளித்துடிப்பை தொடர்பாடலில் பைற் (**bit**) எனக் குறிப்பிடுவர். ஒரு செக்கனில் செலுத்தப்படக்கூடிய துடிப்புகளின் எண்ணிக்கை **bit rate** எனக் குறிப்பிடப்படும். செலுத்தப்படும் துடிப்புகளின் வீதம் அதிகரிக்கும் போது பரிமாறக்கூடிய தகவல்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும். இதற்கேற்றவகையில் வினைத்திறன் கூடிய ஒளி இழைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒளியானது ஒளிஇழைகள் வழியாக நீண்டதூரம் பயணிக்கும் போது உறிஞ்சல், சிதறுதல் போன்றவை காரணமாக ஒளிச்செறிவு வீழ்ச்சியடையும் இதன் காரணமாக ஊடுகடத்தப்படும் சைகைகள் பல வீனம் அடையும். சிதறல், உறிஞ்சல் என்பவற்றை இழிவாக்குவதற்காக ஒளிஇழைகள் மிகத்தூய்மையான, சிலிக்கா கண்ணாடியால ஆக்கப்படுகின்றன. மேலும் சிதறல், உறிஞ்சல் விளைவுகளை இழிவாக்குவதற்காக குறுகிய அலை நீளம் உடைய ஒளியை உபயோகிக்கலாம் எனவே தகவல் ஊடுகடத்தல் செயற்பாட்டில் அகச்சிவப்புக கதிர்களே கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றது. இவற்றில் அலை நீளம் அண்ணளவாக $1.5\times10^{-6}$M ஆகும்.

தொடர்பாடலில் ஒளி இழைகள் மிகவும் விணைத்திறன் உடையவையாகும் ஒரு மெல்லிய ஒளி இழைவழியாக ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான தொலைபேசி உரையாடல்களை நிகழ்த்தமுடியும் ஒளிஇழைகள் செப்புக்கம்பிகளிலும் பார்க்க இலோசானவை ஆகவும் மெல்லியனவாகவும் உள்ளன. தகவல்கள் செலுத்தப்படும் வீதமானது செலுத்தப்படும் சைகையின் (**Signal**) மீடிறனுடன் நேரடியான தொடர்பைக் கொண்டதாகும். ஒளியின் மீடிறன் $10^{14}$ $10^{15}$ ஹேட்ஸ் வரிசையில் உள்ளது. ஆனால் ரேடியோ அலையின் மீடிறன் $10^{6}$ஹேட்ஸ் வரிசையிலும் மைக்ரோ அலையின் மீடிறன் $10^{8}$முதல் $10^{10}$ ஹேட்ஸ் வரிசையிலும் உள்ளது. எனவே ஒளியின் மீடிறனில் இடம் பெறும் தகவல் பரிமாற்றம் ஏனையவற்றிலும் பார்க்க கூடிய வினைத்திறன் உடையதாகும் மேலும் ஒளி இழையின் வழியான தொடர்பாடல் அதிவேகத்துடனும் (ஒளியின் வேகம்) இடம்பெறுகின்றது.

மின்துடிப்புகள் செலுத்தப்படும் போது அவை அயலிலுள்ள வெளியில் காந்தப்புலம் ஒன்றை ஏற்படுத்துகின்றன. இக்காந்தப்புலம காரணமாக சிலசமயங்களில் தகவல்கள் சட்டவிரோதமாக ஒற்றுக் கேட்கப்படுவதுண்டு. ஆனால் ஒளித்துடிப்புகள் இழைக்கு அயலில் எவ்வித புலத்தையும் தோற்றுவிப்பதில்லை. எனவே ஒளிஇழை வழியான தகவல் பரிமாற்றம் பாதுகாப்பானது ஆகும்.



மண் மகிழ
10-10-1935

கண் நெகிழ
23-12-2002


*திங்களது ஈராறு சென்றதுவோ நீங்கள் சென்று,*
*எங்கள் மனம் ஆறாது ஆண்டுகளாய்ச் சென்றிடினும்,*
*அங்கமெல்லாம் நொந்து நீங்கள் பெற்றெடுத்து எமக்கீந்த*
*பங்கமில்லாத் தாயன்பு எங்கே இனி எங்களுக்கு?*

*எங்கிருந்து சொந்தங்கள் செல்வங்கள் எவை வரினும்*
*தங்கியுந்தன் மடியிருந்து அரவணைத்த சுகம் வருமோ?*
*பொங்கி வந்து நெஞ்சடைக்கும் துயரமிது தீராது*
*அங்கிருந்து வேண்டம்மா, எங்கள் மனம் ஆறவென்று?*

# திட்டமிட்டுப் பேணி வளர்த்தால் நிறைய மாங்கனிகள் பெறலாம்

தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டிலே மழைக்காலம். இந்தக் காலத்திலே நம்மவர்கள் பலர் தத்தம் வீட்டுக்காணிகளில் புதிய பல பயன்தரும் மரக்கன்றுகளை வாங்கி நட்டு வளர்ப்பது சகஜம்.

பெரும்பாலும் மா, எலுமிச்சை, தோடை, கொய்யா, நெல்லி, பலா



போன்ற பல மரங்களை விரும்பி நடுகை செய்கின்றனர். அநேகமானோர் தமது வீட்டு நிலங்களில் விரும்பி நடுவது மாமரக்கன்றுகளேயாகும்.

மாமரங்கள் அனக்காடியேசியே (Anacardiaceae) குடும்பத்தைச் சேர்ந்த பயிராகும். இவை பல ஆண்டு காலங்கள் நிலைத்து நின்று பயன் தரக்கூடியன.

கறுத்தைக் கொழும்பான், செம்பாட்டான், அம்பலவி, விலாட்டு, வெள்ளைக் கொழும்பான், சேலம், கல்கண்டு என மாமரங்களில் பல்வேறு ரகங்கள் உள்ளன.

இவற்றுள் கறுத்தைக் கொழும்பான், அம்பலவி, விலாட்டு, செம்பாட்டான் போன்ற இனங்கள் மிகுந்த சுவையும், மணமும் கொண்டவையாக இருப்பதால் குடாநாட்டு மக்கள அவற்றையே முன்னுரிமை கொடுத்துத் தமது வீடுகளில் வளர்த்து வருகின்றனர்.

### திட்டமிட்ட நடுகை

எனினும், திட்டமிட்ட முறையில் இவற்றை நடுகை பண்ணிப் பராமரிக்காமையால் எதிர்பார்த்த பலனைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. மாமரங்களுக்கு உரிய பராமரிப்புத் தேவை. அத்துடன் திட்டமிட்டு மரங்களை நடுகை செய்யவேண்டும். கவனமான முறையில் இவற்றைப் பராமரித்து வளர்த்தால் பெரும்தொகையான மாம்பழங்களை நாம் பெற்றுக கொள்ளலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பல வருடங்களாகப் பூத்துக் காய்க்காமல பல மாமரங்கள் காணப்படுகின்றன. வேறு சில மரங்கள் ஒரு சில வருடங்கள் மட்டும் காய்க்கின்றன. இன்னும் சில மாமரங்கள் நிறையப்பூக்கள் பூத்தாலும் அவற்றின் விளைவு குறைவாகவே காணப்படுகின்றது.

இத்தகைய குறைபாடுகளுக்குப் பல காரணங்கள் உள. இயற்கையாகவே ஒன்றுவிட்ட ஒருவருடம் காய்க்கும் தன்மையுள்ள மரங்களும் உண்டு. போதிய சூரிய ஒளியைப் பெற முடியாமல் ஏனைய மரங்களால மூடப்பட்டு நிழல்படுத்தப்படுவதும், நீண்டகாலமாக மரத்துக்குப் பசளை இடாமையால் ஏற்படும் போஷணைக் குறைவும், மரங்களில் வளரும் ஒட்டுண்ணித் தாவரங்கள், பூச்சிகளினால் ஏற்படும் தாக்கங்களும் மரங்



களின் பூக்கும் தன்மை குறைந்து பயன்பாடும் குறைவடையக் காரணங்களாகும்.

யாழ் மாவட்டத்திலே காணப்படும மாமரங்கள் பொதுவாகப் பருவகால மழைவீழ்ச்சியைத் தொடர்ந்து தளிர் விடுகின்றன. பெரும்பாலும் மார்கழி, தை,மாசி மாதங்களிலே புதிய தளிர்கள் உண்டாகின்றன. இத்தளிர்கள் அல்லது கிளைகள் சூரியஒளியின் மூலம் போதிய மாப்பொருளைச் சேகரித்துக் கொண்ட பின்னரே பூப் பூக்கத் தொடங்குகின்றன. கிளைகள வளர்ச்சியடைந்து கார்பன், நைதரசன் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள



ஆறு மாத காலம் தேவைப்படுகின்றது.

எனவே, புதிய தளிர்கள் சூரிய ஒளியை சிறப்பாகப் பெற்று கூடிய மாப் பொருளைச் சேகரித்துக் கொண்டு அடுத்துவரும் ஆவணி, புரட்டாதி மாதங்களில் காய்க்கத் தொடங்குகின்றன. இவற்றின் அறுவடை முடிந்த பின் மீண்டும் மார்கழி, தை மாதங்களில் புதிய தளிர்கள் ஏற்படுகின்றன. தளிர்களுக்குப் போதிய சூரிய ஒளி கிடைக்காதவிடத்து குறைந்தளவு மாபொருள் கிடைப்பதால் மரங்கள் தொடர்ந்து பூக்காமல் விட்டு விடுகின்றன.

### நீர்ப்பாசனம்

மாம்பழங்களின் அறுவடை முடிந்தவுடன் 10 முதல் 15 நாள்கள் இடைவெளிவிட்டு மூன்று தடவை நீர்ப்பாசனம் செய்யவேண்டும். அத்துடன் மரங்களுக்குப் போதிய பசளை இட வேண்டும்.

மாமரங்களை வீட்டுக் காணிகளில் திட்டமிட்டு நடவேண்டும். திட்டமிடாமல் மரங்களை நடுவதால் மரங்கள் நெருக்கமாக - அடர்த்தியாக வளர்கின்றன. இதனால், கூடுதலான நிழல் காணப்படும். சூரியஒளி போதியளவு கிடையாமல் நிழல்மூடிய மரங்கள் அதிக அளவில் பூத்துக் காய்க்க மாட்டா.

மரங்களைக் கூடிய அளவில் பூக்கச செய்ய வேண்டுமானால் நிழல் மரங்களைத் தறித்து அகற்றி விடவேண்டும். சில மரங்கள் செழிப்பாக வளர்ந்து அடர்த்தியான கிளைகளைக் கொணடிருக்கும்.

இதனால், எல்லாக் கிளைகளுக்கும் சூரியஒளி கிடைப்பதில்லை.

கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

சூரியஒளி நன்கு கிடைக்கும் கிளைகளே போதிய காய்களை உண்டாககுகின்றன. எனவே, மரங்களில் காணபடும் அடர்த்தியான கிளை களை வெட்டி அகற்றி எல்லாக் கிளைகளுக்கும் சூரியஒளி போதிய அளவு கிடைக்கச் செய்யவேண்டும்.

### பசளையிடல்

மாமரங்கள் தொடர்ந்து பலவருடங்கள் நிலைத்து நின்றுபயன்தருபவை. அதனால் மண்ணில் இருந்து அதிக பசளையை அவை எடுத்துக் கொள்கின்றன. எனவே, மண்ணுக்கு அடிக்கடி பசளை இடவேண்டும். போதியளவு பசளை கிடைக்காவிட்டால் மரங்கள் கூடிய காய்களை உற்பத்தி செய்ய மாட்டா. எனவே, தொடர்ச்சியான பசளை இடப்படுவது அவசியம். காய்ந்த சருகுகள், குப்பைகள் மற்றும் சேதனப் பசளைகளான மாட்டெரு, கூட்டெரு என்பவற்றைப் பசளையாக இடலாம்.

### ஒட்டுண்ணிகளும், பூச்சிகளும்

மாமரங்களை அதிகம் தாக்குவது குருவிச்சை என்னும் ஒட்டுண்ணியாகும். இது ஒரு பொதுவான பிரச்சினை. குருவிச்சை, மரங்களில் அதிகமாகப் படர்ந்து வளர்வதாகும். கிளைகளை மூடி வளர்ந்து நிழல்படுத்துவன. மரத்துக்கு செலுத்தப்படும் நீர், பசளை என்பவற்றைக் கூடிய அளவு பெற்று செழித்து வளர்கின்றன. குருவிச்சை படர்வினால் மரங்களின் காய்க்கும் தன்மை குறைவடைகின்றது. எனவே, குருவிச்சை படர்ந்த கிளையை வெட்டி அழித்துவிடவேண்டும். அதன பின் மரங்கள் செழித்து வளர்ந்து பலன்தரும்.

மாமரங்களில் மாவிலைத் தத்தி போன்ற பூச்சிவகைகளின் தாக்கமும் இருக்கின்றன. இவற்றின் தாக்கத்தால் பூக்கள் உதிர்ந்து விடுகின்றன. காய், அரும்பு போன்றவையும் உதிர்ந்து

நிறைமுனைவன்

விடுகின்றன. எனவே, மரத்தின் காய்களின் விளைச்சலும் குறைவடைகின்றது. இவற்றுக்குத் தகுந்த பூச்சிநாசினிகளைத் தெளிப்பதன் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

மாமரங்களைக் காய்க்கச் செய்வதற்குச் சிலர் வேறு சில யுக்திகளையும் கையாண்டு வருகின்றனர். அதாவது மரத்தின் மேற்பரப்பு வேர்களை வெட்டிவிடுதல், கறிஉப்பை மண்ணுடன் கலந்து சில வேர்களை செயலிழக்கச் செய்தல், அடிமரத்தின் பட்டையை இடையிடையே கீறிவிடுதல், மரத்தின் கீழ் குப்பைகளைப் போட்டு எரித்து புகையூட்டுதல் போன்ற யுக்திகளைக் கையாண்டும் வருகின்றனர்.

"எப்படியாயினும், மாமரங்களைத் திட்டமிட்டு நட்டு, கிளைகளுக்குப் போதிய சூரியஒளி கிடைக்கக் கூடியதாக அடர்கிளைகளை அப்புறப்படுத்தி உரிய காலத்தில் நீர்பாய்ச்சி, பசளைகளை இட்டு, ஒட்டுண்ணிகளையும் பூச்சிகளையும் கட்டுப்படுத்திப் பராமரித்து வளர்த்தால் நாம் எதிர்பார்க்கும் மாம்பழங்களை நிறையப் பெற்றுக்கொள்ளலாம். *

# இலைச்சுருட்டிப் பீடைத் தாக்கம் நெற் பயிர்களில் அதிகரிப்பு

யாழ்மாவட்டத்தில் தற்போது நெற்பயிர்களில் இலைச்சுருட்டி அல்லது இலைமடித்துக்கட்டி பீடையின் தாக்கம் அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் தமது நெற்பயிர்களைக் கூர்ந்து அவதானித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தற்போதைய காலநிலை இந்தப் பீடையின் பெருக்கத்துக்குச் சாதகமாக இருப்பதுடன், தாக்கப்பட்ட பயிர் இலைகள் நீளமாகச் சுருட்டப்பட்டு அல்லது இலைகள் மடிக்கப்பட்டு இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பீடை, பயிரின் எல்லாப் பருவங்களிலும் தாக்கக்கூடியது. தாக்கப்பட்ட இலையின் சுருளை அல்லது மடிப்பை விரிந்துப்பார்க்கும் போது அவற்றினுள் பழுப்பு வெண்ணிறமான புழுவையோ அல்லது எச்சங்களையோ காணமுடியும்.

இலைகளில் உள்ள பச்சையத்தை இப்புழுக்கள் உணவாக உட்கொள்வதனால் தாக்கப்பட்ட பயிர் இலையின் நுனிப்பகுதி வெள்ளை நிறமாகக் காணப்படும்.

இந்தத் தாக்கத்தைப் பயிரில் அவதானித்தால் உடனடியாக 'குளோறோபைறிபொஸ்' பூச்சிநாசினி மருந்தை எடுத்து ஒரு அவுன்ஸை 3கலன் நீரில் கலந்து, ஒரு ஏக்கருக்கு 40கலன் மருந்துக்கலவை என்ற ரீதியில் விசிறி

ச.சின்னத்துரை
உதவி விவசாயப் பணிப்பாளர்
(விரிவாக்கம்) யாழ்ப்பாணம்.

இதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

கிருமிநாசினி மருந்து விசிறிய பின்னர் 5 அல்லது 6மணிநேரம் மழை பெய்யாது இருப்பதும் முக்கியமானது.

இதேவேளை, நெல்வயலில் நீர் தேங்கி இருக்கும் இடங்களில் கால் ஏக்கருக்கு 200கிலோ கிராம் சீமைக் கிழுவை இலை, வெட்டிய எருக்கலை இலை அல்லது நொச்சி இலைகளை இடுவதால் இது போன்ற தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்த முடியும்.

# விவசாய ஆராய்ச்சிகளை விஸ்தரிக்க உலக உணவு விவசாய நிறுவனம் உதவி

கொழும்பு,டிசெ.23

இலங்கையில் விவசாய ஆராய்ச்சிச் செயற்பாடுகளை மேலும் விஸ்தரிப்பதற்கென உலக உணவு, விவசாய நிறுவனம் விவசாய அமைச்சுக்கு 4கோடியே 50 ஆயிரம் ரூபா நிதியை வழங்கவுள்ளது.

உலக உணவு, விவசாய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க அண்மையில் கலந்துரையாடியதை அடுத்தே இந்த நிதி வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் தனசேன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சி செயற்பாடுகளை அவதானிப்பதற்காக உலக உணவு விவசாய நிறுவனம் தனது பிரதிநிதி ...ளை அடுத்தமாதம் இங்கு அனுப்பி ...க்கவுள்ளது. அத்துடன், இவற்றைப் பார்வையிடுவதற்கு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமும் மார்ச் மாதத்தில் வரவுள்ளார்.

உணவு விவசாய நிறுவனத்தின் மாநாடு இத்தாலியின் ரோம் நகரில் அண்மையில் நடைபெற்றபோதே அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் மேற்படி நிதி ஒதுக்கீடு தொடர்பாகக் கேட்டிருந்ததாகவும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (மு-10)

சாமியே சரணம் ஐயப்பா

## இந்திய சாஸ்திரியார் யாழ். வருகை

இரண்டாவது முறையாக இந்திய சாஸ்திரியார் யாழ். நல்லூர் பூமிக்கு வருகை தந்துள்ளார். சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்பெற்ற பார்பனர் ஜோதிடர்

ஸ்ரீசாமியே சரணம் ஐயப்பா
ஓம்சக்தி அருள்பெற்ற **P.T.R.** அவர்கள்
சாமியே சரணம் ஐயப்பா

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் எந்தப் பிரச்சினையானாலும் நேரில் சந்திக்கவும். திருமணத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? தொழிலில் பிரச்சினையா? தீராத வியாதியா? காதலில் தோல்வியா? உயர்கல்வித்தடையா? குடும்பத்தில் பிரச்சினையா? வெளிநாடு செல்லப் பிரச்சினையா? குழந்தைப் பாக்கியமில்லையா?

எதுவாயிருப்பினும் நேரில் சந்திக்கவும்.
யாழ். உல்லாச விடுதி
No: 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
வெலிங்டன் சந்தி அருகில். பெருமாள் கோயில் வீதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்)



## இலவசக் கண்பரிசோதனை

கியூமடிகா இலங்கை.
மேடி - மேரி
ரங்கரப்பிள்ளை வீதி மானிப்பாய்.

உங்கள் கண்பார்வை குறைவாக உள்ளதா?

கவலைப்படவேண்டாம்; உடனே விஜயம் செய்யுங்கள்!

ஆஸ்திரேலியாவில் இருந்து தருவிக்கப்பட்ட
கண் பரிசோதனை இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் சிகிச்சை நடைபெறுகிறது.

வைத்திய நிபுணர்கள் பார்வையிடும் நேரங்கள்:
22-12-2003 காலை
23-12-2003 9 மணி முதல் 5 மணி வரை
24-12-2003 9 மணி - 1 மணிவரை

சிகிச்சை பெற விரும்புவோர், இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்,
ஆசீர்வாதம் பெறுங்கள்!

நிர்வாகம்,
கியூமடிகா, இலங்கை.

(26162)(34)



உ

அருள் வளர் சுந்தரஆஞ்சநேயர்

## ஜெயந்தி விழா

இணுவில் – மருதனார்மடம்

ஆஞ்சநேய அடியார்களே!
நிகழும் மங்களகரமான மார்கழித் திங்கள் இன்று (23.12.2003) செவ்வாய்க்கிழமை காலை 7மணி முதல் 12மணிவரையில் ஆஞ்சநேயருக்குப் பொங்கல் விழா நடைபெறும். அடியார்கள் பொங்கிப் படைத்து ஆஞ்சநேயப் பெருமானின் திருவருளைப் பெறுக.

நிகழ்ச்சி நிரல்

காலை - 07.00 மணிக்கு 108 கலச அபிஷேகம்
10.00 மணிக்கு விசேட சொற்பொழிவு
திரு.ஆறுதிருமுருகன் அவர்கள்
12.00 மணிக்கு விசேட பூசை
சந்தனக்காப்பு அலங்காரம்
01.00 மணிக்கு மகேஸ்வர பூசை (அன்னதானம்)
மாலை - 5.00 மணிக்கு விஷேச பூசை
6.30 மணிக்கு தெய்வீக இசை அரங்கு
பாட்டு - பிரம்மஸ்ரீ இ.இராமநாதசர்மா
வயலின் - திரு. ராதாகிருஷ்ணன (வயலின் வித்துவான்)
மிருதங்கம் - திரு. எஸ்.துரைராஜா

அனைவரும் வருக! அருள் பெறுக!

சுந்தரஆஞ்சநேயர் கோயில்,
மருதனார்மடம்.

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்.
ஆதீனகர்த்தா.

(26168) (26-21)



CISCO SYSTEMS NETWORKING ACADEMY

## Cisco Networking Academy Programme

### இலவச கருத்தரங்கு

யாழ்குடாநாட்டில் முதன் முதலில் ஐ.நா நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற Cisco Net working கற்கை நெறி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

**CISCO Networking Course:**

உலகளாவிய ரீதியில் வரவேற்பைப் பெற்றுள்ள CCNA(Cisco Certified Network Associate) சான்றிதழுக்குரிய கற்கை நெறியானது நான்கு பிரிவுகளைக் கொண்டது (4 Semesters)இக் கற்கை நெறியினை முழுமையாகப் பூர்த்தி செய்யும் ஒருவர் நேரடியாக இணையம் மூலமான ஒரு பரீட்சைக்கு (On line Exam) தோற்றுவதன் மூலம் சர்வதேச அங்கீகாரம் பெற்ற CCNA சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**CCNA Certificate:-**

CCNA சான்றிதழைப் பெற்ற ஒருவர் தொடர்ந்தும் இத் துறையில் தனது தகுதியை வளர்த்துக்கொள்ள முடியும். CCNA இன் அடுத்த படியாக CCNP, CCIE போன்ற சர்வதேச தரம் வாய்ந்த தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் வெளிநாடுகளில் சிறந்த தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இக் கற்கை நெறிக்கான வகுப்புக்கள் எமது நிறுவனத்தில் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன. இப் பாட நெறிக்கான மாதாந்தக் கட்டணம் ரூபா 3500. இப் பாட நெறியில் முதலில் இணைந்துகொள்ளும் மாணவர்களுக்கு விசேட கட்டணச் சலுகை வழங்கப்படும்

Full Course Duration(CCNA) - 6 months
Batch I - Monday & Wednesday
Batch II - Saturday & Sunday

இப் பாடநெறி பற்றிய விரிவான இலவச கருத்தரங்கொன்று எமது நிறுவனத்தில் 03-01-2004 அன்று நடைபெறவுள்ளது. கலந்து கொள்ள விரும்புவோர் 02-01-2004 க்கு முன்னர் தமது பதிவினை அலுவலகத்தில் மேற்கொள்ளவும். CISCO பற்றியமேலதிக விபரங்களை இவ் இணைய முகவரி மூலம் அறிந்துகொள்ளலாம்.
www.cisco.com/asiapac/academy (Asia Pacific)
www.cisco.com/edu/academey (Global)

THE BARBARA MULVANEY
Computer Training Centre
123, Temple Road, Jaffna T.P:-222-5971


## நத்தார் வியாபாரம் குருநகரில் களைகட்டியது

குருநகரில் நத்தார் கொண்டாட்டங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. நத்தார் வியாபாரம் இங்கு களை கட்டியுள்ளது.

சின்னக்கடைப் பொதுச் சந்தையைச் சூழ அமைந்துள்ள பாங்ஷால் வீதியில் வியாபாரிகளால் நடைபாதை வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடைகளில் துணி, அலங்காரப் பொருள்கள் பெருமளவு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குருநகர் சனசமூக நிலையம் முன்பாகவும் குருநகர் தண்ணீர்த்தாங்கி முன்பாகவும் நடைபாதை வியாபாரிகளால் உடுபுடைவைகள் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இப்பொருள்களை கொள்வனவு செய்வதற்குப் பெருமளவில் மக்கள் கூடுவதனால் இவ்வீதிகளூடாக போக்குவரத்துச் செய்வது மிகவும் கஷ்டமாகவுள்ளது. மேலும், நத்தார் தின கரோல் குழுக்களும் இரவுநேரங்களில வீடுகளுக்குச் சென்று நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர். குருநகர் புனித யாகப்பர் ஆலயம் யாழ்.பேராலயம், புனித ரோக்ஸ், புனித கார்மேல் ஆலயம் ஆகியவைகளைச் சேர்ந்த கரோல குழுவினர் இந்த நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். (எ-51)

## சான்றிதழ் வழங்கலும் மலர் வெளியீடும்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 18ஆவது ஆண்டு நிறைவும் 16ஆவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் சிறப்பு மலர் வெளியீட்டு விழாவும் நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கழகத் தலைவர் சி.குலசிங்கம் தலைமையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகமும் சிறப்பு விருந்தினராக தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் மாகாண முகாமையாளர் பொ.இராமநாதனும் கலந்து கொள்வர்.

நூல் வெளியீட்டுரையை கழக ஆசிரியர் அ.பௌநந்தியும் மலர் ஆய்வுரையை கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணரும் நிகழ்த்துவர். (எ-7)

## வருடாந்த ஒன்றுகூடல்

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அலுவலக மாநாட்டு மண்டபத்தில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.ரி.சிவபாதம் தலைமையில் நடைபெற உள்ளது. அலுவலக ஊழியர்களின் இன்னிசை நிகழ்ச்சி சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறும். (எ-51)


## மருந்தாளர்களுக்கான வெளிவாரிப் பட்டப் பரீட்சை
PHARMACIST'S (EXTERNAL) EXAMINATION COURSE

சுகாதாரத்துறையில் உங்களையும் இணைத்துக்கொள்ள அழைக்கிறது
**"SAI RAM PHARMACY EDUCATION"**

☆ பரீட்சை இலங்கை பல்கலைக்கழக மருத்துவபீடத்தினால் நடத்தப்படும்.
☆ பரீட்சார்த்திகளுக்கு வயது எல்லை இல்லை.
☆ அடிப்படைக் கல்வித் தகைமைகள்:
க.பொ.த சா/த 6 பாடங்கள், விஞ்ஞானம் - திறமைச்சித்தி, கணிதம்/ஆங்கிலம் - சாதாரண சித்தி அடங்கலாக
☆ க.பொ.த உ/த விஞ்ஞானம் பயின்றவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

புதிய வகுப்பு ஆரம்பம்:
02-01-2004 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணி

ஆர்வமுள்ளவர்களும், மேலதிக விவரம் அறிய விரும்புபவர்களும் நேரில் 02-01-2004ஆம் திகதி சமுமளிக்கவும்.

இடம்: சாயிராம் பார்மசி,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/13, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(26121)


## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 04 - 02 - 1950 |  | 26 - 12 - 1996 |

### திருமதி இராசம்மா கந்தசாமி

திதி: 23.12.2003

எம்மை உருவாக்கி உயர்வு தந்து
உவகையுடன் எமை வாழவைத்த
எம் அன்புத் தெய்வத்தின் நினைவுகள்
ஏழாண்டென்ன எழுபது ஆண்டுகள் சென்றிடினும் மாறாது
எம் அன்புத் தெய்வத்தின் ஏழாம் ஆண்டு நினைவுகளை
பசுமையுடன் நினைவு கூருகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

'ரஜனி மகால்'
சமரபாகு
வல்வெட்டித்துறை.

கணவர்,
பிள்ளைகள்.

(26179)(35-21-12)


## முதலாவது பிறந்ததின வாழ்த்து



23 - 12 - 2003

சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வேண்டுமென காளித்தாயின் அருள் வேண்டி இப்பிறந்த நாளில் வாழ்த்துகின்றோம்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த
திரு.திருமதி குணதீபன் – சாமந்திப்பிரியா
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## செல்வன் ஆகீசன்

இல.:114/6, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
திரு.திருமதி குணதீபன்
தம்பதிகள்.

(26107) UTHAYAN Graphics

# தமிழ் பாடசாலைகளை மூடி திட்டமிட்ட இன அழிப்பு

## மனோ கணேசன் எம்.பி கவலை



வடக்கு-கிழக்கில் குண்டுகள் மூலம் தமிழ்மக்களை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், தற்போது மேற்கில் புத்தளம் முதல் வத்தளை வரையான பகுதியில் தமிழ்பாடசாலைகளை மூடி இன அழிப்பு நடத்தப்படுகின்றது.

இப்படிக் கூறினார் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன்.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் 70 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக காலத்தில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கெதிராக அன்று நாம் ஒன்றிணைந்து குரல் கொடுத்தோம்.

லக்ஷ்மன் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக இருந்து சர்வதேசத்திலும் தமிழர்களுக்கெதிராக பிரசாரம் செய்துகொண்டிருந்த வேளையில நாம் அனைவரும் இணைந்து இந்தப் பிரசார நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தோம்.

வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு பிரதமர் மனப்பூர்வமாக ஏதேனும் செய்வதாக இருந்தால் அதன் முன்னோடியாக சிங்கள மக்கள் மத்தியில் வாழும் வத்தளைப் பகுதி தமிழ்ப்பிள்ளைகள் படிப்பதற்கு பாடசாலை வசதி ஏற்படுத்தவேண்டும் என்று நானும் அமைச்சர் சந்திரசேகரனும் பிரமதமரிடம் கேட்டோம்.

அவர் தற்போது இந்த வசதியினைச் செய்துதந்துள்ளார்.

வடக்கு-கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தமிழ்ப்பாடசாலைகள் மூடப்பட்டு சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிட்ட முறையில் மொழி கபளிகரம் செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறு நவீன யுத்தத்தின் இரண்டு தலைமுறையினர் மொழி அழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமையைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டு இருக்காது தடுத்து நிறுத்தவேண்டியது தமிழர்களின் முக்கிய கடமையாகும்.

தமிழ் இனத்தின் உரிமைக்களம், விடுதலைக்களம் வடக்கு - கிழக்கு, மலையகம் மேல்மாகாணம் வடமேல் மாகாணம் என்று வேறுபாடு இன்றி தமிழன் எங்கெங்கு இந்த மண்ணில வாழ்கிறானோ அங்கெல்லாம் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றார் அவர்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பேசுகையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளும் பயங்கரவாதிகளே என்று கூறி அவர்கள் அழிக்கப்படவேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா, அமெரிக்காவின் உதவியை நாடியபோது நாம் அதற்கு எதிராகக் குரல் கொடுத்தோம். அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல விடுதலைப்போராளிகள் என்றும் கூறினோம்.

ஜனநாயகத்தின் கீழ் இருக்கக் கூடிய அனைத்து உரிமைகளையும் அழித்துவிட அரசுகள் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது அதனை முறியடிப்பதற்காக நாம் ஒன்றிணைந்தோம். இந்தவகையில், புலிகளுடன் இணைந்து நிற்கவேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்து இணைந்து செயற்பட்டுக்கொண்டும் இருக்கிறோம்.

இந்த வகையிலேயே, தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு வெளியே நின்ற தமிழ்க்காங்கிரஸ்கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(சுரேஷ் அணி)யுடனும் பேச்சுக்களை நடத்தி இணைந்துகொண்டோம்.

இன்று தனிமனிதனுக்கோ, தனி மனித செயற்பாட்டிற்கோ முக்கியத்துவம் இல்லை. தமிழ் மக்களினதும், மண்ணினதும் விடுதலையே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

அனைவரும் விடுதலைப் புலிகளுடன் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுப்போம் என்றே இணைந்து ஓர் அணியில் இருக்கிறோம்.

எங்கள் மத்தியில் கட்சி பேதங்கள், தனிநபர் பேதங்களுக்கு அப்பால் தேசத்தினதும், மக்களினதும் விடுதலையே முக்கியமானதாகும். அதன் இலக்கைப் பொறுத்தவரையில் இன்றைய ஜனாதிபதியும், இன்றைய பிரதம மந்திரியும் அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். இவர்களுடைய அதிகாரப் போட்டிக்கும் தமிழ் மக்களே பலியாகின்ற நிலைமை காணப்படுகின்றது. சர்வதேசம் இன்று தமிழ் மக்களுடைய ஏகப்பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த நிலைமையில் தமிழ் மக்களுக்கென கிடைக்கும் நிதியை நாங்கள் பயன்படுத்தவும், கையாளவும் இடைக்கால நிர்வாகத்தைக் கையளிக்கும்படி கேட்டால் அதனைக் கூடத் தட்டிக் கழிக்கும் நிலையிலேயே தென்பகுதித் தலைவர்கள் காணப்படுகின்றார்கள்.

தென்பகுதி தலைமைகளைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுடைய விடயத்தில் பல்வேறு தந்திரோபாயங்களையும் கையாண்டுகொண்டு இருக்கிறார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையில் எங்களிடையே எந்த வகையான பேதங்களும் இருக்கக்கூடாது. நாம் ஒற்றுமையாக இணைந்து செயற்பட வேண்டிய காலகட்டம் இதுவாகும்.

இன்றும் கூட எங்களில் ஒருசிலருக்கு தமிழ் உணர்ச்சி என்பது தோன்றவில்லை என்பதையிட்டு கவலைப்பட வேண்டி உள்ளது - என்றார்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றும்போது:-

விநாயகமூர்த்தியைப் பொறுத்தவரையில் குறுகிய காலம் நாடாளுமன்றத்தில் இருந்த போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டிய நல்ல பண்புகளை அவர் கொண்டுள்ளார். இவர் தனது பதவிக்காலத்தில் பல்வேறு உயர்ந்த சேவைகளைத் தமிழ் மக்களுக்காகச் செய்துள்ளார். இந்த வகையில் சிறையில் வாடிய இளைஞர்களின் விடுதலைக்காகவும் பாடுபட்டுள்ளார் - என்றார்.

இந்த விழாவில் தமிழ்க்காங்கிரஸ் சிரேஷ்ட உபதலைவர் குமரகுருபரன், அருட்கவி சி.விநாசித்தம்பி, க.ஆனந்தராசா, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அருட்தந்தை சி.ஜே. ஜெயக்குமார் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரைநிகழ்த்தினர். (எ-36)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு புதிய வீடுகளை அமைத்து வழங்குக

## வலி. வடக்கு பிரதேச செயலக கூட்டத்தில் தீர்மானம்

வலி.வடக்கு,டிசெ.23

வலி.வடக்கில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களின் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக தலா ஒருலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தீர்மானம் வலி. வடக்குப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரச அதிபரினால் அறிவிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களின் மேம்பாட்டுக்கான துரித அபிவிருத்தி செயற்பாடு பற்றியும் ஆராயப்பட்டது.

இதில் பல திணைக்களத் தலைவர்கள் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ சொந்தக் காணி இல்லாதவர்களுக்கு தற்காலிக வீடுகள் அடிப்படை வசதிகளுடன் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும்.

★ மலசல கூட வசதிகள் இன்றி இருக்கும் குடும்பங்களுக்கு அவற்றை அமைத்துக்கொடுக்க வேண்டும்.

★ சொந்த இடத்தில் மீளக்குடியேறி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கே கடந்த காலங்களில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மண்வெட்டி போன்ற உபகரணங்களை வழங்கின. இடம்பெயர்ந்த வேறு இடங்களில் விவசாய முயற்சிகளில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கும் இத்தகைய உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ பாடசாலை செல்லும் இடம் பெயர்ந்த பிள்ளைகளுக்கு பாதணிகள், கொப்பிகள் போன்ற கற்றல் உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ தொழில்கள் செய்ய முதலீடும் இன்றி இருக்கும் குடும்பங்களுக்கு வட்டி இல்லாக் கடன்கள் வழங்கப்பட வேண்டும்.

★ மக்கள் பல இடங்களில் மீளக் குடியேறியுள்ள போதிலும் இப்பகுதிகளுக்கு இன்று வரை மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதனைத் துரிதமாக வழங்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-86)

# வலி. தெற்கின் அபிவிருத்திக்கு சமுர்த்தி அதிகாரசபை நிதி

வலி.தெற்கு,டிசெ.23

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவின் கிராமிய அபிவிருத்திப் பணிகளுக்கென சமுர்த்தி அதிகாரசபையினால் 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியினைப் பயன்படுத்தி உடுவில் பிரதேச கிராமிய சமுர்த்தி செயலணிகள் பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுவருகின்றன.

ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட்டுள்ள கிராமிய சமுர்த்திச் செயலணிகள் தற்போது மேற்கொண்டு வரும் அபிவிருத்திப் பணிகளின் விவரம் பின்வருமாறு:-

★ உடுவில் மத்தி சமுர்த்தி செயலணி - மல்வம் பகுதியில் உள்ள பொதுக்கிணறு புனரமைப்பு.

★ சங்குவேலி சமுர்த்தி செயலணி - சங்குவேலி அந்திரான் பகுதியில் உள்ள பாலத்தின் வடிகால் அமைப்பு.

★ ஏழாலை மத்தி சமுர்த்தி செயலணி - ஏழாலை சாளையடி, ஏழுகோவிலடி பகுதிகளில் உள்ள விவசாய வீதிகள் புனரமைப்பு.

★ குப்பிளான் தெற்கு சமுர்த்தி செயலணி - குப்பிளான் வீரமனை - தையல்கடவை விவசாய வீதி புனரமைப்பு.

★ புன்னாலைக்கட்டுவன் வடக்கு சமுர்த்தி செயலணி - புன்னாலைக்கட்டுவன் குணயா விவசாய வீதி புனரமைப்பு.

இந்த அபிவிருத்திப் பணிகள் யாவற்றையும் அந்தந்தக் கிராம அபிவிருத்தி செயலணிகள் அந்தக் கிராமங்களில் உள்ள பொதுமக்களின் பங்களிப்புடன் மேற்கொண்டு வருகின்றன. (ம-152)

# மருத்துவபீடச் சிக்கல்: மாற வேண்டிய மனநிலை!

பல்கலைக்கழகங்கள் பட்டதாரிகளை உருவாக்கும் வேலையை விடுத்து 'அரசியல்வாதிகளை' உருவாக்கத் தொடங்கி விட்டன.

இது கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் வேதனையுடன் கூறிய விடயம். பல்கலைக்கழகங்கள் பற்றிய பொதுவான இக்குறிப்பு மருத்துவபீட மாணவர்களுக்கு விதிவிலக்காகவே இருந்து வந்தது. மருத்துவ மாணவனாகவோ அல்லது வைத்தியராகவோ இருக்கும்போது பகிஷ்கரிப்பு என்பது தவிர்க்கப்பட வேண்டும் என்பது அவர்களது பாடவிதானத்திலேயே உள்ளமைக்கப்பட்ட ஒன்று. வைத்தியச் சேவை என்பது புனிதமானது. இதனால் வைத்தியர்கள் அண்மையில் நாடளாவிய ரீதியில் நடத்திய வேலைநிறுத்தம் வைத்தியர்கள் சிலராலேயே விமர்சிக்கப்பட்டது.

இதெல்லாம் இப்படியிருக்க மருத்துவ மாணவர்கள் திடீரென பகிஷ்கரிப்புச் செய்து கவனத்தை தம்பால் திருப்பியிருக்கிறார்கள். 'கல்வி இடையூறின்றி தொடரவேண்டும்' என்பதே அவர்களின் பகிஷ்கரிப்புக் கோரிக்கை. அதாவது உங்களது (வைத்தியர்களது) சண்டையால் எங்கள் கல்வி பலிக்கடா ஆக்கப்படக் கூடாது என்பது அவர்களின் வெளிப்பாடு.

### வழமையான சண்டைகள்

வைத்தியர்களிடையே சத்திரசிச்சை நிபுணர்களும் (Surgeons) மருத்துவர்களும் (Physicians) ஒருவரை ஒருவர் 'கடித்துக் கொள்வது' இலங்கையில் நிகழும் வழமையான நிகழ்வு. ஆனாலும் அந்தப் பனிப்போர் மருத்துவ பீடமாணவர்களின் கல்வியை பாதிக்கும் வரை போவதில்லை. ஆனால், யாழ்ப்பாணத்தில் அதுவும் போர்ச்சூழல் தாக்கங்களிலிருந்து மீண்டு, வழமை திரும்பும் நிலையில், ஒருவார காலம் அவர்களது கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் கற்பது ஒருசில வருடங்கள் மேலதிகமாக எடுக்கும் நிலையை மாற்ற வவுனியா, மட்டக்களப்பு போன்ற வைத்தியசாலைகளில் கல்விச் செயற்பாடுகளை (Clinical appointments) யாழ். மாணவர்கள் செய்து தங்கள் கல்வியை துரிதப்படுத்தியுள்ளனர். இதற்காக அவர்கள் எதிர்நோக்கிய சிரமங்கள் பல. சாதாரணமாக ஐந்து வருடத்தில் அவர்கள் தங்கள் MBBS பட்டத்தைப் பெறவேண்டும். இந்த இலக்கை அடையும் நேரத்தில், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக பரீட்சைகளும், விடுதிவகுப்புகளும் (Ward Classes) பிற்போடப்பட்டுள்ளன.

### யார் பொறுப்பு?

சத்திரச் சிகிச்சைக் கல்விப் பகுதியை யார் தலைமை வகிப்பது என்பதே அடிப்படைப் பிரச்சினை. இந்தப் பிரச்சினை நிர்வாக மட்டத்தில் தீர்க்கப்படவேண்டும். மாணவர்கள் குழம்பியுள்ளனர். பேராசிரியர் குணநந்தனின் சேவையை பெற்றவர்கள் அவரது சேவை மிகச் சிறப்பானது. கற்பித்தல் திறமை (Art of teaching) உச்சமானது என புகழுகிறார்கள். அதேவேளை, யாழ்ப்பாணத்தில் விரும்பிச் சேவையாற்றும் சத்திரசிச்சை நிபுணர்களது சேவையும் தேவை. 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பார்கள். இங்கே கற்றவர்களிடையே காணப்படும் உட்பூசல்கள் ஏன் முளைத்தன என்பது புரியாத புதிராகவே உள்ளது. இந்த நிலையில் நிர்வாகம் சிறப்பாகச் செயற்பட்டு இருவரது சேவைகளையும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

### பின்தங்கும் முன்னேற்றம்

யாழ். மாணவர்களின் Professional Appointment இன்று Professor இல்லாத நிலைமையில தான் நடக்கிறது. ஆனாலும், யாழ். மாணவர்கள் சொந்த அயராத முயற்சியால் இன்றும் தங்கள் உயர்தரத்தை இன்னமும் பேணிக்கொண்டே இருக்கிறார்கள். ஆக, உயர்வசதி வாய்ப்புகள் கிடைத்தால் அவர்கள் இன்னமும் முன்னேறுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

பட்டப்பின்படிப்பிற்கு கொழும்பு நோக்கி மாணவர்கள் நகர்கிறார்கள். அதே வாய்ப்பை யாழ்ப்பாணத்திலும் வழங்கமுடியும். அதற்கு பேராசிரியர்கள் நிறையவே தேவைப்படுவார்கள். ஆனால் இருக்கும் பேராசிரியர்களை வீட்டுக்கனுப்பும் வேலை கவலைக்குரியது.

தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் CT இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இதன் பயன்பாடு உச்சமாக இருக்க முக்கியமாக நரம்பியல நிபுணர்கள் தேவைப்படுவார்கள். இந்த நிலையில் ஒரு நிபுணரது இழப்பு யாழ். போதனா வைத்தியசாலையால தாங்கமுடியாததாகவே இருக்கும்.

இலங்கை அரச வைத்தியர்கள் பலர் தனியார் வைத்தியசாலைகளிலும் வேலைசெய்து இரட்டிப்பு ஊதியம் பெறுகிறார்கள். கொழும்பில் நரம்பு சத்திரச்சிகிச்சை நிபுணரை தனியார் நிலையத்தில் சந்திப்பது கடினம் எனும் அளவிற்கு அவர்கள் அங்கு 'பிஸி' யாக உழைக்கிறார்கள். இங்கே கூட அநேக மருத்துவர்கள் தனியார் சேவையையும் செய்கிறார்கள். சத்திர சிகிச்சை வைத்தியரை சந்தித்து ஆலோசனை பெற (தனியார்) ஏறத்தாழ 200 ரூபா அறவிடுகிறார்கள். தனியார் பயிற்சி (Private Practise) செய்து ஊதியம் பெறாத வைத்தியர்களே இல்லை எனலாம். அந்த வகையில் தனியார் பயிற்சி செய்யாத நிபுணர் குணாநந்தன் போற்றப்பட வேண்டியவரே

### விடைதெரியாத கேள்விகள்

இங்கே சர்ச்சைக்குள்ளாகும் நிபுணர் ஏன் நிரந்தர சேவையில் இணையாமல் ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்ய முனைகிறார் யாழ். போதனா வைத்தியசாலையில் நரம்பியல் சத்திரச்சிகிச்சை விடுதி (Neuro Surgical ward) ஆரம்பிக்கப்படாதது ஏன்? நிபுணர்களிடையே ஏற்படும் சிறுசிறு கசப்புணர்வுகளை தீர்க்க பல்கலை நிர்வாகமும் வைத்தியசாலை நிர்வாகமும் முனையாதது ஏன்? இனி வரப்போகும் அல்லது வரவிரும்பும் நிபுணர்களுக்கும் இதே வரவேற்புத்தான வழங்கப்படுமா? மாணவர்களுக்கு இதே வரவேற்புத்தான் வழங்கப்படுமா? மாணவர்களுக்கு கற்பிக்கமாட்டோம் (தீர்புத் தெரியும் வரை) என வைத்தியர்கள் எடுத்தமுடிவு சரியானதா? இவ்வாறு நிறைய வினாக்களுக்கு உண்மையிலே விடை கிடைக்காமலே போய்விடும்.


### பல்கலைக்கழகங்களின் சாபக்கேடு

விரிவுரையாளர்களைப் பகைப்பது எதிர்காலத்தைப் பாதிக்கும் என்பது கசப்பான உண்மையாகவே இருக்கிறது. இதே காரணத்தால் மாணவர்கள் பக்கசார்ந்து நிற்பதை தவிர்த்தே வருகிறார்கள். இப்போது அவர்களின் தேவை எல்லாம் தங்கள் பட்டப்படிப்பைப் பங்கமில்லாமல் முடிப்பதுதான். இதனால் தன் ஆசிரியருக்குச் செய்யவேண்டிய கைம்மாற்றை அவர்கள் தவற விடுகிறார்களா என்ற கேள்விக்கு விடை கூற முடியாத தர்மசங்கட நிலைமையிலேயே அவர்களும் உள்ளார்கள்.

கி.குருபரன்
- கொழும்பு பல்கலைக்கழகம் -

### பேணப்பட வேண்டிய கௌரவம்

மக்கள் மத்தியில் வைத்தியர் ஒரு கடவுள் என்ற மதிப்பிலேயே உள்ளார். எனவே, வைத்தியர்கள் நீதிமன்றம் ஏறுவது என்பது அவர்களது கௌரவத்தை குறைக்கவே செய்யும். தமக்கிடையே சண்டையிடும் சாதாரணமானவர்கள் என்ற எண்ணக்கரு பக்களிடையே ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது வைத்தியர்களின் இந்த நிலைக்கு வைக்கப்படுகிறது. ★



## நூல் வெளியீடு

வலி.தெற்கு,டிசெ.23

சுகாதாரக் கல்வி ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் எழுதிய 'சுக வாழ்க்கை' பாகம் 2 நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அரசோலை விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களின் சமாசத்தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ். பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக டாக்டர் ஆர்.தெய்வேந்திரன், டாக்டர் செல்வி என்.கனகரத்தினம், டாக்டர் ஏ.கணேஸ்வரராசா, மக்கள் வங்கி முகாமையாளர் அ.குகதாசன், கவிஞர் சோ.பத்மநாதன், அதிபர் துளங்கரசு ஆகியோர் கலந்துகொள்வார்கள். வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அபிவிருத்தி ஆலோசகர் டாக்டர் என்.சிவராசா நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார். (ம-152)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்களுக்கு அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழ் (USAID) நடைபெற்ற செயலமர்வின் இறுதிநாள் நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அமெரிக்க உதவித்திட்டத்தின் திட்ட அலுவலர் அஷான் மல்லசேகரா நிகழ்வில் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கவுள்ளார். செயலமர்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் அனைவரையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ம-10)

## கடலுணவு ஏற்றுமதியாளருக்கு பங்கு லாபம்

குருநகர்,டிசெ.23

குருநகர் ஐக்கிய கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு இவ்வாண்டுக்கான பங்குலாபத்தை வழங்கிவருகின்றது.

இவ்வாண்டுக்கான பங்குலாபங்களை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. பொதுமக்கள் முதலிட்ட பங்குகளின் தொகைக்கேற்ப அவர்களுக்குப் பங்குலாபங்கள் வழங்கப்பட்டன என்றும் -

வருடா வருடம் நத்தார் தினக் கொண்டாட்டங்களுக்காக இப்பங்குலாபங்கள் தமது சங்கத்தால் வழங்கப்பட்டு வருவது வழக்கம் என்றும -

குருநகர் ஐக்கிய கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (எ-51)

## மலசலகூடம் நிறுவ உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.23

தொண்டமனாறு, கெருடாவில் பகுதியில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட சுமார் 125 குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகளைச் செய்துகொடுப்பதற்கென இந்து கலாசார அமைச்சு சிமெந்து பைக்கற்றுக்களை வழங்கியுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமம் இந்த சிமெந்து பைக்கற்றுக்களை வழங்கும் பொறுப்பை ஏற்றுள்ளது என்றும் -

முதற்கட்டமாக தற்போது ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 5 பைக்கற்றுகள் என்ற அடிப்படையில் சிமெந்து பைக்கற்றுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும்-

ஆச்சிரமத்தின் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

* * *

வலி.கிழக்கு,டிசெ.23

இருபாலை கிழக்கு பகுதியில் வசிக்கும் வசதி குறைந்த குடும்பங்களுக்கு இந்துகலாசார அமைச்சின் உதவியுடன் மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக மேற்படி கிராமத்தில் வசிக்கும் 150 குடும்பங்களுக்கு மலசலகூடம் நிறுவுவதற்கென தலா 5 பைக்கற் சிமெந்து வழங்கப்பட்டுள்ளதாக இருபாலை கிழக்கு ஸ்ரீவிக்னேஸ்வரா சனசமூக நிலையத் தலைவர் ந.அப்புத்துரை தெரிவித்தார். (எ-180)


## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

### சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(சி-31680) (25-18)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1935 - 03 - 17



உதிர்வு 2001 - 12 - 23

### திருமதி தம்பித்துரை மரியம்மா

ஆண்டுகள் இரண்டானாலும் ஆறவில்லை நின்துயரம்
என் சீவியத்தில் என்னை நேசித்தவர்களே! என்னை
அறிந்தவர்களே எனக்காக இறைவனிடம் வேண்டிக்
கொள்ளுங்கள்! அளவற்ற நீதியும் கருணையும்
நிறைந்த இறைவா! மெய்யான ஆறுதலின் தேவனே
இரக்கம் காட்டுவதும் பொறுத்தருள்வதும் உமது இயல்பே!
திருவுளமான தாயார் மரியம்மாவின்
குற்றங்களை மன்னித்து ஒளியும், அமைதியும்
சமாதானமும் நிறைந்த நித்திய பேரின்பத்தையும்
இளைப்பாற்றியையும் இவருக்கு அளித்தருளும்!

என்றும் நினைவில் வைத்திருக்கும்:
கணவர்,
உறவினர்கள்.

*185, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (26166) (25-18)

## துயர் பகிர்கின்றோம்.

உடுவில் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி ஹேமரஜனி சசிதரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

### பொன்னையா மகேசன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*வலி.தெற்கு, உடுவில்.* (சி-32191) (25-18)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
மன்றம்.

## ஓராண்டு நினைவு அலைகள்

பிறப்பு 10 - 07 - 1943



இறப்பு 02 - 01 - 2003

### திருமதி ஆறுமுகம் மங்களேஸ்வரி

நொந்து சுமந்து பெற்று
நோகாமல் ஏந்தி முலை தந்து
கண்மணிகள் போல் காப்பாற்றி
அல்லும் பகலும் அன்புடன் வளர்த்து
பல்கலைகள் கற்க வைத்து
பாரினில் சிறப்பாக வாழவைத்து
நல்வாழ்வு வாழ்வதற்கு
அனைத்துப் பணிகளையும்
அன்புடனே செய்து
அணையாத தீபம் போல்
அன்னையாய் வீற்றிருந்து
ஆறாத்துயரில் அனைவரையும் ஆழ்த்திவிட்டு
இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்து விட்டாய்!

*ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*நி.மு.: அம்பாள்வளவு,*
*குமரபுரம்,*
*பரந்தன்.*
(25800) (25-18)

*த.மு.: இல. 06,*
*உள்வட்டவீதி,*
*வவுனியா.*


என்றும் உம் நினைவுடன் வாழும்:
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## COMPUTER COURSES

**New Batches Start**
Batch 1 : 03.01.2004
Batch 2 : 05.01.2004
Batch 3 : 14.01.2004
at 10.00 a.m



உங்கள் முயற்சிக்கு...




இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்



Diploma in Computer Programming
Diploma in Java Programming
Diploma in Visual C Programming
Diploma in Visual Basic Programming
Diploma in Information Technology

BTEC HND
World Class Qualifications
Delivered Locally
Recognized Globally

AN INTERNATIONALLY RECOGNIZED CERTIFICATE COURSE IN COMPUTERIZED ACCOUNTING

NEXT GENERATION

Diploma in MS Office
Diploma in Internet Technology
Diploma in Hardware Technology
Diploma in Eng. Drawing & AutoCAD
Diploma in Desk Top Publishing

Adobe PageMaker · Adobe Photoshop 07 · Adobe Premiere · Macromedia Flash · Corel DRAW · MS Word · MS Excel · MS Access · ORACLE 9i · Pascal

கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாகக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
An *Edexcel* Approved Training Centre
Head Office: IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-222 2831 Email: iis@sltnet.lk
Branch: IIS, Nelliyady, Karaveddy

# சமஷ்டிக்கு மக்கள் தயார்!

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. ஐ.எவ்.ஜே. எனப்படும் சர்வதேச பத்திரிகையாளா அமைப்பைச் சேர்ந்த சுனந்த தேசப்பிரிய இந்த பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். சிங்களப் பத்திரிகையாளர்கள் மத்தியில் சமாதானத்துக்காக உழைப்பவராகவும் இனவாதப் போக்குக்கு எதிராகச் செயற்படுபவராகவும் இனங்காணப்பட்ட ஒரு சிறந்த பத்திரிகையாளர் அவர்.

சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றுக்காக நாங்கள் அழைக்கப்பட்டிருந்தபோதும், கொழும்பில் அரசியல் துறைசார்ந்தவர்களையும் குருநாகலில் சிங்கள பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான வாய்ப்புக்களையும் சர்வதேச பத்திரிகையாளர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டதன் பின்னர் தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில இந்தச் சந்திப்புக்கள் முக்கியமானவையாக இருந்தன.

அரச மற்றும் எதிர்க்கட்சி முக்கிய தலைவர்களைச் சந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனினும், தெற்கில் சமாதானத்துக்கு பலத்த எதிர்ப்பைக் காட்டிவரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி (பொ.ஐ.மு.) மற்றும் ஜனதா விமுக்திப் பெரமுன (ஜே.வி.பி.) ஆகிய கட்சிகளின் பிரமுகர்களை நாடாளுமன்றக் கட்டடத்தினுள் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

**தமிழ்க்கொலை**

இந்த நாட்டின் உயர் அதிகார சபையான நாடாளுமன்றத்துக்குள் நாம் நுழைந்தபோதே எமக்கு ஏற்பட்டது நம்பிக்கையீனம்தான். வாசலில்மாட்டப்பட்டிருந்த பெயர்ப் பலகையில நாடாளுமன்றம் என்பதற்குப் பதிலாக நாடாள மன்றம் என்ற தமிழ்க் கொலை தான் கண்ணிற்பட்டது. கேட்டதற்கு, நீண்டகாலமாகச் சுட்டிக்காட்டியும் இது விடயத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று பதில் கிடைத்தது.

தமிழர் விடயத்தில் அக்கறை எடுக்காது ஏனோதானோ என்ற போக்கில் செயற்படும் தெற்கு அதிகார வர்க்கத்தின் முகத்துக்கு நாடாளுமன்றப் பெயர்ப்பலகை கட்டியம் கூறியது.

இதனையே மாற்ற முடியாத அல்லது விரும்பாத இந்த அரசாங்கங்களால் ஐம்பது வருட வரலாறு கொண்ட தமிழர் பிரச்சினையை எப்படித் தீர்க்க முடியும்? உள்ளே கேள்வி எழுந்தது. வடக்கில் இருந்து வருவோருக்கு சிங்கள அரசுகள் மீதான நம்பிக்கையீனம் என்பது இயல்பானது தானே.

இன்றைய அரசியல் அதிகாரப் போட்டியின் இடையில் சமாதான முயற்சிகளின் நிலையும் அதே அக்கறையற்ற நிலையில் இருப்பதாகத் தானே தெரிகின்றது.

சோதனைகளை முடித்துக்கொண்டு உள்ளே சென்றோம். எந்தக் கதிரைகளுக்காக அரசியல் வாதிகள் அடித்துக்கொண்டார்களோ, அடித்துக் கொள்கிறார்களோ அவை அனைத்தும் நாடாளுமன்றத்தில் பத்திரமாக இருந்தன. ஆள்களைத்தான் காணவில்லை.

**சரத் அமுனுகம**

குழு அறை ஒன்றில் பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம குடாநாட்டில் இருந்து சென்ற பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். வடபகுதியில் இருந்து வந்திருந்த பத்திரிகையாளர்களைச் சந்திப்பதில் தான் மிக்க மகிழ்ச்சி அடைவதாக ஆரம்பத்திலேயே குறிப்பிட்டுக்கொண்டார்.

இன்றைய அரசியல் நிலை பற்றி விளக்கம் ஒன்றை அளித்துவிட்டு பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். பொ.ஐ.மு. கட்சி மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள மற்றும் பத்திரிகைகளில் வரும் செய்திகள் என்பவற்றுக்கு மாறாக பொ.ஐ.மு. சமாதானத்துக்கு முழு ஆதர வாக இருக்கின்றது, என்கிறார் அவர். இன்றைய சமாதான சூழலை ஏற்ப டுத்தியவர் சந்திரிகாதான். அவரால் தான் ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க) இன்று சமாதானத்தை முன்னெடுத்துச் செல்கின்றது. அதற்காக நீங்கள் அவருக்கு நன்றி தெரிவிக்கவேண்டும் என்றுகூட அவர் சொன்னார்.

☆ போர் நிறுத்தப்படவேண்டும்

☆ இனப்பிரச்சினைகக்குப் பேச்சு மூலமே தீர்வு காணவேண்டும்

☆ அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்

ஆகிய மூன்று விடயங்களிலும் பொ.ஐ.முன்னணி தெளிவாக இருக்கின்றது என வலியுறுத்தினார்.

பாதுகாப்பு அமைச்சைத் தான் பொறுப்பேற்றுக்கொண்டதற்கு நாட்டின் தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியமைதான் காரணம் என்று ஜனாதிபதி தெரிவித்து வருகின்றார்.

ஆனால், "காலங்காலமாகப் பாதுகாப்பு அமைச்சு இந்த நாட்டின் உயர் தலைவரிடம் தான் இருந்து வந்திருக்கிறது. முதன்முறையாக 2003ஆம் ஆண்டுதான் அது ஜனாதிபதியிடம் இருந்து பிரதமரிடம் சென்றது. அரசமைப்பின்படியும் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம்தான் இருக்கவேண்டும். வரலாறு இப்படி இருக்கும் போது, ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சு யாரிடம் இருக்கவேண்டும் என்று உயர் நீதிமன்றத்திடம் ஆலோசனை கேட்டார். நீதிமன்றம், அமைச்சு ஜனாதிபதியிடம்தான் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. அதன்படி ஜனாதிபதி செயற்பட்டார்" என்று மிக நேர்த்தியாக ஜனாதிபதியின் செயற்பாடுகளையும நிலைப்பாடுகளையும் பாதுகாத்தார்.




எந்த இடத்திலும் சமாதானத்துக்கோ விடுதலைப்புலிகளுக்கோ எதிரான கருத்துக்களை அவர் தெரிவிக்கவில்லை.

பொ.ஐ.முன்னணி சமாதானத்துக்கு ஆதரவாக இருப்பதாகக் கூறுகின்றீர்களே அப்படியானால் ஏன் ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்க முயற்சி செய்கிறீர்கள்? இது பத்திரிகையாளர்களின் கேள்வி.

**ஜே.வி.பியுடன் கூட்டணி**

"நாங்கள் ஜே.வி.பியுடன் தேர்தலுக்காக மட்டும்தான் கூட்டணி அமைக்க இருக்கின்றோம்" என்று ஒரே போடாகப் போட்டார். ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டால் எமக்கு போனஸ் ஆசனங்கள் கிடைக்கும். கடந்த தேர்தலில் மொத்தமுள்ள 24 போனஸ் ஆசனங்களில் ஒன்று மட்டுமே தமக்குக் கிடைத்தது என்றும் அதற்காகத்தான் தாங்கள் தேர்தலில் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர முயல்வதாகவும் தெரிவித்தார்.

சமாதான விடயத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு அபிப்பிராயம் இருக்கலாம். கூட்டணி அமைப்பதற்காக அவற்றை மாற்றிக் கொள்ளவேண்டும் என்றில்லை. என்றாலும் இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு என்று ஒன்று வரும் போது அது மக்களின் அபிப்பிராயத்துக்கு விடப்படவேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது.

சமாதான விடயத்தில் தமது கட்சிகளும் புலிகளுக்கும் இடையில் மட்டுமே தெளிவான பார்வை இருக்கின்றது என்றும் ஏனைய கட்சிகள் அவ்வாறு இல்லை என்றும் வலியுறுத்தினார். புலிகளும் தாமும் மட்டுமே இனப்பிரச்சினை தொடர்பான எழுத்து மூலமான வரைபை முன்வைத்துள்ளனர் என்று உதாரணமும் சொன்னார்.

"விடுதலைப் புலிகள் தற்போது முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக வரைபை எமது கட்சி முற்றாக நிராகரிக்கவில்லை. அதிலுள்ள சிலவற்றை ஏற்கலாம். சிலவற்றை ஏற்க முடியாது. எனினும் அதில் மத்திய அரசுடனான தொடர்பு என்ன என்பதுபற்றி எதுவும் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை" என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் தற்போதைய அரசியல் நடவடிக்கையினால் ஐ.தே.கட்சியும் பொ.ஐ.முன்னணியும் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நிலைக்கு வந்துள்ளன என்பதாக அவரது கருத்துக்கள் இருந்தன.

பொ.ஐ.முன்னணியின் வழமையான கருத்துக்களில் இருந்து பெரிதும் வேறுபட்டும் பத்திரிகைகள் மூலம் அறியும் கருத்துக்களில் இருந்து மாறுபட்டதுமான கட்சியின் மென்போக்கான ஒரு முகத்தை சரத் அமுனுகம அங்கு வெளிப்படுத்தினார்.

வெளியேறும்போது கூடவந்திருந்த குருநாகலைச் சேர்ந்த நண்பர் ஒருவர் சொன்னார் ஜனாதிபதி சந்திரிகாவைப் பற்றி வடபகுதிப் பத்திரிகையாளர்கள் கொண்டிருந்த எதிர்மறையான கருத்துக்கள் இன்றைய பத்திரிகையாளர் மாநாட்டுடன் மாறியிருக்கும். அந்தளவுக்கு, சரத் அமுனுகம பேசினார்.

அந்தளவுக்கு, சமாதானத்தின் பக்கம் பொ.ஐ. முன்னணியினரும் ஜனாதிபதியும் அக்கறை செலுத்துகின்றனர் என்றும் சரத் அமுனுகம விவரித்தார். வடபகுதியில் இருந்து வந்திருந்த தமிழ்ப் பத்திரிகையாளர்கள் என்பதனால் அவர் அவ்வாறு பேசினாரோ என்று எண்ணத் தோன்றியது.

**நந்தன குணதிலகவுடன் சந்திப்பு**

சரத் அமுனுகமவைச் சந்தித்துவிட்டு வெளியேறிய போது இடையில ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலகவை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

தாங்களும் சமாதானத்துக்கு ஆதரவாக இருக்கின்றனர் என்றே அவர் எங்களிடம் சொன்னார். விடுதலைப் புலிகளின இடைக்கால நிர்வாக வரைவையார் நிராகரித்தது? நாங்கள் அப்படிச் சொல்லவேயில்லையே! என்று எம்மிடம் எதிர்க் கேள்வி கேட்டார்.

ஜே.வி.பி. புலிகளின் இடைக்கால வரைபை நிராகரித்துவிட்டது என்றே பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் வெளியாகி இருந்தன. அதனை நந்தன குணதிலக மறுத்தார். தாங்கள் அவ்வாறு நிராகரிக்கவில்லை என்று சொன்னார்.

இலங்கையில் உள்ள எல்லா இனங்களுக்கும் சமமான உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதே ஜே.வி.பியின் கொள்கை என்றும் அது இந்த முதலாளித்துவ அரசுகளினால் கிடைக்கப்பெறாது. இலங்கையில் ஒரு சோஷலிஷ அரசு உருவாகும்போதே அது சாத்தியப்படும் என்றும் தமது சித்தாந்த வாதங்களையும் அவர் முன்வைக்கத் தவறவில்லை.

> என்னைப் பொறுத்தவரையில் மக்கள் இப்போது சமஷ்டிக்குத் தயாராக இருக்கிறார்கள். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அரசியல்வாதிகள் முன்வரவேண்டும். விடுதலைப்புலிகளும் தனி நாட்டுக் கோரிக்கையிலிருந்து விலகி சமஷ்டிக்குள் வருவதற்குள் இணங்கியிருக்கிறார்கள். எனவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

பத்திரிகையாளர்கள் அவரிடம் நிறையவே குறுக்கு கேள்விகள் செய்தனர். அவற்றில் இரண்டு கேள்விகள முக்கியமானவை.

*ஒன்று:* யாழ்ப்பாணத்திற்கு ஒரு தடவை விஜயம் செய்த ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜயசேகர, தமிழ மக்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமை இருக்கின்றது என்று கூறியிருந்தார். ஆனால், இப்போது உங்கள் கட்சி அதனை எதிர்க்கின்றது. அன்றிருந்த ஜே.வி.பி. கட்சிக்கும் இன்றிருக்கும் கட்சிக்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் காணப்படுகின்றதே?

நந்தன குணதிலக இதற்கு ராஜதந்திர ரீதியில்தான் பதிலளித்தார். அதாவது, கட்சியின் கொள்கைகள் ஒன்றாகவே உள்ளன. ஆனால், காலத்துக்குக் காலம் அணுகுமுறைகள்- செயற்பாடுகள் - மாற்றமடைகின்றன என்றார்.

*இரண்டாவது:* ஜே.வி.பி. கடந்த காலங்களில் சாதாரண பொதுமக்கள பலரைக் கொன்று குவித்துள்ளது. ஆனால், விடுதலைப் புலிகளை மட்டும் ஏன் பயங்கரவாதிகள் என்று கூறுகின்றது?

நந்தன இதற்கும் நேரடியாகப் பதிலளிக்கவில்லை. அரச பயங்கரவாதத்தால் வடக்கிலும் கிழக்கிலும் சாதாரண பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். அதற்காக சிங்களப் பொது மக்கள் கொல்லப்படுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பது தான் அவரது பதிலாக இருந்தது. நேரடியாகப் பதிலளிப்பதில் இருந்து அவர் தன்னைத் தவிர்த்துக் கொண்டார்.

அவர் பேசியதிலிருந்தும்கூட ஜே.வி.பியினது செயற்பாடுகள் என்று நாம் அறிந்திருந்தவற்றிலிருந்து பெரிதும் மாறுபட்ட கருத்துக்களையே பெற்றுக்கொள்ள முடிந்தது.

எல்லோருமே அரசியல்வாதிகள் அல்லா. அதனால் பெரியளவில் அக் கருத்துக்கள் பற்றி யாருமே அலட்டிக் கொள்ளவில்லை போன்றேபட்டது. இருந்தாலும் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் வடக்கில் இருந்து வந்த பத்திரிகையாளர்களுக்காக பேச்சளவிலாவது தம்மை நல்லவர்களாக காட்டிக்கொள்ள முனைந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடக்கூடிய ஒரு விடயம்தான்.

**குமார் ரூபசிங்க சொல்லியவை**

கொழும்பில் நாம் சந்தித்த ஒன்றுபட்டு வாழ்வதற்கான சமாதான சங்கத் தலைவர் குமார் ரூபசிங்க, இவர்களது கருத்துக்களுக்கு எல்லாம் முற்றிலும் மாறுபட்ட கருத்துகளை எம்முன் வைத்தார்.

சமாதானத்துக்கான அடித்தளம் சரியாகக் கீழ்மட்ட மக்களிடம் இடப்படவில்லை. அதற்கான செயற்றிட்டங்கள எவையும் அரசினாலோ வேறு எந்த அமைப்புக்களினாலோ மேற் கொள்ளப்படவில்லை. மாறாக சமாதானத்துக்கு எதிரான தரப்புக்களின் குரல் ஓங்கி ஒலிக்கின்றது என்பது அவரது பிரதான குற்றச்சாட்டாக இருந்தது.

**அரசியல் இழுபறி**

இரு தலைவர்களிடமிருந்தும் (ஜனாதிபதி - பிரதமர்) அதிகாரப் போட்டியை மக்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த நாட்டில் சமாதானம் உருவாவதற்கு அவர்கள் எதனையாவது செய்யவேண்டும் என்றுதான் பொதுமக்கள் கேட்கிறார்கள். ஆனால், அடுத்ததாக தான் ஜனாதிபதிக் கதிரையில் அமர வேண்டும் என்று பிரதமருக்கு கனவு, ஜனாதிபதிக்கு எதனையாவது செய்து மூன்றாவது முறையாகவும் தான் ஜனாதிபதியாக முடியுமா என்ற எதிர்பார்ப்பு. தற்போதைய அதிகார இழுபறிக்கு அடிப்படைக் காரணம் இது தான். இதற்காகவே ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் அரசிடம் இருந்து பறித்தார்.

இப்படி தற்போதைய அரசியல் நிலை குறித்து சிறு உரையே நிகழ்த்தினார் அவர்.

அவருடனான சந்திப்பின் போது அவர் தெரிவித்த முக்கிய விடயங்களை சிலவற்றை இங்கே சொல்லலாம்.

தற்போது இரு கட்சிகளும் தேர்தலுக்குத் தயாராகின்றன. தேர்தல் ஒன்று நடந்தால் அது இதுவரையில் இல்லாத வன்முறைகள் நிறைந்ததாக இருக்கும். ஜனவரி மாதத்தில் நடைபெறும் என்று சொல்லப்படும் விடுதலைப் புலிகளுடனான பேச்சு இன்னும் பின்தள்ளப்படும். ஜப்பான் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதி உதவிகள் குறையும். புலிகள் முன்வைத்த இடைக்காலத் தீர்வுத் திட்டம் மறக்கப்பட்டுவிடும்.

ஒருவேளை தேர்தலில் பொ.ஐ. முன்னணி வெற்றிபெற்றால், இந்த நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் வரும். இனவாதம் பேசும் ஜே.வி.பியுடன் சேர்ந்து பொ.ஐ.மு.தேர்தலில் நின்றால விடுதலைப் புலிகளுடன் பேசுவதை ஜே.வி.பி எதிர்க்கும். அந்த நிலையில் மீண்டும் யுத்தம் வருவது தவிர்க்க முடியாதது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஒரு இணக்கத்தைக் காணபதற்கான பேச்சுக்கள் தற்போது நடக்கின்றன. அதில் இறுதி முடிவு எடுக்கப்படுவதற்கான கடைசித் திகதி 15ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது அது பிற்போடப்பட்டுள்ளது. இது ஒரு நல்ல சமிக்ஞை. என்றாலும் அவர்கள் இருவருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவேண்டும். வழமை போன்று வாய்மொழி உறுதிகளாக அவை இருக்கக்கூடாது. சரியான புரிந்துணர்வுடன் செய்துகொள்ளப்படும் எழுத்து வடிவிலான ஒப்பந்தத்தின் மூலம் சமாதான முயற்சிகளுக்கும் சரி நாட்டின் அபிவிருத்திக்கும்சரி யார் பொறுப்பு என்பது தெளிவுபடுத்தப்படவேண்டும். மக்களுக்கு அவர்கள் பதில் சொல்லியாகவேண்டும்.

**தீர்வுத் திட்ட வரைவு**

1997இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தது. தற்போது விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக வரைவுக்கும் அதற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. சுதந்திரக் கட்சியின் தீர்வுத் திட்டத்தில் சொல்லப்பட்ட நிறைய விடயங்கள் புலிகளின் திட்டத்தில் உள்ளடகப்பட்டுள்ளன. ஆனால், அதனை ஆராய்ந்து பார்க்காமலேயே சுதந் திரக் கட்சி உடனடியாக நிராகரித்து விட்டது.

1997இல் சுதந்திரக் கட்சியின் தீர்வுத் திட்டத்துக்கு மீண்டும் மீண்டும் அழுத்தங்கொடுத்து 2000ஆம் ஆண்டு பொ.ஐ.முன்னணியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தின் நிலைக்கு அதனைத் தள்ளியது ஐ.தே.கட்சிதான். இப்போது புலிகளின் வரைவு தொடர்பாக அது என்ன செய்யப்போகின்றது.

எம்மைப் பொறுத்தவரையில் புலிகளின் தீர்வுத்திட்டம் ஒரு நல்ல சமிக்ஞை. அதனை கௌரவமான முறையில் ஏற்றுக்கொள்ளவேண்டும். நாடாளுமன்றத்துக்கு அதனை எடுத்துச் சென்று விவாதிக்க வேண்டும். அதன் அடிப்படையில் மீண்டும் பேச்சை ஆரம்பிக்கவேண்டும். வடக்கு - கிழக்கில் புனரமைப்புப் பணிகளைச் செய்வதற்கு அவர்களுக்கு ஒரு நிர்வாகக் கட்டமைப்பு அவசியம். அத்தகைய பணிகளை நாம் மேற்கொள்ள முடியாது. ஏனென்றால் கடந்த 50 வருடங்களாக நாம் அவற்றைச் செய்யவில்லை. எனவே அவர்கள் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிர்வாகம் ஒன்றைக் கேட்பதில் எந்தத் தவறும் இல்லை. அதில் சில விடயங்கள் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கலாம். அவற்றைப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதனைவிட்டு புலிகளின் வரைவு தனிநாட்டுக்கான அடிப்படை என்று கூறிக் கொண்டிருப்பது ஏற்புடையதல்ல.

**பிரேம்**

மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். அதற்காக மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

☆ உடனடியாகப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், குருவி இனங்கள், கூடுகள், பொமேரியன் நாய்கள் என்பன விற்பனைக்கு உண்டு. 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (26028)

பிரப்படி லேன், கொக்குவிலில் 1½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடும் கலட்டி அம்மன் கோயில் வீதியில் 1½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.த.இரட்ணராஜா, லஷ்மி பேக்கரி, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம். (26190)

பொற்தொழிலாளர் உபயோகத்துக்கான தகடு, கம்பி அரைக்கும் சிறிய, நடுத்தர பெரிய மெசின்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.ரவிதரன், 213/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 222 7257 (26138)

## ஆங்கிலக்கல்வி

மிகவும் இலகுவான முறையில் அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன் கற்பிக்கப்படும். மற்றும் 2004 ஆம் ஆண்டு G.C.E. O/L English வகுப்புகள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்க முடியும். தொடர்பு: பார்த்திபன், இல.195/5, கில்னர்லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (26136)

## தவறிவிட்டது

585, சிங்காரயர் ஒழுங்கை கல்வியங்காட்டைச் சேர்ந்த இராசதுரை சிவச்சந்திரன் என்பவரின் தேசிய அ.அ. (691230600V), விசேட அ.அ. (0903019097) என்பன 08.12.2003 இல் கல்வியங்காட்டுக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (26186)

## கலைவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.23

கைதடி மேற்கு, சரஸ்வதி அறவழி மழலைகள் கல்விப்பூங்காவின் வருடாந்தக் கலை விழாவும் முன்பள்ளி திறப்பு விழாவும் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் சி.தர்ஷன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (ம-7)


## ஆள் தேவை

தையல்
வேலை செய்வதற்கு
ஆள்தேவை
தொடர்பு:
குமார் தையல் அகம்,
தாவடி.
0777 111486
(26185) (25)

## வேலையாள் தேவை

கோழிகளைப் பராமரிப்பதற்கு வேலையாள் தேவை. தங்கியிருப்பவர்கள் கூடுதலாக விரும்பப்படுவர். பொருத்தமான வேதனம் வழங்கப்படும். இருபாலாரும் நேரில் வரவும்.

தொடர்பு:
திரு.வை.சிவகுமார்
இல.461, நாவலர் வீதி,
(அத்தியடிச் சந்தி) யாழ்ப்பாணம்.
222 7366
077 6180675
(26183) (25)

பருத்தித்துறையில் முன்னணியில் நிற்கும்

### நியூ றோயல் கல்வி நிலையம்

A/L 2006 ஆண்டுக்கான புதிய வகுப்புகளை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மாணவர்களே

பொருளியல்: M.விக்கி B.A(Hons)
(யாழ்நகர்)
கணக்கியல்: N.ஜெயகணேஸ்
வணிகக்கல்வி: V.முரளி
(யாழ்நகர்)
தமிழ்: S.முகுந்தன்
அளவையியல்: N.சுரேஷ் B.B.A.(Hons)
P.சிவானந்தன்
இந்துநாகரிகம்: பிரபல ஆசிரியர்
நிர்வாகி,
நியூறோயல் கல்வி நிலையம், (26191)

# நெல்லியடியில்

## ASIAN COMPUTER SYSTEMS

ICM England

ஜனவரி முதல் வாரத்தில்


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

### படவரைஞர்களைப் பதிவுசெய்தல் - 2004

*தேவையான தகைமைகளும், நிபந்தனைகளும்*

1) அங்கீகரிக்கப்பட்ட படவரைஞர் பயிற்சிநெறி அல்லது தேசிய தொழில் நுட்பவியல் சான்றிதழ் (குடியியல்) அல்லது தேசிய தொழில் நுட்பவியல சான்றிதழ் (கணிய அளவையியல்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் இதற்குச் சமமான சான்றிதழ் பெற்றிருத்தல வேண்டும்.
2) சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுடன் தொழில்நுட்பச் சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளையும் இணைத்து விண்ணப்பித்தல் வேண்டும்.
3) தேர்ந்தெடுக்கப்படும் படவரைஞர்கள் பதிவுக்கட்டணமாக ரூ.500/- செலுத்துதல் வேண்டும்.
4) பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 15.01.2004 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
2003.12.22. (C/32203)(34-11-16-31)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 23 |
| 02 | 11 |
| 1936 | 2003 |

எமது குடும்பத் தலைவர்

### வல்லிபுரம் தருமலிங்கம் [செல்லத்துரை]

மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் திகழ்ந்தீர்!
உலகில் புனிதராய் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் நண்பகல் மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- அன்பு மனைவி, மக்கள்
குடும்பத்தினர்.

துவாளி வீதி,
இமையாணன், உடுப்பிட்டி.
தகவல்: இ.சுமன்ராஜ் (பேரன்).
(26175)(26-11-16-31)

J.M.J

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 23 |
| 02 | 11 |
| 1938 | 2003 |


*நெடுந்தீவு ஆயுர்வேத மருந்தக உரிமையாளர்*

### P.V.கிறிஸ்ரோப்பர்

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.
இழப்பின் துயரில் இறைவனை இறைஞ்சும்:
அன்புச் சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புனித யுவானியார் கோவிலடி,
முதலியார் வீதி, நெடுந்தீவு-08.
தகவல்:
(C32207)(34) P.மதுராங்கனி (பேர்த்தி).

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 10 - 05 - 1979
இறப்பு: 24 - 12 - 2000

### கனகலிங்கம் சுரேஸ் (கண்ணன்)

கண்ணா நீ எங்கு சென்றாய்?
தவிக்கின்றதே எங்கள் நெஞ்சம்!
ஒற்றை மகனைப் பெற்றெடுத்தோம்- இறைவா!
அவனையும் பறித்தாயோ?
உயிரைத் தான் எடுத்தாய் - உடலைத்தான்
காண விட்டாயோ?- இறைவா!
பெற்றவர்களையும் உடன்பிறப்புக்களையும்
தவிக்க விட்டு சென்றாயோ கண்ணா?
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்:
தாய், தந்தை, சகோதரிகள்,
மைத்துனர்கள், சகோதரன்,
மருமக்கள், உற்றார், உறவினர்.

*விவேகானந்தா வீதி,*
*மஞ்சத்தடி,*
*இணுவில்.* (26182)


# பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45 வருட பூர்த்தியை முன்னிட்டு 5% - 50% விலைக்கழிவு 15.11.2003 முதல் 31.01.2004 வரை பாடசாலை, பல்கலைக்கழக பாடப்புத்தகங்களுக்கு வழங்கப்படும். இப்பொழுது பாடசாலை தவிர்ந்த ஏனையவர்களுக்கும் டிவான் டின்ஸ் கணக்குக் குற்றிகள் வழங்குகின்றோம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருள்களுக்கான மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர்மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர் மற்றும் 'அறிவு அமுது', 'அந்திவானம்' பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

குறிப்பு:- எம்மிடம் டிவான் டீன் குற்றிகளுக்கு பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"பாடசாலை மாணவர்களின் நன்மைகருதி சனிக்கிழமை முழுநாளும், ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிவரை திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்"

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

021 222 5542

212, கே.கே.எஸ்.வீதி
யாழப்பாணம்.

(C/32199)(35-11-16-31)

# தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் முரண்பாடு கூடாது என்பதில் புலிகள் உறுதி

## புலிகளின் மட்டு. நகர அரசியல் பொறுப்பாளர் தெரிவிப்பு

தமிழ் - முஸ்லிம் மக்கள் தற்போதைய சூழலில் சுகமாக வாழ்ந்து வருகின்றனர். இதைக் குழப்ப சில சக்திகள் முயற்சிக்கின்றன. இரு சமூகங்களுக்குமிடையில் எவ்வித முரண்பாடுகளோ, பிரச்சினைகளோ ஏற்படக் கூடாது என்பதில் புலிகள் மிகவும் உறுதியாக உள்ளனர்.

- இவ்வாறு புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதிராஜா தெரிவித்தார்.

முஸ்லிம் சக எழுச்சிக்குழுவினால கிழக்கில் நடத்தப்பட்ட ஹர்த்தாலின போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காத்தான்குடியில் வைத்து தமிழர்களின் வாகனங்கள் மீது நடத்தப்பட்ட கல்வீச்சையடுத்து ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து தமிழ் - முஸ்லிம் சமூகங்களையும் சேர்ந்த பிரமுகர்கள் கலந்துகொண்ட சமாதானக் கூட்டம் மட்டக்களப்பு அரசினர் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு ஏற்பாடு செய்திருந்தது. இக்கூட்டத்தில் நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதிராஜா, துணைப்பொறுப்பாளர் ஏ.வீரபாண்டியன் ஆகியோரும் மட்டக்களப்பு நகர தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள், காத்தான்குடி வர்த்தக சங்க உறுப்பினர்கள், பள்ளிவாசல் சம்மேளனத்தின் உறுப்பினர்கள், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், ஆட்டோ உரிமையாளர் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

முஸ்லிம்களினால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் பற்றி தமிழ் மக்கள் எதுவுமே அறிந்திருக்கவில்லை. ஹர்த்தால் தொடர்பாக முன்னறிவித்தல் விடுத்திருந்தால் நாமும் ஒத்துழைத்திருப்போம். இதைவிடுத்து ஹர்த்தால் என்ற போர்வையில் தமிழர்களின் வாகனங்கள் மீது காத்தான்குடியில் வைத்து கல்வீச்சு நடத்தப்பட்டமை மிகவும் ஆத்திரமூட்டும் செயலாகும். இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் வாகன உரிமையாளர் சங்கத்தினர் பொறுமையைக் கடைப்பிடித்ததால் பாரிய விளைவுகள் ஏற்படுவது தவிர்க்கப்பட்டது. அத்துடன் விடுதலைப் புலிகளும் தலையிட்டு சமரசம் செய்ததால் அமைதி ஏற்பட்டது.

- இப்படி சந்திப்பில் கலந்துகொண்ட தமிழர் தரப்பிலிருந்து கருத்துத் தெரிவித்தவர்கள் கூறினார்கள். முஸ்லிம்கள் தரப்பில் கருத்துத்தெரிவித்தவர்கள் கூறியதாவது:-

சம்பவம் காத்தான்குடி மக்களை மிகவும் வேதனைக்குள்ளாக்கியது. கல்வீச்சுக்கோ, ஹர்த்தாலுக்கோ எமது மக்கள் பொறுப்பல்ல மூன்றாம் சக்தியே இதற்குப் பொறுப்பு. அவர்களே எமது கிராமத்திற்கு வந்து இவ்வாறான செயல்களில் ஈடுபட்டுள்ளதை நாம் கண்டறிந்துள்ளோம்.

எனினும், காத்தான்குடியில் இடம்பெற்ற கல்வீச்சுக்காக மட்டக்களப்பு நகரில் உள்ள எமது கடைகளைப் பூட்ட வைத்தது எமக்கு கவலை தருகின்றது. நாம் தமிழ் மக்களுடன் இணைந்து வாழவே விரும்புகின்றோம். கல்வீச்சினால் வான்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்குரிய நஷ்ட ஈட்டை உரியவர்களுக்கு வழங்கியுள்ளோம்.

எனவே, இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாதவாறு நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

- இப்படி அவர்கள் கூறினர்.

இக்கூட்டத்தில் தமிழ் பிரமுகர்கள் தரப்பில் வர்த்தக சங்கத்தின் செயலாளர் கே.தியாகராஜா, அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் கே.கணேஸ், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் எஸ்.யோகராஜா, ஆட்டோ சங்கத் தலைவர் எஸ்.தவராஜா ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர். முஸ்லிம்கள் தரப்பில் பிலால் ஹாஜியார், காத்தான்குடி வர்த்தக சங்கத்தின் செயலாளர் கலீலுர் ரகுமான் கவிஞர் சாமுதமுகைதீன் உட்பட பலர் கருத்துத் தெரிவித்தனர்.

இறுதியாக, புலிகளின் நகர அரசியல்துறை பொறுப்பாளர் கருத்துத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:-

"இரு சமூகங்களும் ஒற்றுமையாக வாழவேண்டும். வீணான குழப்பங்களால் எமக்குக் கிடைக்கப்போகும் இலாபம் எதுவுமில்லை. சில தீய சக்திகளின் சதிவலையிலிருந்து முஸ்லிம மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். எங்கோ நடக்கும் சம்பவங்களுக்காக நாம் இங்கு கல்லெறிந்து ஆகப்போவது எதுவுமில்லை. முஸ்லிம் தரப்பில் சிலர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தொடர்ந்து விமர்சித்துக்கொண்டே வருகின்றனர். துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவதும் சுவரொட்டிகள் ஒட்டுவதும் நடக்கின்றன.

எனவே, வணான பிரச்சினைகளில் எவரும் ஈடுபடாமல் எதிர்வரும் காலங்களில் இரு சமூகங்களும் ஒற்றுமையாக வாழ நீங்கள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் - இப்படி அவர் தெரிவித்தார். (ஐ)

# நல்லூரில் வெள்ளியன்று விசேட இசை நிகழ்ச்சி



யாழ்ப்பாணம்,டிசெ.23

மகாவித்துவான் வீரமணி ஐயரின நினைவாக நல்லூரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இசைக்கச்சேரி நிகழ்ச்சி நடைபெறவிருக்கின்றது.

இந்த இசை நிகழ்ச்சியை நடத்துவதற்காக லண்டனில் இருந்துகான இசைவித்தகி ஸ்ரீமதி சிவசக்தி சிவ நேசன் யாழ்ப்பாணம் வருகின்றார்.

லண்டன் பாரதிய வித்தியாபவன் இசை வீணை விரிவுரையாளரும், ஆதரவற்ற சிறார்கள், புற்றுநோயாளா போன்றவர்களுக்கு இசைச் சேவை யால் உதவி வருபவரும் உலகநாடுகள் பலவற்றிலும் இசைக்கச்சேரிகள் நடத்தி ஈழத்துக்கு பெருமை சேர்த்து வருபவருமான இவர், மகாவித்துவான் வீரமணி ஐயரின் முதல் மாணவியாக நடன அரங்கேற்றம் செய்தவர்.

இவரது இசைக்கச்சேரி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் மகாவித்துவான் வீரமணி ஐயருக்கு சமர்ப்பணமாக இடம்பெறும். (ஐ)

# சனசமூக நிலையத்துக்கான நிதியை அதிகரிக்கக்கோரித் தீர்மானம்

சண்டிலிப்பாய்,டிசெ.23

சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஆயிரத்து 600 ரூபா வருடாந்த உதவி நன்கொடை கொடுப்பனவை 3 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- இவ்வாறு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளரை கோரும் தீர்மானம் வலி. தென்மேற்கு பிரதேச சபைப் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சமாசத்தின் தலைவர் என்.ஜோன் சிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட

சனசமூக நிலையங்கள் நடத்தும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மிகவும் குறைந்த வேதனமே மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது.

இவர்களின் வேதனத்தை அதிகரித்து வழங்குவதற்கு உள்ளூராட்சி திணைக்களமும் கல்வித் திணைக்களமும் இணைந்து உதவ வேண்டும் அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனத்தை ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தின் கீழ் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் -

சனமூக நிலையங்கள் தங்கள் தேவைகள் பற்றிய விவரங்களை சமாசத்திற்கு ஊடாக உரிய அதிகாரிகளுக்குச் சமர்பிக்க வேண்டும். இதன் மூலம் சமாசம் இத்தேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றும் - தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(ம-135)

# சீரான போக்குவரத்துக்கு மேலும் 75 பஸ்கள் தேவை

யாழ். குடாநாட்டில் சீரான முறையில் போக்குவரத்துச் சேவையினை நடத்துவதற்கு மேலும் 75 பஸ்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குத் தேவையாக உள்ளன என்று அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச சபையிடம் தற்போது 62 பஸ்கள உள்ளன. எனினும், 51 பஸ்கள் மட்டுமே மக்களின் போக்குவரத்து தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

ஏனைய 11பஸ்களையும் இராணுவம் தமது தேவைக்காகப் பயன்படுத்திவருகின்றது.

சீரான முறையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவதற்கு மொத்தம் 126 பஸ்கள் குடாநாட்டுககுத் தேவை.

இதேவேளை 27 பஸ்கள் பழுதடைந்த நிலையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை டிப்போவில உள்ளன. (ம-7)

# இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வேதனை தருவதாக அமைந்துள்ளது

## தமிழ்க் காங்கிரஸ் வன்னிக் கிளைத் தலைவர் அறிக்கை

வவுனியா,டிசெ.23

விடுதலைப் புலிகள் வன்முறையைக் கைவிட்டு சமாதானப் பேச்சுக்கு முன்வந்துள்ளனர். இந்நிலையில் இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வேதனை தருவதாக அமைந்துள்ளது. ஈழத்தமிழரின் இன்னல்களுக்கு தீர்வு கிட்டும் வகையில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை மாற்றப்படவேண்டும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வன்னி மாவட்டக் கிளையின் தலைவர் கே.ஏ.செந்தில்நாதன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"எமது சொந்த நிலத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தவும், பாதுகாக்கவும் எமக்கு உரிமை உண்டு. அதைத் தடுப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை. முன்னைய ஆட்சியாளர்களும மாறிவரும் அரசியல் வாதிகளும் தான் தமிழர்களை அடக்கி ஒடுக்கி வந்தனர். இதன் பயனாகத்தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை ஏற்பட்டது என்பது இந்தியாவிற்கு நன்கு தெரிந்த விடயம்.

இப்படியிருக்கும் நிலையில் தமிழர்களின் மிகவும் சிறந்த முறையில் பல்வேறு பிரசித்தி பெற்ற மேதைகளால் தயாரிக்கப்பட்ட இடைக்காலத் தீர்வுத் திட்டத்தை இந்தியாவால் ஏற்க முடியாது என்பது வெறும் பகட்டுப் பூச்சே. தமிழர்களின் அனுதாபம் இந்தியாவிற்கு இருக்கும் எனின் இப்படியான அறிக்கைகள் விடுவது ஏமாற்றமே. இந்தியாவின் அனுசரணையுடன் தான் இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது ஈழத் தமிழர்களின் நம்பிக்கை. ஆகவே இந்தியா இப்பிரச்சினையில் தலையிட்டு தனது வெளியுறவுக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி ஈழத் தமிழர்களின துயரைப் போக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# குடாநாட்டு சுகாதார நிலை பின்தங்கியுள்ளது சீர்செய்ய அனைவரும் ஒன்றிணையுங்கள்

## தமிழீழ சுகாதாரப்பணிப்பாளர் அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.23

குடாநாட்டின் சுகாதாரநிலைமை பின்தங்கியுள்ளது. எனவே கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி சுகாதார நிலையை மேம்படுத்த அனைவரும் முன்வரவேண்டும். அன்றேல், பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ந.அருள்.

குடாநாட்டின் சுகாதார நிலைமை தொடர்பாக ஆராய்வதற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேடகலந்துரையாடல் கடந்த செவ்வாயன்று நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகக்கட்டடத்தில் நடைபெற்றது.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், ரி.வி.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் சுகாதார சேவைப்பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் மனித வளம், மற்றும் உபகரண வளம் என்பன அரிதாகவே காணப்படுகின்றன. எமக்கு நிரந்தரமான சமாதானம் கிடைக்கும் வரை இங்கு கிடைக்கும் வளங்களை உச்ச நிலையில பயன்படுத்தவேண்டியது எமது கடமை. இதன்மூலம் சுகாதார நிலமைகளை மேம்படுத்திக் கொள்ளலாம்.

அரச திணைக்கள அதிகாரிகள மீது குற்றம் சுமத்தி எமது பணிகளை ஒத்திவைக்கக்கூடாது. எமது அணுகுமுறையையும், உறவு முறையையும் நல்ல விதமாகப் பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் சுகாதாரத்துறையை விருத்தி செய்யவேண்டும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் சுகாதார விருத்தியைக் கருத்தில் கொண்டு பொது மக்களின் பங்களிப்புடன் சிரமதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் சுற்றுச் சூழலை மேம்படுத்தி தொற்று நோய்களைக் கட்டுப படுத்தக்கூடியதாகவுள்ளது.

அதே நிலையை, குடாநாட்டிலும் ஏற்படுத்த வேண்டும் என்பது எமது விருப்பம். இதனை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். எனினும குறிப்பாக பொது மலசலகூடங்கள், கொல்கலன்கள், பொதுச் சந்தைகள், வடிகால்கள் மற்றும் சுடுகாடுகள், போன்ற பொதுமக்கள கூடும் இடங்களில் தற்போது சுகாதாரச் சீர்கேடு அதிகரித்துக்காணபடுகின்றது. இதனால் மக்கள் பல் வேறு தொற்று நோய்களுக்கும் உள்ளாகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இத்தகைய நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அவற்றுக்குப் பொறுப்பான திணைக்களங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இத்தகைய அதிகாரிகளுக்கு, பொது மக்களும் தம்மாலான பங்களிப்பை வழங்க முனவரவேண்டும் என்றார். (எ-5)

# எம்.ஜி.ஆர். நினைவு தினம் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடு

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வா மக்கள் திலகம் அமரர் எம்.ஜி.ஆரின் 16 ஆவது ஆண்டு நினைவு தினத்தை நாளையும், நாளைமறுதினமும் அனுஷ்டிப்பதற்கு வன்னி மாவட்டத்தில் எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

நாளை கிளிநொச்சி திருநகரில் கிளிநொச்சி மாவட்ட எம்.ஜி.ஆர். முன்னேற்றக்கழக தலைவர் நா.வேலாயுதம் தலைமையில் எம்.ஜி.ஆர். நினைவுதினக் கூட்டம் நடைபெறவுள்ளது. நாளைமறுதினம் வன்னி மாவட்டத் தலைவர் வை.கந்தசாமி தலைமையில் மல்லாவியில் எம்.ஜி.ஆர். நினைவுதினக் கூட்டம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதியன்று யாழ். மாவட்டத்தில் வலிகாமம் எம்.ஜி.ஆர். முன்னேற்றக்கழகத்தினால் வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் நினைவு தினக்கூட்டங்கள் நடைபெறவுள்ளதாக கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

விளையாட்டுப் போட்டிகள், மரம் நடும் நிகழ்வுகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் நினைவஞ்சலிக் கூட்டங்கள் என்பன நடத்தப்படவுள்ளன. (ம-135)



தெல்லிப்பழை பனை தென்னை-வள அபி.கூட்டுறவுச் சங்கத்தினால் இரண்டாயிரம் பனம் விதை நடும் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது தொந்தனை சித்தியன் புளியடிப் பகுதியில் சங்கத் தலைவர் கா.கதிரமலை பனம் விதை நடுகை செய்கிறார். அருகில் சங்கப் பணியாளர்கள், அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர்.

(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்.)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 - 06 - 1927

மறைவு 02 - 01 - 2003

### அமரர் தில்லையம்பலம் நாகலிங்கம்

(அரச கட்டட ஒப்பந்தகாரரும் லிங்கா பில்டேர்ஸ் எஞ்சினியரிங் சேர்விஸ் உரிமையாளரும்)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனம்
ஈண்டு உங்களை நினைந்தே அஞ்சலி செலுத்துகின்றோம்.
*அப்பா உங்கள் ஆத்மாசாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (23.12.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மானிப்பாய் வடகிழக்கு,*
*மானிப்பாய்.*

-அன்பு மனைவி, மக்கள்.
(26195) (26-12-16-32)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 - 12 - 1945

மறைவு 19 - 12 - 1998

அமரர்

### சின்னப்பொடி நல்லதம்பி

(ஆவரங்கால் திரவியம்)

(முன்னாள் அபர்ணா ராண்ஸ்போட் சேவிஸ் உரிமையாளர்)

திதி: 23.12.2003 அமாவாசை

*என்றும் உங்கள் நினைவுகளுடன்:*

*சாந்தா தோட்டம்,*
*ஆவரங்கால், புத்தூர்.*

மனைவி. மக்கள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள். உற்றார். உறவினர்கள்.

(26196)(34-12-16-32)

## கண்ணீர் அஞ்சலி

### முத்துக்குமாரசாமி யோககுமாரன் (கைதடி)

எமது ஆலயத்தின் முன்னாள் நிர்வாகியும், யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் உப அதிபருமான

செல்லப்பா முத்துக்குமாரசாமி அவர்களின் ஏகபுத்திரன்

**மு.யோககுமாரன்** *(முகாமைத்துவக் கணக்காளர், லண்டன்)*

அவர்கள் கடந்த 14.12.2003 அன்று லண்டனில் அகால மரணமானதையிட்டு நாம் மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். அன்னாரது இழப்பு ஈடுசெய்யமுடியாதது. அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அவரது ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல விநாயகரை வேண்டுகின்றோம்.

கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில்
முதலாய கோயில்கள், கைதடி. (26188)(34-12-16-32)

நம்பிக்கைப் பொறுப்பாளர்,
பரிபாலனசபையினர்.

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் ஆதனவரி அறிவித்தல்- 2003

2003ஆம் ஆண்டு நான்காம் கந்தாயத்துக்கான ஆதன வரியை 31.12.2003ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விவரப்படி தெண்டயாற்றுப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் - 15%
ஏனைய காணிகள் - 20%

நிலுவை உட்பட 2003ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகர சபையின் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252, பிரிவு 252இன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்படும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். காசோலையாக செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

*மாநகர சபை,*
*யாழ்ப்பாணம்.* (சி-32210)(12-16-32)

### கருத்தரங்கு

யாழ்கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கான எய்ட்ஸ விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன.

ஆசிரியர்களுக்கு இன்று யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் அதிபர்களுக்கு நாளை புதன்கிழமை யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் - கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன. (ம-3)

### சமஷ்டிக்கு...

(11பக்கத் தொடர்ச்சி)

☆ புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக வரைவை கௌரவமான முறையில் ஏற்று அதனைப் பேச்சுக்கு முன்தள்ள வேண்டும்.

☆ மக்கள் உங்களுக்கு வாக்களித்தது மற்றொரு தேர்தலுக்காக இல்லை.

☆ அதிகாரங்களை சமஷ்டி முறையில் பகிரத் தயாராக வேண்டும ஆகிய விடயங்களை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டங்களை விரைவில் நடத்துவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

என்னைப் பொறுத்தவரையில் மக்கள் இப்போது சமஷ்டிக்குத் தயாராக இருக்கிறார்கள். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள அரசியல்வாதிகள் முன்வரவேண்டும். விடுதலைப் புலிகளும் தனிநாட்டுக் கோரிக்கையிலிருந்து விலகி சமஷ்டிக்குள் வருவதற்கு இணங்கியிருக்கிறார்கள் எனவே, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். முஸ்லிம்களுக்கு பிரச்சினை இருந்தால் அதனை அவர்கள் விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். இனப் பிரச்சினையை பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்றால் இது முடியாதா? 1983 இலிருந்து முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில இனவாத சக்திகள் பாரிய பிளவை ஏற்படுத்திவிட்டன. தமிழர்களின் உரிமைப் போராட்டங்களில் இருந்து முஸ்லிம்களைத் திட்டமிட்டுப் பிரித்து விட்டார்கள். அதன விளைவுதான் இன்றுள்ள நிலை-என்றார்.

அவரது கருத்துக்கள் பெரும்பாலும் சிங்களக் கட்சிகளின் அரசியல நிலைப்பாட்டைச் சாடுவதாகவே இருந்தன. மக்களிடம் நேரடியாகச் சென்று செயற்படுவதன் மூலமும் அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமுமே நிரந்தர சமாதானத்தை நோக்கி நகரமுடியும் என்று அவர் திடமாக நம்புகின்றார். இப்போது இருக்கும் வேகத்தை விடவும் மிகப் பெருமெடுப்பில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார். சமாதானத்தை எதிர்ப்பவர்களின் செயற்பாட்டு வேகத்துடன் ஒப்பிடும்போது ஆதரவான செயற்பாடுகளின் வேகம் மிகக் குறைவானது என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றார்.

இதேவிடயங்களைத்தான் தமிழ்த்தரப்புக்களும் வலியுறுத்தி வருகின்றன என்பதையும் இங்கே குறிப்பிட்டாகவேண்டும்.

எது எப்படி இருந்தாலும் தமிழர்களுக்குச் சமாதானம் என்பது பேர் நிறுத்தப்பட்ட ஒரு சூழல் மட்டும்தான் என்றாகிவிடாது. இதனை தெற்கு அரசியல்வாதிகள் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவேண்டும். ☆

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 04 - 07 - 1936

மறைவு 02 - 01 - 2003

### திருமதி சின்னமணி இராசரத்தினம்

எங்கள் அன்புத் தெய்வமே! தாயே!!
குடும்பத்தலைவியே! நீங்கள் ஆசைப்பட்டபோது
எம்மால் வரமுடியவில்லை. நாங்கள் வந்து
பார்த்தபோது உங்களைக் காணமுடியவில்லை
அம்மா நீங்கள் இருந்த இடமெங்கும் தேடினோம்
அன்னையே! எம்மனம் நெருப்பாகிப் போகுதே!
எம்மைப்பார்த்திட ஒருமுறை வந்துவிட்டுப்போ!
அம்மா! ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*கேணியடி,*
*குப்பிளான்.*
(26203) (32-12-16)

-அன்புக் கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 05 - 12 - 1955

மறைவு 23 - 12 - 2001

### அமரர் நிற்சிங்கம் சிவராசா

*மானிட வாழ்வதனை - நவ*
*மனிதர்கள் மதித்திடும் வண்ணம்*
*வாழ்ந்தே முடித்து மறைந்த காலம்*
*வருடங்கள் இரண்டு இன்று*
*என்றுமே அழியாது நிலைக்கும்*
*எம் மனதில் உங்கள் நினைவு!*
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பலர் புகழ எப்படியும் வாழலாம் - ஆனால்
சிலராவது நல்லவர்கள் புகழ வாழ்ந்து முடிப்பதே சிறப்பு!

*பட்டினத்தார் வளவு,*
*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*

பாச உள்ளங்கள்
மைத்துனர், மருமகன், தங்கை.

(26202)(12-16-32)


கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா

# மாபெரும் மலிவு விற்பனை

இலவசம் - இலவசம் - இலவசம் -

# கபிலா காலணியகம்

நத்தார், புதுவருட பண்டிகைக்காலத்தை முன்னிட்டு

☆பாட்டா Bata

☆றன்பா RANPA

☆டி.எஸ்.ஐ. DSI





மற்றும்

இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துரகப் பாதணிகளும் மாபெரும் மலிவு விற்பனையில்

இப்போது - **கபிலா சூ பலெஸில்**

பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்து வகைகளை கொள்வனவு செய்வோருக்கு, பாடசாலை உபகரணப் பொருள்கள் இலவசம்.

உடன் விரையுங்கள் யாழ்நகரில்!

# கபிலா காலணியகம்

இல.4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/32177) (26-12-16-32)

## முதலாம் வருட விஞ்ஞான பீட மாணவர்களுக்கு

அவசரமானதும், அவசியமானதுமான கலந்துரையாடல் 24.12.2003 (புதன்) காலை 10.00 மணியளவில் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

(26206)(36-11-16)

முதலாம் வருட பிரதிநிதி
விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்.



## ---பாண்விலை மாற்றம்-----

23.12.2003 செவ்வாய்க்கிழமை தொடக்கம் மாவின் விலை அதிகரிப் பினால் 450 கிராம் எடையுள்ள பாண் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை (450 கிறாம்) ரூபா 17/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை நுகர்வோருக்கும் அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகிறோம்.

குறிப்பு - நிறை, தரம், விலை என்பவற்றில் குறைபாடுகள் இருப்பின் எம்மிடம் தொடர்புகொள்ளவும். வியாபாரிகளின் விற்பனைக்கழிவில் எவ்விதமான மாற்றமும் இல்லை என்பதனையும் அறியத்தருகிறோம்.

(36-16-11)

இல.183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

நிர்வாகம்
யாழ்.மாவட்ட.பேக்கரி.
உரிமையாளர் சங்கம்.

(சி-32214)



## பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதி ஆளுகையின் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு ஆணகளிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. வேண்டுகையரின் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களை 2003.12.27 ஆம நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகைதரும்போது கொண்டு வருமாறு வேண்டுகிறோம்.

**பணிநிலை :** வரி அறவீட்டாளர்

**தகைமைகள் :**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை : 18 -40 வரை

நேர்முகத் தேர்வு நடைபெறும்
நாள் : 2003.12.27 (சனி)
நேரம் : காலை 09.00 மணி.
இடம் : வருவாய்ப்பகுதிச் செயலகம், யாழ்.சாலை பனை.

குறிப்பு : நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகை தருதல் வேண்டும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப்பகுதி.

(26200) (22-36-11-16)


## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 09 - 12 - 1925



உதிர்வு 23 - 11 - 2003

### அமரா கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

(இளைப்பாறிய தபாலதிபர், கோண்டாவில் மேற்கு)

*அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.*

இன்று (23. 12. 2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

*சைவப் பாடசாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(26215) (22-11-16-36)

## 3ஆம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 . 05 . 1950



ஆண்டவன் அரவணைப்பில் 25 . 12 . 2000

### திருமதி லிங்கப்பிள்ளை நாகேஸ்வரி

(யோகா)

அன்பின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் தலைவியாய் இருந்து
எம் உயர்வுக்காய் உழைத்து நல்வாழ்வு வாழ
வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் ஆயினும்
உங்கள் நினைவு என்றும் எம் மனதை விட்டகலாதம்மா.

10, சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம். (26218)(11-16-36)

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்.

## கருக்கலைப்பு வழக்கு; வைத்தியருக்கு பிணை

சட்ட விரோதமாகக் கருக்கலைப்புச் செய்து கொண்ட பெண் ஒருவர் மரண மானமை தொடர்பான வழக்கில் சந்தேக நபரான பெண் வைத்தியர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். யாழ் மேல் நீதிமன்றம் இதற்கான பணிபபை மல்லாகம் நீதிமன்றத்திற்கு விடுத் துள்ளது.சுன்னாகம் பகுதியில் கடந்த ஒக்ரோபர் மாதம் கருக்கலைப்பு செய்து கொண்டதால் அதே இடத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாய் ஒருவர் மரண மடைந்தார்.

இது தொடர்பாக பெண் வைத்தியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு யாழ்மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் யாழ் மேல நீதிமன்றத்தில் பிணைமனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பான விசாரணைகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி கே.பி. எஸ் வரத ராசா முன்னிலையில் இடம் பெற்றது.

அப்போது சந்தேகநபரை 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் - மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குள் வசிக்கும் தலா இருநபர்களுடைய தலா ஒருலட்சம் ரூபா ஆள்பிணை யிலும் செல்வதற்கு அனுமதிக்குமாறு மல்லாகம் நீதிமன்றத்திறகு நீதிபதி உத்தரவிட்டார். (ஓ-5)


## தேவை

பெண் காசாளர் தேவை.
G.C.E.A/L வர்த்தகம் படித்த யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்டோருக்கு முன்னுரிமை
2004.01.02 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்
விளம்பர இலக்கம் 2130
மே/பா உதயன். (சி32221)



வந்துவிட்டது

மீண்டும் யாழ்ப்பாணத்தில் இன்று முதல் SKC அன்ரிபங்கஸ் வீடியோ கசெற் விற்பனைக்கு வந்து விட்டது. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

RAJ BROTHERS
ELECTRONICS
NO. 75,New BAZAAR
STREET,Jaffna. (26210)



## ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை

சு.தவசேகர் B.Sc.

➾ 24.12.03 புதன் காலை 10.30 மணி-1.00 மணி வரை. சனி, ஞாயிறு பிரிவுகளில் சேரவிரும்பும் மாணவர்களுக்கு ஆரம்ப வகுப்புகள் கற்பிக்கப்படும். (26210)

டானியல் ஞாபகார்த்த கல்வி நிலையம் ( வெலிங்டன் சந்தி)



## நாகம்ஸ் சுன்னாகம்

சூர்யா, ஜோதிகா மற்றும் பலர் நடித்த
காக்க காக்க (சினிமா)
தினசரி காட்சி : 11.00, 2.00, (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு - இரவு 7மணி
25 ஆம் திகதி முதல் பகவதி



## லிபேட்டி அச்சுவேலி



விஜய், ஜோதிகா, நடித்த
திருமலை
காட்சிநேரம்: 10.30, 2.00, 6.30, (பு.நே.)



## நிரஞ்சனாஸ் சங்கானை

ஸ்ரீகாந், சினேகா நடித்த
பார்த்திபன் கனவு
(சினிமா) காட்சி நேரம்: 11.00, 2.15, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு JACKIE CHAN நடித்த WHO AM I?
இரவு 8.45 இந்து (பு.நே.)



## ராஜா யாழ்ப்பாணம்

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18
(சினிமா)
காட்சிகள்: 10.30,2.30,6.30,9.30 (பு.நே.)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.




# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து சிவானந்தன் (குஞ்சுமணி)

கோயிலாக்கண்டி, கைதடியைச் சேர்ந்த சரவணமுத்து சிவானந்தன் அவர்கள் 21.12.2003 ஞாயிற்றுக்கிழமை கைதடி மேற்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் அருளம்பலம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மங்கையாக்கரசியின் (தேவி) அருமைக் கணவரும் சிவரஞ்சினி, சிவகாஞ்சனா, சிவசுதன்(சுவிஸ்), சிவதர்சினி(சுவிஸ்), சிவதர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மசிறீ, கிருஸ்ணகுமார்(சவூதி), சிவதாஸ்(சுவிஸ்), அபிராமி(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சிவமணி மற்றும் சிவஞானம் (கொழும்பு), சிவபாதசுந்தரம்(கொழும்பு), சிவசோதி(இந்தியா), கார்த்திகேசு (ஜேர்மனி), சிவநேசன்(திருகோணமலை), சிவதேவி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற முத்துக்குமாரசுவாமி மற்றும் இராஜபூவதி (கொழும்பு), புஸ்பராணி(கொழும்பு), காலஞ்சென்ற சோதிஸ்மதி (ஜேர்மனி), கந்தசாமி(இந்தியா), தவக்குமாரி(திருகோணமலை), ஸ்ரீரஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிஷாந்தன், பிறிவினியா, வைஷ்ணவி, யசோதா, தனுஷியா, சிவராம் (சுவிஸ்), சிவலக்ஷன் (சுவிஸ்), சிவலக்ஷனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2003) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி மேற்கு, ஊரியான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய ஊரியான் வீதி,*
*கைதடி மேற்கு,*
*கைதடி.*
(26212)(36-11-16)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## இளையதம்பி இராசையா

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசையா அவர்கள் நேற்று (22.12.2003)திங்கட்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - தங்கமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தம்பிரத்தினம் (ராசு - தம்பி பழக்கடை) அவர்களின் அன்புத் தந்தையாரும் மல்லிகாதேவியின் (குஞ்சு) அன்பு மாமனாரும் தர்மினி, தசன் (லண்டன்), மாலினி, மயூரன் (யா/மகஜனாக்கல்லூரி), கோகுலன் (யா/ யூனியன் கல்லூரி) ஆகியோரின் அருமைப் பேரனும் தங்கம்மா, காலஞ்சென்றவரான சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவரான துரைசிங்கம் மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம மற்றும் சரஸ்வதி, இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் காலஞ் சென்றவர்களான கனகசபை, தம்பிமுத்து, சோமசுந்தரம் ஆகியோரின் சகலனும் மங்கையர்க்கரசி, ஜெயலட்சுமி, மங்களேஸ்வரி, கெங்காதரன், மனோரஞ்ஜி, செந்திவடிவேல், சண்முகவடிவேல், கலாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலகிருஷ்ணன், குமுதினி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2003) செவ்வாய்க் கிழமை பி.ப. 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகேசபண்டிதர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.*
(26222)(36-11-16)

தகவல்:
மனைவி,மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி ஆறுமுகம் பூரணம்

காரைநகர், வலுப்போடையைப் பிறப்பிடமாகவும் இல.158, வவுனியா வெளிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் பூரணம் அவர்கள் நேற்று (22.12.2003) திங்கட்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் அம்பலவாணர்- சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் தாமோதரம்பிள்ளை -வள்ளியம்மையின் அன்பு மருமகளும் ஆறுமுகம் (அரச ஒப்பந்தகாரர்) அவர்களின் அருமை மனைவியும் சண்முகசுந்தரம் சரஸ்வதி (வவுனியா), சுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோர்ஸ், நாவாந்துறை), காலஞ்சென்ற தவபாலன் மற்றும் சிவபாலன், இரத்தினபூவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோகராதேவி, காலஞ்சென்ற தேவராசா மற்றும் கனகசபை, சந்திரமலர், செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபாசினி, வசந்தன், சுகந்தன், கோபாலகிருஷ்ணன், மகேந்திரராசா, வரதராசா, தேவதர்சினி, சுதர்சன், பிரபாலினி, பிறேமலினி, மதிவதனன், கலாயோகேஸ்வரி, சிவனேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2003) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வவுனியா வெளிக குளம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெளிக்குளம்,*
*வவுனியா.* (26214)(36-11-16)

தகவல்:
சுப்பிரமணியம் (மகன்)
மணியம் ஸ்ரோர்ஸ், நாவாந்துறை.

## திருமதி இராமசாமி பாக்கியம் (மாதகல்)

விபுலாநந்தர் வீதி, மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமசாமி பாக்கியம் அவர்கள் நேற்று (22.12.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராமசாமியின் (முன்னாள் ஊழியர், ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு) அன்பு மனைவியும் நாகராஜா (ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு), Dr விக்கினேஸ்வரராஜா (கொழும்பு, பண்டத்தரிப்பு), சிறீஸ்கந்தராஜா, பஞ்சாட்சரதேவி ஆகியோரின் தாயாரும் கந்தசாமி இராசலிங்கம், துரைராஜசிங்கம், காலஞ்சென்ற தவமணிதேவி ஆகியோரின் வளர்ப்புத் தாயாரும் அமிர்தரஞ்சினி, Dr.ஊர்மிலா (கண் வைத்தியசாலை, கொழும்பு), விஜயமாலா, சின்னத்துரை (அம்பாள் கிறேசர், ஊரெழு), மனோன்மணி, இரத்தினமணி, ஜெகதீஸ்வரி, இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சரவணன், முகுந்தன், கார்த்திகா, ஐங்கரன், சிறீரங்கன், காயத்திரி, தர்ஷிகா, கௌதமி, சங்கீர்த்தனன், பிரசாந், கஸ்தூரி, கௌரிசங்கர், பவித்திரன், அபிராமி, பிரசன்னா, சர்மினி, மோகனா, விஷ்ணவன், தனஞ்சேனன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2003) புதன்கிழமை காலை 11மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மாதகல் போதி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விபுலாநந்தர் வீதி,*
*மாதகல்.*
(26223)(36-11-16)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.
மருமக்கள்.

# மயக்கிப் பிடிக்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காக உதய் சதாமைப் பழிவாங்க அலைந்தபோது உதயின் மெய்க் காவலர்களால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவங்களைக் கேள்விப்பட்ட சதாம், அந்தப் பெண்ணின் தந்தையாரை உடன் சந்தித்தார். சுமார் 70 லட்சம் பவுண்ட்ஸ் (சுமார் 100 கோடி ரூபா) நஷ்டஈடாக அவரிடம் கொடுத்த சதாம், "இதற்கு மேலும் நீங்கள் பழிவாங்கத் துடித்தால் உங்களின் அல் ஜபர் பழங்குடி இனத்தையே பூண்டோடு அழிக்க என்னைக் கட்டாயப்படுத்திவிடுவீர்கள்!" - என்று மிரட்டினார் எனவும் கூறப்படுகின்றது.

இந்த நபரே சதாம் ஒளிந்திருந்த இடத்தை குர்திஷ் இன விடுதலைப் படைகளில் ஒன்றான 'குர்திஷ் தேசாபிமான யூனியன்' அமைப்புக்குத் தெரியப்படுத்தினார்.

எனினும், ஒளிந்திருக்கும் சதாமை தாங்கள் சுற்றிவளைத்து உயிருடன் பிடிக்கமுடியாது என்பதையும் -

சதாமை உயிருடன் பிடிக்க முடியாவிட்டால் அவரை வைத்து அமெரிக்கப்படைகளுடன் பேரம் பேச முடியாது என்பதையும் -

உணர்ந்து கொண்ட குர்திஷ் தேசாபிமான யூனியன் தலைவர் ஜலால் தல்பானி எப்படியும் சதாமை உயிருடன் பிடிக்கத் திட்டமிட்டார்.

ஒளிந்திருக்கும் சதாமுக்கு உணவு சமைத்துக் கொடுக்கும் சமையல்காரரை மடக்கிய அவரது குழுவினர், அந்த சமையல்காரர் மூலம் மயக்க மருந்து கலந்த உணவை சதாமுக்கு வழங்கச் செய்தனர்.

பின்னர் மயக்கமுற்ற சதாமைப் பிடித்து, அந்தப் பண்ணை வீட்டுப் பதுங்குகுழிக்குள் அடைத்து வைத்துக்கொண்டு, அமெரிக்கப்படையினருடன் பேரம் பேசினர்.

பேரம் படிந்து வந்ததும், சதாம் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பண்ணை வீட்டுப் பதுங்குகுழி பற்றிய தகவலை அமெரிக்கத் தரப்புக்கு அவர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்கப் படைகள் அங்கு விரைந்துசென்று அந்தப் பதுங்கு குழியின் சிறிய வாசலுக்கு மேல் அடுக்கப்பட்டிருந்த கனமான பொருள்களை அகற்றி 'சீல்' வைத்து மூடப்பட்டிருந்த வாசலைத் திறந்து உள்ளே அரை மயக்க நிலையில் சிறை வைக்கப்பட்டிருந்த சதாமை கைதுசெய்தன.

பதுங்குகுழிக்குள் இறங்கிய முதலாவது அமெரிக்கச் சிப்பாய் சதாமைக் கைதுசெய்ய முயன்றபோது அவர் திமிறிக்கொண்டு அந்தச் சிப்பாயின் முகத்தில் துப்பினார் என்றும் கூறப்படுகிறது.

சதாம் அமெரிக்கப் படைகளிடம் சிக்கியது டிசெம்பர் 13ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு. ஆனால், அதற்குப் பல நாள்களுக்கு முன்னரே அவர் சிறைப்பிடிக்கப்பட்டு விட்டார்.

சதாம் கைது பற்றி அமெரிக்கா அறிவிப்பதற்கு பல மணிநேரத்துக்கு முன்னரே குர்திஷ் இனப்போராளிகள் அந்தக் கைது பற்றிய செய்தியை தொலைக்காட்சிச் சேவை ஒன்றின் மூலம் பகிரங்கப்படுத்திவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சதாமை தங்கள் உளவுப்பிரிவின் சாமர்த்தியம், திறமை ஆகியவை மூலம் பிடித்ததாகவும் -

குர்திஷ் இனப்போராளிகளுடன் இணைந்து தங்கள் படை அணி மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை மூலம் அவர் மடக்கப்பட்டார் எனவும்-

அமெரிக்கப் படைகள் அறிவித்திருந்தமை சுத்தப்பொய் என இப்போது சுட்டிக்காட்டப்படுகிறது.

இதற்கிடையில் -

அமெரிக்கப் பிடியில் உள்ள சதாம் ஹுசைனைச் சந்தித்துவிட்டு வந்த ஈராக்கின் நிர்வாகக் கவுன்ஸிலின் தலைவர் அஹமத் சலாபி அமெரிக்காவின் 'ரைம்ஸ்' இதழுக்கு பேட்டி அளித்துள்ளார்.

"கைது நடவடிக்கையின்போது அமெரிக்க படைச்சிப்பாய் ஒருவரின் முகத்தில் எச்சில் துப்பியுள்ளார் சதாம். கைதுக்குப் பின் நடந்த விசாரணையில் அவர் சரியான முறையில் ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை.

"இப்போதும் அதிபர் நான்தான் என்றும் அதிபருக்கு உரிய மரியாதையுடன் என்னிடம் நீங்கள் பேச்சு நடத்தவேண்டுமே தவிர விசாரணை நடத்தக்கூடாது என்றும் சதாம் கூறினார்.

"அவர் திருந்தியதாகத் தெரியவில்லை"

- இப்படிக் கூறியுள்ளார் அஹமத் சலாபி.

*(மற்றொரு செய்தி மூன்றாம் பக்கத்தில்)*

## மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கங்கள் எதிரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகக் கட்சி ஒழுங்கு விசாரணை நடத்தவேண்டும் எனவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் பிரதேச செயலாளர்களின் சங்கம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாவிடின் அடுத்த நடவடிக்கை குறித்து எதிர்வரும் 31ஆம் திகதி கூடி ஆராய்வதெனவும் பிரதேச செயலாளர்களின் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

இதேசமயம், குடாநாட்டில் பணியாற்றும் பிரதேச செயலாளர்கள் இப்போராட்டம் தொடர்பான தமது முடிவை இன்று தீர்மானிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## குற்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாற்றுவோர் மத்தியில் விரக்தி ஏற்பட்டுள்ளது. இதனால், பொலிஸ் திணைக்களத்தின் திறமையில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. விரக்தியைப் போக்கி நாட்டுக்குச் சேவை செய்யும் வகையில் பதவி உயர்வுகள, இடமாற்றங்கள் தொடர்பாக திட்டங்கள் வகுக்கப்படுவது அவசியம் எனவும் புதிய பொலிஸ்மா அதிபர் கூறினார்.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிதிகள் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் கூடினர்.

விசேட அதிரடிப்படையினராலும் இராணுவத்தினராலும் கண்காணிப்புக் குழுவினிடம் முறைப்பாடு செய்யப்பட்ட - புலிகளால் அமைக்கப்பட்டு வருவதாகக் கூறப்படும் - புல்லுமலைப் பதுங்குகுழி விவகாரம் நேற்றைய கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

பதுங்குகுழி அமைக்கப்படும் பிரதேசம் தமது பகுதியில் அமைந்திருப்பதாக பரஸ்பரம் புலிகளும் இராணுவத்தினரும் உரிமை கோரியதையடுத்து, எல்லை வரையறைகள் தீர்மானிக்கப்படும் வரை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது எனவும் இது குறித்து தமது தலைமைப் பீடத்துடன் தொடர்புகொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என அங்கு கண்காணிப்புக் குழு மாவட்டத் தலைவர் தெரிவித்தார்.

பதுங்குகுழி விவகாரம் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் ஹாக் கெல்சலிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, தாம் இடங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டு நிலைமைகளை தமது தலைமைக் காரியாலயத்துக்கு அறிவித்துள்ளார்கள் எனவும் தலைமைக் காரியலயமே இது தொடர்பாக இறுதி அறிக்கையினை வெளியிடுமெனவும் அவர் கூறினார்.

## சைவச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது சட்டத்தரணி அ. விநாயகமூர்த்தி, இந்து சமயப் பேரவையின் சார்பில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

சிறுவர் இல்லத்தை பராமரித்து வந்த இந்து சமயப் பேரவையிடம் அதனை மீண்டும் கையளிக்கவேண்டும் என அவர் மனுவில் கோரியிருந்தார்.

இதையடுத்து, இந்தச் சிறுவர் இல்லத்தை இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி ச.வினாசித்தம்பியிடம் கையளிக்கும்படி நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

சாவகச்சேரிப் பொலீஸ் அதிகாரி ஆரியபாலாவின் பிரசன்னத்தில் நீதிமன்றப் பதிவாளர் எஸ். விக்கினேஸ்வரமூர்த்தி இல்லத்தின் திறப்புகளை அருட்கவி வினாசித்தம்பியிடம் கையளித்தார்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி. சக்திகிரீவன் சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில் விடுவிக்கப்பட்டார் என்பதும், இல்லத்தின் பணியாளர்கள் மூவர் மீதான வழக்குத் தொடர்வதும் குறிப்பிடத்தக்கவை. (ஓ-3-31-117)

## ஜப்பானின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வர் பதவியை நான் ஏற்றுக்கொண்ட பின்னர் விடுதலைப் புலிகளுடனான முதலாவது சந்திப்பு இதுவாகும்.

சமகால அரசியல் நிலைப்பாடுகள், தெற்கு அரசியல் நெருக்கடியால் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை ஆகியவை தொடர்பாகவும் தமிழர் தாயகப் பகுதிகளில் ஜப்பானின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளை மேலும் விரிவாக்கம் செய்வது குறித்தும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

ஜப்பான் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நல்லுறவைப் பேணும்வகையில் அமைந்த இந்தச் சந்திப்பு ஆரோக்கியமானதாகவும் திருப்திகரமானதாகவும் அமைந்தது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

ஜப்பானின் நிதி உதவியுடன் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுவரும் அரச வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளையும் அவர் பார்வையிட்டார்.




மாபெரும் அதிரடி மலிவு விற்பனை
SALE SALE SALE
உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்திடலாம்
இந்தியா, கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து தருவிக்கப்பட்ட துணி வகைகள்
★ சாறி பிளவுஸ் ★ ரீ சேட்
★ சேட் ★ பஞ்சாபி
போன்றவற்றை குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.
இம்மாதம் 31ஆம் திகதி வரை மட்டுமே!
ஆடைகளின் சங்கமம்
கஸ்தூரியார் வீதி (பாரத் ஸ்ருடியோ முன்பாக யாழ்ப்பாணம்)
மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் கழக வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படுகின்றது
(C/32218) (22-11-16)

SCC விசேட கணனிப்பயிற்சி நெறிகள்
இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited(இந்தியா) நிறுவனத்தினரும், SCC நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP
♦ Fundamentals of Information Technology ♦ Outlook ♦ Word ♦ Excel ♦ MS Money ♦ MS Project ♦ Access ♦ PowerPoint ♦ Binder ♦ MS Schdule ♦ Internet, E-mail — Duration 6 - 7 Months

DIPLOMA IN DESKTOP PUBLISHING
♦ Word ♦ Power Point ♦ Pagemaker ♦ Corel Draw ♦ Photoshop — Duration 4 Months

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
♦ Information Technology ♦ SAD ♦ MIS, DBMS, RDBMS, ORDBMS ♦ Visual C++(System, Bus, Memory, Disk, Network Programming) ♦ Visual Basic (Com & Dcom Level) ♦ Network administration programming System Diagnostic Programming ♦ Protocol Builds - up ♦ Visual Fox Pro ♦ Oracle ♦ Java ♦ Internet, interfacing programming — Duration 12 Months

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
♦ Chip & Card level Trouble shooting ♦ Assembling ♦ Various Mother Board Handling ♦ Upgrading ♦ Fault Finding ♦ Repairing ♦ Servicing ♦ Printer, Scanner & Com device management ♦ Software Installation ♦ Configuring Internet Interfacing & Trouble shooting ♦ Networking & Etc... — Duration 4 - 5 Months

DIPLOMA IN NETWORK ENGINEERING — Duration 4 Months
DIPLOMA IN VISUAL BASIC — Duration 4 Months
DIPLOMA IN VISUAL FOXPRO — Duration 4 Months
DIPLOMA IN AUTOCAD — Duration 4 Months
DIPLOMA IN C++ — Duration 4 - 5 Months

பயிற்சி ஆரம்பம் 02.01.2004
Possible Which are impossible by others
Online Classes

Soft View Computer College
www.scclanka.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170
scclanka@hotmail.com
Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India.
T.P : +91-44-4891286

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
English Class
பிரிவு II (38)
ஆசிரியர்: S.சடகோபன்
ஆரம்பம் : 27.12.2003
மு.ப. 11.30 மணி
75 மாணவர்களுக்கு மேல் எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது.
(C/32296) (22-11-16)

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2006
கணித, உயிரியல் பிரிவு
ஆரம்பம் : 31.12.2003 புதன்
மு.ப. 8.30 மணி.
அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளலாம்.
(26287) (22-11-16)


## மரண அறிவித்தல்

### முருகேசு பரமநாதன்

(ஓய்வுபெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மேற்பார்வையாளர், சாவகச்சேரி)

சாவகச்சேரி, சிவன் கோவிலடியைச் சேர்ந்த முருகேசு பரமநாதன் நேற்று (22.12.2003) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - கௌரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2003) பி.ப. 3 மணியளவில் சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியில் இடம்பெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
சி.பரமநாதன்
(பேறாமகன் - இலங்கை வங்கி)
சி.சந்திரபாலன்
(மைத்துனர் - சா.ப.நோ.கூ.சங்கம்)

(26224) (22-11-16)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.